விலை : 20.00
பக்கங்கள் : இருபது

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

சங்கு 16 வள்ளுவர் ஆண்டு 2046 தை 25 ஞாயிற்றுக்கிழமை (08.02.2015) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 051

ராம்கோ
THE RAMCO CEMENTS LIMITED
RAMCO
SLS 107 தரம் கொண்டதும், உலகதர 14001, 9001 சான்றிதழ் பெற்றுள்ள ஒரே சீமெந்து ராம்கோ

# மீள்குடியேற்றம் குறித்து ஆராய விசேட குழு!

## பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் உரை



(வவுனியா)

அதியுயர் பாதுகாப்பு வலயமாக இராணுவத்தினர் நிலைகொண்டுள்ள காணிகளில், அங்கிருந்து இடம்பெயர்ந்த மக்களை மீள்குடியேற்றுவது தொடர்பாக குழுவொன்றை அமைத்து, உரிய தீர்வு காணப்படும் என்று பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ருவான் விஜேவர்த்தன தெரிவித்தார்.

19 ஆம் பக்கம் பார்க்க...

## இடைக்கால பட்ஜெட் நேற்று நிறைவேறியது

(கொழும்பு)

புதிய அரசாங்கத்தால் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட இடைக்கால வரவு செலவுத் திட்டம் 163 மேலதிக வாக்குகளால் நிறைவேற்றப்பட்டுள்ளது.

வரவு செலவுத் திட்டத்திற்கு சார்பாக 164 வாக்குகளும் எதிராக ஒரு வாக்கும் அளிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. நாடாளுமன்ற

20 ஆம் பக்கம் பார்க்க...

## ஐ.நா ஆணையாளருக்கு அரசு அழைப்பு

(கொழும்பு)

இலங்கைக்கு வருமாறு ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் ஆணையாளர் செய்ட் ராட் அல் ஹுசைனுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான உத்தியோக பூர்வ அழைப்பினை வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர விடுத்துள்ளார்.

இது தொடர்பான உத்தியோகபூர்வ

20 ஆம் பக்கம் பார்க்க...

## பிரதமரின் பதவிக்காலத்தை வரையறுக்க ஆலோசனை!

(கொழும்பு)

ஜனாதிபதியின் பதவிக்காலத்தை போன்று பிரதமரின் பதவிக் காலத்தையும் வரையறுக்குமாறு ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியினால் கோரிக்கை முன்வைக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் காலங்களில் பிரதமர், மாகாண முதலமைச்சர் மற்றும் மத்திய, மாகாண அமைச்சர்கள் பதவி வகிக்கக் கூடிய உச்ச வரம்பு காலங்கள் நிர்ணயிக்கப்பட வேண்டுமென கோரிக்கை விடுக்கப்படவுள்ளது.

அதனடிப்படையில் ஒரு தவணைக்கு ஐந்து ஆண்டுகள் என்ற வகையில் இரண்டு தடவைகள் பிரதமர் மற்றும் முதலமைச்சர்கள் பதவி வகிக்கக கூடிய வகையிலும் அமைச்சரவை அந்தஸ்துடைய அமைச்சர் ஒருவரின பதவிக் காலம் ஒரு தவணைக்கு ஐந்து ஆண்டுகள் என்ற அடிப்படையில் மூன்று தடவைகளுக்கு வரையறுக்கப்பட வேண்டுமென சட்டத் திருத்தம்

19 ஆம் பக்கம் பார்க்க...

## வாடகை வீட்டில் கோத்தபாய

(கொழும்பு)

மகிந்த ராஜபக்ச அரசாங்கத்தில் பாதுகாப்புச் செயலாளராக இருந்த கோத்தபாய ராஜபக்ச தான் வசிப்பதற்காக புதிய வீடு ஒன்றை வாடகைக்கு எடுத்துள்ளதுடன் அதன் மாத வாடகை 12 லட்சம் ரூபாய் என கூறப்படுகிறது.

கோத்தபாய ராஜபக்ச நாடாளுமன்றத்திற்கு அருகில் தனது புதிய வீட்டை தேர்ந்தெடுத்துள்ளார்.

கோட்டை தொகுதியின் ஊடாக

19 ஆம் பக்கம் பார்க்க...

## பாராளுமன்ற கலைப்பை நிறுத்தத் திட்டம்!


(கொழும்பு)

எதிர்வரும் ஏப்ரல் மாதம் பாராளுமன்றத்தை கலைக்க வேண்டாம் என ஸ்ரீ லங்கா சுதந்திர கட்சி உறுப்பினர்கள் சிலர், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் கோரிக்கை விடுக்க தீர்மானித்துள்ளார்கள்.

ஸ்ரீ லங்கா சுதந்திர கட்சியை சிறந்த ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பாக எதிர்வரும் காலத்தில் முன்னோக்கி நகர்த்துவதற்கு எந்த வித தடையும் இல்லை எனவும் தேவை இருப்பின் பிரதமர் பதவியை மாத்திரம் மாற்றலாம் எனவும் குறித்த உறுப்பினர்கள் தெரிவித்துள்ளனர்.

தங்களுக்கு பாராளுமன்ற பெரும்பான்மை இருப்பதனால் பிரதமர் பதவியை ஜனாதிபதியின் விருப்பத்தின் படி தற்போதைய எதிர்க்கட்சி தலைவர்

20 ஆம் பக்கம் பார்க்க...



இரண்டு நாள் விஜயமாக வடபகுதிக்கு வருகை தந்த பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ருவான் விஜேவர்த்தன தலைமையிலான குழுவினர் நேற்று வவுனியாவில் அமைந்துள்ள முப்படைத் தலைமையகத்தில் இடம்பெற்ற இராணுவத்தினரின் நிகழ்வில் கலந்து கொண்டபோது...

## சி.சு.கவுக்கு பாய தயாராகும் விமல் அணி

(கொழும்பு)

மகிந்த ராஜபக்சவை பிரதமர் வேட்பாளராக அறிவிக்கச் செய்து விமல் வீரவன்ஸ உள்ளிட்ட அணி ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியில் இணையத் தயாராகி வருவதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

அரசியலில் அநாதைகளாக மாறி

19 ஆம் பக்கம் பார்க்க...

## ஜனாதிபதியை சந்தித்து பேசினார் பிள்ளையான்

(கொழும்பு)

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கும் கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சரும் தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் கட்சியின் தலைவருமான பிள்ளையான் எனப்படும் சிவநேசத்துரை சந்திரகாந்தனுக்குமிடையிலான சந்திப்பொன்று நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் கொழும்பு - விஜயராம வாசஸ்தலத்தில் இடம்பெற்றுள்ளது.

ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பின் பொதுச் செயலாளர் சுசில் பிரேம ஜயந்தவின் ஏற்பாட்டில் இச்சந்திப்பு இடம்பெற்றதாக அம்பாறை மாவட்டம் திருக்கோவில் பிரதேசத்தில் ஆளும்

19 ஆம் பக்கம் பார்க்க...

## முன்னாள் ஜனாதிபதியின் மீது பொது பல சேனா பாய்ச்சல்

### நாய் சேனா எனக் கூறினாராம்

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க மேற்குலக சக்திகளுடன்இணைந்து தம்மை அழிக்க முயற்சிப்பதாக பொது பல சேனா அமைப்பின் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரர் தெரிவித்துள்ளார்.

சந்திரிகா பண்டாரநாயக்க எம்மை நாய் சேனா என்கிறார். எம்மில் சிலரையே அவர் அப்படி கூறுகிறார் எனவும் ஞானசார தேரர் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இந்த அம்மையார் ஓய்வுபெற வேண்டியவர். அவர் மேற்குலக சக்திகளுடன் இணைந்து அவரது விருப்பு வெறுப்புகளை நிறைவேற்றி வருவதுடன் எம்மை இல்லாமல் செய்ய முயற்சித்து வருகிறார்.

19 ஆம் பக்கம் பார்க்க...

## இலங்கை அரசுக்கு உதவுவதற்கு தயாராக இருக்கிறது அமெரிக்கா

### தேசிய பாதுகாப்பு ஆலோசகர் தெரிவிப்பு



(கொழும்பு)

வெளிப்படையான ஜனநாயக சமூகத்தை உருவாக்க புதிய அரசாங்கத்துக்கு உதவத் தயாராக இருப்பதாக அமெரிக்காவின் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் சூசன் ரைஸ் தெரிவித்துள்ளார்.

2015ஆம் ஆண்டுக்கான தேசிய பாதுகாப்புக் கொள்கை தொடர்பில் அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா நேற்று முன்தினம்வெள்ளிக்கிழமை காலை அறிக்கை ஒன்றை வெளியிட்டிருந்தார்.

இந்த அறிக்கை தொடர்பில் வாஷிங்டனில் உள்ள புரூக்கிங்ஸ் நிறுவகத்தில் அமெரிக்காவின் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் சூசன் ரைஸ் விளக்கம் அளித்த போதே இவ்வாறு குறிப்

19 ஆம் பக்கம் பார்க்க...

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரிசியின் விலையில் மேலும் அதிகரிப்பு?

(கொழும்பு)

வரவு செலவு திட்டத்தில் நெல் விலை கிலோ ஒன்றுக்கு 50 ரூபாயாக அதிகரித்தமையால் அரிசி விலை குறைக்கப்படும் என எதிர்பார்த்த வாடிக்கையாளர்கள் ஏமாற்றப்பட்டுள்ளார்கள்.

எப்படியிருப்பினும் அத்தியாவசிய உணவு பொருட்களின் விலை குறைப்பினால் வாடிக்கையாளர்களுக்கு நிவாரணம் வழங்கப்பட்டுள்ளதாக அரசாங்கம் தெரிவிக்கின்றது.

புதிய விலையின் கீழ் கடைகளில் நாட்டு அரிசி ஒரு கிலோ 85 ரூபாயாகவும், சம்பா அரிசி அதற்கு அதிகமாகவும் விற்பனை செய்யப்படுகின்றது என பொலநறுவை மாவட்ட அரிசி ஆலை உரிமையாளர் சங்கத்தின் செயலாளர் ரொஷான் டி சில்வா தெரிவித்தார்.

தேசிய அரிசி விலை அதிகரிக்கப்பட்டதனால் குறைந்த விலைக்கு வெளிநாட்டு அரிசி கடைகளில் கொள்வனவு செய்யப்படுகின்றது. எதிர்காலத்தில் இவ்வாறு வெளிநாட்டு அரிசி கடைகளுக்கு தொடர்ந்து கொண்டுவரப்பட்டால் நிர்ணயிக்கப்பட்ட விலை மூலம் விவசாயிகளுக்கு கிடைக்கப்பெற்ற நிவாரணம் பறிக்கப்பட வாய்ப்புள்ளதாக அவர் சுட்டிக்காட்டினார்.

இதேவேளை எதிர்வரும் காலங்களில் நிபுணர் குழுவின் பரிந்துரைகளின் கீழ் வெளிநாட்டு அரிசி வகைகளை இறக்குமதி செய்ய தீர்மானித்துள்ளதாக உணவு பாதுகாப்பு அமைச்சர் காமினி ஜயவிக்ரம தெரிவித்துள்ளார்.

நெல்லுக்கு மேலதிகமாக வரவு செலவு திட்டத்தில் உருளைக்கிழங்கு, தேயிலை, இறப்பர், மற்றும் பால் உள்ளிட்ட விவசாயம் மற்றும் கால்நடை உற்பத்திகளுக்கு நிர்ணயிக்கப்பட்ட விலை வழங்கப்பட்டுள்ளது.

மேலும் நிர்ணயிக்கப்பட்ட விலையினை எதிர்வரும் காலங்களில் நடைமுறைப்படுத்துவதற்கு வரவு செலவு திட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்தார். (எ-11)

# கட்சித் தாவல்களைத் தடுக்க விசேட சட்டமூலம் அவசியம்

## அரச தரப்பு ஆலோசனை

(கொழும்பு)

பாராளுமன்ற உறுப்பினர்களின் கட்சித் தாவலை தடுக்கும் நோக்கில் விசேட சட்ட மூலமொன்றை கொண்டு வர புதிய அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

அரசியல் கட்சி அல்லது சுயாதீனக் குழு ஒன்றின் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர், கட்சித் தாவினால் அவரது பாராளுமன்ற உறுப்புரிமையை இரத்து செய்யும் வகையில் சட்டத் திருத்தம் மேற்கொள்ளப்பட உள்ளதாக அரச தரப்பு தகவல் வெளியிட்டுள்ளது.

மேலும் அரசியல் சாசன சட்டத் திருத்தங்களின் போதே இவ்விடயம் உள்ளடக்கப்படவுள்ளதாகவும் குறிப்பிடப்படுகின்றது.

இதேவேளை முப்படைகளின் பிரதானியாக ஜனாதிபதி செயற்படுவார் எனவும், பிரதமரின் ஆலோசனைகளுக்கமைய ஜனாதிபதி செயற்படுவார் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் அமைச்சரவை அமைச்சர்களின் எண்ணிக்கை 30 ஆகவும், பிரதி மற்றும் ராஜாங்க அமைச்சர்களின் உச்ச எண்ணிக்கை 40 ஆகவும் வரையறுக்கப்பட தீர்மானிக்கப்பட்டுள்ளது.

பாராளுமன்றின் பதவிக்காலம் ஐந்து ஆண்டுகளுக்கு வரையறுக்கப்பட உள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளதோடு, 18-ம் திருத்தச் சட்டத்தின் மூலம் இரத்து செய்யப்பட்ட சுயாதீன ஆணைக்குழு மீள நிறுவப்பட உள்ளதாகவும் அரச தரப்பு தெரிவித்துள்ளது. (எ-11)

# இலங்கை விடயத்தில் சாதகமான நகர்வு

## அமெரிக்கா தெரிவிப்பு

(கொழும்பு)


இலங்கை விவகாரத்தில் அமெரிக்கா சில சாதகமான நகர்வுகளை மேற்கொள்ளக் கூடும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

வாஷிங்டனில் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை இடம்பெற்ற செய்தியாளர் மாநாட்டில் இலங்கை வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர அடுத்த வாரம் அமெரிக்காவுக்கு விஜயம் செய்யவுள்ளமை தொடர்பில் கேள்வி எழுப்பப்பட்டிருந்தது.

இந்தக் கேள்விக்கு பதிலளித்த போதே அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் பேச்சாளர் மேரி ஹாப் இது தொடர்பில் சூசகமாக கூறியுள்ளார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது.

இலங்கை வெளிவிவகார அமைச்சர் அடுத்த வாரம் அமெரிக்காவுக்கு விஜயம் செய்வது தொடர்பில் ஏற்பாடு செய்யப்பட்ட நிகழ்ச்சி நிரல் எதுவும் கைவசம் இல்லை.

ஆயினும், இலங்கையில் நீண்டகாலப் பிரச்சினையாக உள்ள நல்லிணக்கம், சட்டத்தின் ஆட்சி மற்றும் பொறுப்புக்கூறல் உள்ளிட்ட விவகாரங்களுக்கு தீர்வைக் காண்



பதற்கு புதிய அரசாங்கம் எடுத்துள்ள நடவடிக்கைகளை நாம் வரவேற்றுள்ளோம்.

இங்கு சில சாதகமான நகர்வுகளை காண முடிகிறது. இது தொடர்பில் அடுத்த வாரம் மேலதிகமான விபரங்களை அறியமுடியும் என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார். (எ-11)

# தட்டுப்பாட்டின்றி சந்தைக்கு அரிசி

(கொழும்பு)

அரிசி தட்டுப்பாடின்றி சந்தைக்கு கொண்டு செல்வதற்கு உணவு பாதுகாப்பு அமைச்சு நடவடிக்கை மேற்கொள்ளவுள்ளது.

தற்போது நெற் களஞ்சியசாலைகளில் காணப்படும் நெல் உட்பட புதிய களஞ்சியசாலைகளில் காணப்படும் நெற் தொகைகளை தேடி பார்க்கவும்,

நெல் விற்பனை சபை அதிகாரிகளை அநுராதபுரம், நிகவெரட்டிய, பொலநறுவை, ஆகிய பகுதிகளில் காணப்படும் களஞ்சிய சாலைகளை பரிசோதிக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக உணவு பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது. (எ-11)

## மஹா கும்பாபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் மத்தி முத்துமாரியம்மன் ஆலய மஹா கும்பாபிஷேகம் இன்று ஞாயிற்றுக்கிழமை ஊரெழு தேவஸ்தான பிரதமகுரு சிவஸ்ரீ கிருஷ்ண சோதீஸ்வர சிவாச்சாரியார் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் அருளாசியினை நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகளும் சின்மய மிசன் ஜாக்கிரத்தை சைதன்யா சுவாமிகளும் வழங்கவுள்ளனர். (இ-3)

# முன்னாள் அமைச்சர்களுக்கு உத்தியோகபூர்வ வாகனம்

(கொழும்பு)

மகிந்த ராஜபக்ஷ அரசில் அங்கம் வகித்த அமைச்சர்கள், பிரதி அமைச்சர்கள் மற்றும் கண்காணிப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு இரண்டு உத்தியோகபூர்வ வாகனங்களை வழங்க புதிய அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

தற்போது எதிர்க்கட்சியில் அங்கம் வகிக்கும் இவர்களுக்கு அந்தந்த அமைச்சுக்களின் ஊடாக வாகனங்கள் வழங்கப்படவுள்ளதுடன் அதற்கான எரிபொருளையும் நாடாளுமன்ற விவகார அமைச்சின் ஊடாக வழங்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் ஜனாதிபதி செயலகத்தினால் வெளியிடப்பட்டுள்ள விசேட சுற்று நிருபத்தில், குறித்த வாகனங்களுக்கு தேவையான சாரதிகளை அமைச்சுக்களினால் வழங்குமாறு பணிக்கப்பட்டுள்ளதுடன், அமைச்சர்களின் வாகன சாரதிகளுக்கு வழங்கப்படும் சம்பளம் மற்றும் மேலதிக நேரக் கொடுப்பனவும் இந்த சாரதிகளுக்கும் வழங்கப்படவுள்ளது. இந்த தீர்மானம் தொடர்பில் சம்பந்தப்பட்ட முன்னாள அமைச்சர்கள், பிரதி அமைச்சர்கள் மற்றும் கண்காணிப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு ஜனாதிபதி செயலகம் தொலைநகல் மூலம் அறிவித்துள்ளது. (எ-11)


## வீட்டுடன் காணி விற்பனைக்கு

கிளிநொச்சி திருவையாறு 2-ம் பகுதியில் வீட்டுடன் காணி விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு:0773277282

(சி-049)

சேவை முகவர்

## காணிகள், வீடு விற்பனைக்கு

செட்டித்தெரு, பலாலி வீதி, உரும்பிராய், திருநெல்வேலி, பிறவுண்றோட், மணல்தறைலேன், 5 1/2, 6, 2, 1 1/4, 3 பரப்பு அளவுகளில்.

சுந்தரம்:-0774819801

(9462)




## வேலையாள் தேவை

யாழ்ப்பாணத்தில் இயங்கி வரும் பிரபல சைவ உணவகத்திற்கு வேலையாள் தேவை.

தொடர்புகளுக்கு:0215685516, 0772247505

(9460)

## தவறிவிட்டது

எமது ஸ்தாபனத்தின் திடீர் பரிசோதகரின் பாவனையில் இருந்த 71-ம் இலக்க (இல.7000-7100 வரை) அபராத பற்றுச்சீட்டு புத்தகம் பஸ் நிலையத்தில் தவறவிடப்பட்டுள்ளது. இதனை கண்டெடுத்தவர்கள் இல.191, 1-ம் குறுக்குத்தெரு, வேம்படிச் சந்தி யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள எமது காரி [illegible]

(9461)

## பணிநிலை வெற்றிடம்

பிரபல தனியார் நிறுவனமொன்றுக்கு எந்த விதமான வயதுக்கட்டுப்பாடுகளுமின்றி வேலையாட்கள் தேவை. தங்களின் தகைமைச் சான்றுகளுடன் கீழேயுள்ள தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும். (குறுஞ் செய்தி SMS) வெற்றிடமாகவுள்ள தொழில் நிலைகள்

தொலைபேசி இயக்குநர்
கணனி இயக்குநர்
குழாய்பொருத்துநர்
} இரு விடயங்களும் தெரிந்திருத்தல் நன்று

சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி இல:-0041779246314

(சி-038)

## தொடர்ந்தும் உங்கள் சேவையில்....

உலகெங்குமுள்ள உறவுகளுக்கு உடனுக்குடன்

- கடிதங்கள்
- அன்பளிப்பு பொருட்கள்
- உடுபுடவைகள்
- CD, VCD க்கள் அனுப்பவும் உலகெங்குமுள்ள உறவுகளிடமிருந்து

Western Union மூலம் அனுப்பிய பணத்தை ஒரு சில நிமிடங்களில் பெற்றுக் கொள்ளவும். தொலைபேசி அட்டைகளைப் பெற்றுக்கொள்ளவும்.

ஸ்ரீமுருகன் தொலைத் தொடர்பகம்
303, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.
T.P. No :-0212225392

WESTERN UNION MONEY TRANSFER

(சி-036)


## கண்ணீர் அஞ்சலி

### மாசிலாமணி ஸ்ரீகுமார் (சீமான்)



ஆனையிறவு உப்பளத்தடியைப்பிறப்பிடமாகவும், கோணாவில் கிழக்கு காந்தி கிராமத்தை வசிப்பிடமாகவும் கொண்ட மாசிலாமணி ஸ்ரீகுமார் (சீமான்) 06.02.2015 அன்று அகால மரணமடைந்துள்ளார். அவரது இழப்பால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

தகவல்:-கிளிநொச்சி பொதுச் சந்தை மீன் வர்த்தகர்கள்.

(சி-050)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மு.கா.மக்கள் ஆணைக்கு முரணாக ஆட்சியமைப்பு!

## சம்பந்தன் குற்றச்சாட்டு

(கொழும்பு)

2012ஆம் ஆண்டு நடந்த கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் மக்கள் அளித்த ஆணைக்கு முரணாகவே கிழக்கு மாகாணசபையில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், ஆட்சியை அமைத்துள்ளதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான இரா.சம்பந்தன் தெரிவித்துள்ளார்.

முஸ்லிம் காங்கிரஸின் புதிய ஆட்சிய மைப்பானது நடந்து முடிந்த ஜனாதிபதித் தேர்தலில் வழங்கப்பட்ட மக்களின் ஆணைக்கும் முரணானது என்றும் சம்பந்தன் தெரிவித்தார்.

கிழக்கு மாகாணசபைத் தேர்தலின்போது, அரசாங்கக் கூட்டமைப்பிலிருந்து வெளியேறி தனித்துப் போட்டியிட்டிருந்த முஸ்லிம் காங்கிரசானது அரசாங்கத்துக்கு எதிராக பிரசாரம் செய்திருந்ததையும் சுட்டிக்காட்டினார்.

அவ்வாறே, இம்முறை ஜனாதிபதித் தேர்தலிலும் அரசாங்கக் கூட்டணியிலிருந்து வெளியேறியிருந்த முஸ்லிம் காங்கிரஸ், எதிரணியின் வேட்பாளரையே ஆதரித்தது என்றும் இந்த சூழ்நிலையில், மீண்டும் அரசாங்கக் கூட்டணியுடன் சேர்ந்து கிழக்கில் ஆட்சியமைத்துள்ளதன் மூலம் முஸ்லிம் காங்கிரஸ் கட்சியானது மக்கள் ஆணைக்கு முரணாக செயற்படுகின்றது என அவர் மேலும் தெரிவித்தார். (இ-5)

# அராலி மத்தி ஸ்ரீ முருகன் சனசமூக நிலைய புதிய நூல் நிலைய திறப்பு விழா - 08.02.2015

### வாழ்த்துச் செய்தி



அராலி மத்தி ஸ்ரீமுருகன் சனசமூக நிலையம் பவளவிழா காண்பதையிட்டு மிக்க மகிழ்ச்சி அடைகின்றேன். அராலி மக்களின் கலைப் பண்பாட்டு அம்சங்களின் வளர்ச்சியில் இந்நிலையம் பாரிய பங்களிப்புச் செய்து வருகின்றமை பாராட்டத்தக்கது. இந்நிலையத்தின் வளர்ச்சியில் நூலகம் திறப்பது ஒரு மைல்கல்லாகும்.

சமூகத்தின் தேவையின் நோக்கத்தை நோக்கி கால மாற்றங்களுக்கு ஏற்ப தன்னை வளப்படுத்தி வருவதும் இந்நிலையத்தின் சிறப்பம்சமாகும். தமிழ் மக்கள் அல்லற்பட்ட நேரங்களிளெல்லாம் இந்நிலைய இளைஞர்கள் தம்மை முழுமையாக அர்ப்பணித்து மக்களின் துயர் துடைத்தவர்கள் என்று கூறுவதில் பெருமை அடைகின்றேன். அராலி மக்கள் தனித்துவமானவர்கள், பண்பட்டவர்கள், பண்பாளர்கள். அவர்கள் தொடர்ந்து ஸ்ரீமுருகன் சனசமூக நிலையத்தை யாழ். மாவட்டத் திலேயே குறிப்பிடத்தக்க நிலையமாக வளர்த்தெடுப்பதோடு தமிழ் உணர்வும் நாட்டுப் பற்றும் கொண்டவர்களாக வாழ்வார்கள் என்பதில் நாம் உறுதியாக நிற்கின்றோம். நிலையத்தின் வளம் பெருக என் ஆசீர்வாதம் என்றும் நிலைத்திருக்கும் என்று கூறி நூல் நிலையத் திறப்பு விழா சிறப்பாக அமைய எனது வாழ்த்துக்கள்.

திருமதி விஜயகலா மகேஸ்வரன்
பெண்கள் விவகார பிரதி அமைச்சர்.



**நூல் நிலையத்திற்கு புத்தகங்கள் கோரப்படுகின்றன. புத்தகங்களைத் தர விரும்புவோர் 077 743 2188, 077 400 4712 எனும் இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளவும்.**

### வாழ்த்துச் செய்தி



என்று மொழி உருவானதோ அன்றே வாசிப்புப் பழக்கமும் மனிதர்களிடையே உருவானது. இந்தப் பூவுலகில் தோன்றிய அறிஞர்கள், மாமேதைகள் அனைவருமே வாசிப்புப் பழக்கம் மூலம் உருவானவர்களே.

ஆனால் இன்றைய நவீன உலகின் இலத்திரனியல் வளர்ச்சி மனிதனின் வாசிப்புப் பழக்கத்தை மாற்றியுள்ளது. இணையத்தளம், சமூக வலைத்தளங்கள் மற்றும் கைத்தொலைபேசி பாவனைகள் மனிதனின் வாசிப்புப் பழக்கத்தை மாற்றியுள்ளன.

''ஒரு நூலகம் திறக்கப்படும் போது, ஒரு சிறைச்சாலை மூடப்படுகின்றது'' என்றார் பேரறிஞர் விக்டர் ஹியுகோ. புத்தகங்கள் என்பது காரிருளில் செல்பவர்களுக்கு பேரொளியாகவும் வழிதவறியவர்களுக்கு ஒரு வழிகாட்டியாகவும் திகழும். அராலி மத்தி ஸ்ரீ முருகன் சனசமூக நிலையமானது தனது 75 வருடகால சேவையில் மிக வளமான சமூகம் ஒன்று உருவாக காரணமாக இருந்திருக்கும் என்பதில் ஐயமில்லை. இச்சனசமூக நிலையத்தில் ஓர் நூலகம் அமைக்கப்பட்டுள்ளதையிட்டு பெருமகிழ்ச்சி அடைகின்றேன். ''வாசிப்பதால் மனிதன் பூரணமடைகின்றான்.'' என்ற கூற்றுக்கமைய ஒரு பூரணமான சமுதாயத்தை உருவாக்கும் இவர்களின் பணி சிறக்க வாழ்த்துகின்றேன்.

ஆ.நடராஜன்
இந்திய துணைத்தூதுவர், யாழ்ப்பாணம்.

### அராலி ஸ்ரீ முருகன் சனசமூக நிலைய வரலாறு

யாழ். மாவட்டத்திலுள்ள வலி.மேற்கு பிரதேச சபைக்கு உட்பட்ட மருதமும் நெய்தலும் கொஞ்சி விளையாடும் அராலிக்கிராமத்தின் நடு நாயகமாக விளங்கும் அராலி மத்தி பகுதியில் எமது சனசமூக நிலையம் அமைந்துள்ளது.

இச்சனசமூக நிலையத்திற்குரிய காணியை கனகசபை அவர்களால் அன்பளிப்பு செய்ய 1940 ஆம் ஆண்டில் அன்றைய இளைஞர்கள், பெரியோர்கள், நலன்விரும்பிகள் அரிவு வெட்டல் போன்ற சிரமதானப் பணிமூலம் கட்டட வேலைகள் யாவும் தங்களால் செய்து முடித்து ஓர் சிறிய சனசமூக நிலையத்தை கட்டுவித்தனர். அதன் நிறம் சிவப்பும் மஞ்சளும். அதன் கொடி சேவல் ஆகவும் தெரிவு செய்தனர். கிராமத்தின் வளர்ச்சியில் சனசமூக நிலைய கலை, கலாசார பண்பாட்டு விழுமியங்கள், அரசியல் பொருளாதாரம், ஆன்மீக கல்வி மரபு ரீதியான அடையாளங்கள் போன்றவற்றை பாதுகாப்பதிலும் வளர்ப்பதிலும் இந்நிலையம் பெரும் பங்காற்றியுள்ளது.

இந்நிலையம் தொடர்ந்தும் தொய்வடையாமல் இருக்க வே.பரமநாதன் அவர்களின் பரந்த மனப்பாங்கும் அவருடைய சொந்த நிதியும் சனசமூக நிலையத்தை வளர்ச்சியடைய செய்வதில் பெரும் பங்காற்றியது.

ஒவ்வொரு வருடமும் புதுவருடத்தினத்தன்று கலை, கலாசார தமிழர் பண்பாட்டு விழுமியங்களை காத்துச் செல்லக் கூடிய விதத்தில் விழாக்களை நடத்தியும் தொடர்ந்து 1990 களில் அக்கால இளைஞர்களின் முயற்சியினால் 3 நாட்கள் தொடர்ந்து பொன் விழா நடத்தினர். பின் தொடர்ந்து விழாக்கள் நடத்தி வந்தனர்.

இதன்பின் இந்நிலையம் தமக்கென முதலுதவி சிகிச்சை நிலையம், நூலகம், முருகன் பாலர் பாடசாலை போன்றன அமைத்து நடத்தி வந்தனர். நூலகத்தில் இரவல் கொடுக்கும் பகுதி, வாசகர் பகுதி என இரு பிரிவுகளாக பல வாசகர்களை கொண்டு நடத்தி மக்களிடம் சிறந்த மதிப்பை பெற்ற நிலையமாக காணப்பட்டது.

இப்படி நடந்து கொண்டு இருக்கையில் நாட்டின் அசாதாரண சூழ்நிலை காரணமாக சகல நூல்கள், தளபாடங்கள் அனைத்தும் களவாடப்பட்டு நிர்க்கதியாக நிலையம் காணப்பட்டது.

தொடர்ந்து 2000 ஆம் ஆண்டில் அன்றைய இளைஞர்களால் வைர விழா சிறப்பாக கொண்டாடப்பட்டது. தொடர்ந்து புதுவருட தினத்தன்று விழாக்கள் நடத்தப்பட்டு வந்தன. பின் தொடர்ந்து நிலையம் புனர்நிர்மாணம் செய்யப்பட்டு மேல்மாடி அமைக்கும் வகையில் அமைக்கப்பட்டது.

''வாசிப்பு ஒரு மனிதனை பூரணமாக்குகின்றது'' என்ற முதுமொழிக்கு அமைவாக மேல் மாடியில் நூல் நிலையம் அமைக்கப்பட்டு பொது நிறுவனங்கள், பொது அமைப்புக்களிடம் நூல்கள் பெற்று இன்று ஞாயிற்றுக்கிழமை (08.02.2015) சுபநேரத்தில் திறக்கப்படவுள்ளது.

தற்போதைய தலைவர் பொன்விழா நாயகன் ச.மோகனதாசன் தலைமையில் புதுவருட தினத்தன்று பவளவிழா நடைபெறவுள்ளது. சனசமூக நிலையத்தின் பெருமையை எடுத்துக் காட்டுகின்றது.

இ.வசந்தன் (போஷகர்)

# இராசி பலன்

08.02.2015
(தை 25, ஞாயிற்றுக்கிழமை)
சூரிய உதயம் காலை 6.29 மணிக்கு,
சதுர்த்தி பிற்பகல் 1.22 மணிவரை
உத்திரம் காலை 7.13 மணிவரை
இராகுகாலம் 5.05-6.35 மணிவரை
சுபநேரம் 9.35-11.05 மணிவரை

வளவன்

**மீனம்** – மனதிற்கினிய சம்பவங்கள் நடைபெறலாம், குடும்பத்தில் அந்நியோன்னியம் அதிகரிக்கும், பெரிய மனிதர்களின் ஒத்தாசைகள் கிடைக்கப் பெறுவீர்கள்,

**மேடம்** – தேகாரோக்கியத்தில் தெளிவு பிறக்கும் நாள், நல்லவர்களின் அறிவுரையும் ஆதரவும் கிடைக்கும், கடன்களை வசூலிக்க முயற்சி எடுப்பீர்கள், கௌரவமான நாள்.

**இடபம்** – பிள்ளைகளின் நீண்ட நாளைய கோரிக்கையை நிறைவேற்றுவீர்கள்,வழிபாட்டால் மகத்தும் காண வேண்டிய நாள், வியாபாரத்தை விரிவுபடுத்தும் எண்ணம் உருவாகும்,

**மிதுனம்** – தொலைபேசித்தகவலால் சந்தோசங்கள் அதிகரிக்கும், பொதுக் காரியங்களில் நாட்டம் செல்லும், வருமானம் திருப்திதரும், மகிழ்ச்சி தரும் பயணங்கள் இடம் பெறலாம்,

**கும்பம்** – கடவுளை வழிபட்டு காரியம் தொடங்க வேண்டிய நாள், குடும்பத்தில் சிறுசிறு மனக் கசப்புகள் ஏற்படலாம், விரயங்கள் கூடும் நாள், ஆரோக்கியத்தில் கவனம் தேவை,

**கடகம்** – கனிவாகப் பேசி காரியங்களை சாதித்துக் கொள்வீர்கள், வியாபார விருத்திக்கு வித்திடுவீர்கள், உறவினர்களின் உதவிகள் கிடைக்கலாம், விருந்துகளில் கலந்து மகிழும் நாள்,

**மகரம்** – நல்லவர்களின் தொடர்புகள் அதிகரிக்கும், மருத்துவ செலவுகள் குறைந்து மனநிம்மதியைக் கொடுக்கும், புதிய திட்டங்களில் முன்னேற்றம் காண்பீர்கள்,

**சிம்மம்** – எண்ணங்கள் எளிதில் நிறைவேறும் நாள், பேச்சில் இனிமை தென்படும், சான்றோர்களின் சந்திப்பு இடம் பெறலாம், எடுத்த காரியங்களை முடிப்பதில் அதிக பிரயாசை காட்டுவீர்கள்,

**தனுசு** – தொழிலை விருத்தி செய்யும் எண்ணம் மேலோங்கும் நாள், வீட்டை அழகுபடுத்தம் எண்ணம் உருவாகும்,உற்சாகமான நாள், போசன சுகமுண்டு,

**விருச்சிகம்** – மகிழ்ச்சி தரும் செய்திகள் வந்து சேரலாம், சகோதர ஒற்றுமை மேலோங்கும், விருந்தினர் வருகையுண்டு, கொடுக்கல்-வாங்கல்கள் ஒழுங்காகும்,

**துலாம்** – மாற்றங்களால் ஏற்றம் பெறுவீர்கள், வேலைச்சுமைகூடும் நாள், கூட்டாளிகளிடம் கொஞ்சம் கூடுதல் கவனம் தேவை, புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள்,

**கன்னி** – வழிபாட்டால் பெருமை காண வேண்டிய நாள், குடும்பத்தில் ஏற்பட்ட கருத்து வேறுபாடுகள் அகலும், தேவையற்ற சந்தேகங்களை தவிர்ப்பது நல்லது, போசன சுக முண்டு,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தமிழக தொழிற்பயிற்சி நிலையங்களில்

# அகதிகளுக்கு இடஒதுக்கீடு!

(சென்னை)

**இலங்கையில் இடம்பெற்ற உள்நாட்டுப் போர் காரணமாக இந்தியாவுக்கு அகதிகளாகச் சென்று தமிழ் நாட்டில் அகதி முகாம்களில் வாழ்ந்து வருகின்றனர். இந்நிலையில் அரசினர் தொழிற்பயிற்சி நிலையங்களில் இலங்கை தமிழ் அகதி மாணவ, மாணவியர்கள் அனுமதிக்கு 5 சதவீத இடஒதுக்கீடு செய்து தமிழக அரசு உத்தரவிட்டுள்ளது.**

இதுகுறித்து தஞ்சாவூர் மாவட்ட ஆட்சியர் என்.சுப்பையன் வெளியிட்ட அறிக்கையில்,

தமிழக வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை இயக்குநர், அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் சேர்க்கைக்கு உள்ள நடைமுறைகளை, அரசு தொழிற்பயிற்சி நிலையங்களில் இலங்கை தமிழ் அகதி மாணவர்களின் சேர்க்கையிலும் பின்பற்றலாம் என அரசுக்கு பரிந்துரைத்துள்ளார்.

தமிழகப் பாடசாலைகளில் படித்த இலங்கை அகதிகளுடைய குழந்தைகளை பொதுப்பட்டியலில், தரவரிசையின் அடிப்படையில், அரசு தொழிற்பயிற்சி நிலையங்களில் சேர்த்துக் கொள்ளலாம் என்றும் பரிந்துரைத்துள்ளார்.

ஈழ அகதிகள் மறுவாழ்வு நிறுவனத்தின் கோரிக்கையினையும், வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை இயக்குநரின் பரிந்துரையினையும் அரசு பரிசீலித்து, அரசு தொழிற்பயிற்சி நிலையங்களில் இனிவரும் கல்வியாண்டுகளில் இலங்கை தமிழ் அகதி மாணவர்களை, தமிழக பாடசாலைகளில் படித்த இலங்கை அகதிகளுடைய குழந்தைகளை பொதுப்பட்டியல் தரவரிசையின் அடிப்படையில் அரசுத் தொழிற்பயிற்சி நிலையங்களில் சேர்த்துக் கொள்ளலாம். இதற்காக 5 சதவீத இடஒதுக்கீடு அளிக்கப்படுகிறது என அரசு உத்தரவிட்டுள்ளது.

மேலும் சம்பந்தப்பட்ட தலைமையிடத்து வட்டாட்சியரிடமிருந்து பெறப்பட்ட ஆளறிச்சான்று, அகதிகள் முகாம்களில் பதிவு செய்யப் பெறாதவர்கள் அவர்களுடைய விசா மற்றும் கடவுச்சீட்டுடன் விண்ணப்பிக்க வேண்டும் என்ற நிபந்தனையுடன், இலங்கை அகதி மாணவர்களை பொதுப்பட்டியலில் தரவரிசை அடிப்படையில் அரசு தொழிற்பயிற்சி நிலையங்களில் சேர்த்துக்கொள்ளலாம் என்னும் நடைமுறைகளை பின்பற்றி சேர்க்கைக்கு அனுமதிக்கலாம் என்றும் அரசு மேலும் உத்தரவிட்டுள்ளது. (இ-5)

## பேசும் படம் - 20

இடம்: வல்லைப் பாலத்தில்



ஓட்டோ கடலிலும் ஓடும் போல...

குறிப்பு : அன்பு வாசகர்களே! நீங்களும் பேசும் படங்களை உங்கள் பெயர், முகவரி, சம்பவம் நிகழ்ந்த இடம் என்பவற்றுடன் அனுப்பி வைக்க முடியும்.

மின்னஞ்சல் : valampuriijaffna@gmail.com

facebook: www.facebook.com/valam.puri.1

தபால் முகவரி :ஆசிரியர், பேசும் படம்,வலம்புரி,
இல.03, 2-ம் ஒழுங்கை,
பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.

அல்லது நேரில்.

அனுப்பியவர்:
மகாலிங்கம்
கரணவாய்

## யாழ்.ஐக்கிய கிராம உத்தியோகத்தர் சங்கம் 9 கோரிக்கைகளுடன் ஜனாதிபதிக்கு கடிதம்

ஸ்ரீலங்கா ஐக்கிய கிராம உத்தியோகத்தர் சங்கத்தின் யாழ்.மாவட்ட கிளை 9 கோரிக்கைகள் அடங்கிய கடிதம் ஒன்றை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு அனுப்பி வைத்துள்ளது.

அச் சங்கம் அனுப்பி வைத்துள்ள அக்கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

கடந்த 3 தசாப்தங்களாக இந்த நாட்டில் இடம்பெற்ற போரில் பல்வேறு துன்பங்களையும் அச்சுறுத்தல்களையும் எதிர்கொண்டு இந்நாட்டில் ஒருமைப்பாட்டிற்காகச் செயற்பட்டவர்கள் என்பதை தாங்கள் நன்கறிவீர்கள். எமது மாவட்டத்தில் கிராம அலுவலர்கள் அரசின் பிரதிநிதிகளாகச் செயற்பட்ட போது தமது உயிர்களைக் கூட இழக்க வேண்டியேற்பட்டதனை இந்த இடத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறோம். சிலர் நாட்டை விட்டு தப்பி ஓட வேண்டிய நிலையும் ஏற்பட்டது. இத்தகைய துன்பங்களை இலங்கைத் திருநாட்டில் வேறு எந்தப் பிரதேசத்தில் உள்ளவர்களும் அனுபவித்திருக்கமாட்டார்கள் என்பதனை அனைவரும் அறிவர்.இத்தகைய துன்ப சாகரங்களுக்குள் செயற்பட்ட எமக்கு தாங்கள் தாராளமாக உதவி செய்வீர்கள் என்ற நம்பிக்கை எமக்குண்டு.

நீண்ட காலமாகக் கடமையாற்றி கிராம உத்தியோகத்தர்கள் அதிசிறப்புத் தரத்திற்கு பதவி உயர்வுக்கான போட்டிப் பரீட்சையில், சித்தியடைந்த 20ற்கு மேற்பட்டோர் யாழ. மாவட்டத்தில் காணப்பட்டபோதும் ஒரே ஒருவருக்கு மட்டும் அதிசிறப்புத் தர நியமனம் வழங்கப்பட்டுள்ளது. ஆயினும் பல வெற்றிடங்கள் காணப்படுவதனால் போட்டிப் பரீட்சையில் சித்தியடைந்தவர்களுக்கு நியமனம் வழங்கி குறித்த வெற்றிடங்களை நிரப்புவதற்கு ஆவன செய்யுமாறு பணிவுடன் கேட்டுக்கொள்கிறோம்.

கிராம உத்தியோகத்தர்களாக கடமையாற்றுபவர்களில் பலர் பட்டதாரிகளாகவும் அதற்குக் கூடிய தரத்திலுமான கல்வித் தகைமைகளை உடையவர்களாகவும் காணப்படுவதனால் அத்தகையோருக்கு பட்டதாரிகளுக்கான சம்பள அளவுத்திட்டத்தினுள் உள்வாங்கி நிவாரணம் அளிப்பதுடன் பதவி உயர்வுகளில் முன்னுரிமையும் வழங்குமாறும் கேட்டுக்கொள்கிறோம்.

கிராம உத்தியோகத்தர்களுக்கு கடந்த ஆட்சிக்காலத்தில் கட்டாயப்படுத்தி மொபிற்றல் தொலைபேசி சிம் அட்டைகள் வழங்கப்பட்டுள்ளது. இத்தொலைபேசி அட்டைகளை எமது கிராம உத்தியோகத்தர்கள் உபயோகிக்காது வாடகைப் பணத்தையும் செலுத்தி வருவதாக எம்மிடம் முறையிடுகின்றனர். எத்தனையோ கஷடங்களுக்கு மத்தியில் செயற்படும் இவர்களின் அனாவசியச் செலவினை தங்களை மீளளிப்புச் செய்துதவுமாறு கேட்டுக் கொள்வதோடு போதுமான தொலைபேசிப் பாவனைக்கான கொடுப்பனவையும் வழங்கி உதவுமாறும் கோருகின்றோம்

கிராம உத்தியோகத்தர் அலுவலகங்களுக்கு வழங்கப்படும் வாடகைப்பணத்தைக் கொண்டு ஓர் அலுவலகத்தை வாடகைக்கு பெற முடியாதுள்ளதனால் மேலதிகப் பணத்தை தமது சொந்தப் பணத்திலிருந்து கொடுத்தே அலுவலகத்தினை நடத்த வேண்டியுள்ளது. இதனைக் கருத்திற்கொண்டு நிரந்தர அலுலகத்தினை அமைக்க அல்லது உரிய வாடகைப்பணத்தை செலுத்த உதவுமாறு கேட்டுக்கொள்கிறோம்.இது தேசிய ரீதியிலும் பெரும் பிரச்சனையாகவே காணப்படுகின்றது.

இருபத்தைந்து வருட சேவையை பூர்த்தி செய்த தரம் ஒன்றில் 10 வருட சேவையை நிறைவு செய்த அலவலர்களுக்கு அதிசிறப்புத் தரத்திற்கு பதவி உயர்வு வழங்க நடவடிக்கை மேற்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

கிராம அலுவலர்களின் செயற்பாடுகளை விரைந்து நிறைவேற்றும் வகையில் கணணியுடன் சேர்ந்த ஏனைய தொடர்பாடல் வசதிகளை இலவசமாக வழங்கி உதவுமாறும் கேட்டுக்கொள்வதுடன் அதற்கேற்ப பயிற்சி நெறியினை விரைந்து வழங்க நடவடிக்கை மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

2006ஆம் ஆண்டு வர்த்தமானி அறிவித்தலின் படி நியமனம் வழங்கப்பட்ட கிராம அலுவர்களுக்கு தரம் 2இற்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டு நேர்முகப்பரீட்சையும் நடத்தப்பட்ட பின்னர் தரம் 3இற்கு என நிரந்தர நியமனம் வழங்கப்பட்டதால் இவர்களில் பல கிராம அலுவலர்கள் மனமுடைந்துள்ளனர். இதனைச சீர் செய்வதற்கேற்ற நடவடிக்கைகளை எடுக்குமாறும் கேட்டுக்கொள்கிறோம்.

அண்மையில் மோட்டார் சைக்கிள் வழங்கப்பட்டவர்களுக்கான முழுமையான காப்புறுதி அல்லாமல் 3ஆம் தரக் காப்புறுதி பெறுவதற்கு வழிவகை செய்யுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

இவ்வாறு அக்கடிதத்தில் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (இ-3-5)

## ஜி.ஜி.பொன்னம்பலத்தின் சிரார்த்த தினம் நாளை

தமிழர்களின் தனிப்பெரும் தலைவரான ஜி.ஜி.பொன்னம்பலத்தின் 38 ஆவது சிரார்த்ததினமான நாளை 9 ஆம் திகதி திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு குருநகரில் அமைந்துள்ள அமரர் ஜி.ஜி.பொன்னம்பலத்தின் சிலைக்கு மலர்மாலை அணிவித்து கௌரவிக்கும் நிகழ்வு அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ் கட்சித்தலைவர் ஆர்.இ.ஆனந்தராஜா தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம், தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் பொதுச்செயலாளரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான செல்வராஜா கஜேந்திரன் மற்றும் சட்டத்தரணி வி.மணிவண்ணன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (இ-3-134)

## தலைவராக பரமேஸ்வரன்

வடகடல் நிறுவனத்தின் தலைவராக தியாகராசா பரமேஸ்வரன் நியமிக்கப்பட்டுள்ளார்.

மீள்குடியேற்ற மற்றும் இந்து சமய விவகார அமைச்சின் கீழ் உள்ள வடகடல் நிறுவனத்தின் தலைவராக கடந்த வியாழக்கிழமை அவர் பொறுப்பேற்றுக்கொண்டார்.

மீள்குடியேற்ற மற்றும் இந்து சமய விவகார அமைச்சர் டி.எம்.சுவாமிநாதன் முன்னிலையில் பொறுப்பேற்றுக்கொண்ட தியாகராசா பரமேஸ்வரன் முன்னாள் இந்து கலாசார அலுவல்கள் அமைச்சர் தியாகராசா மகேஸ்வரனின் சகோதரர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-5)

## மெய்வல்லுநர் போட்டி

யாழ்.நெல்லியடி மத்திய கல்லூரியின் வருடாந்த மெய்வல்லுநர் போட்டி இன்று 8 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு கல்லூரி மைதானத்தில் கல்லூரி அதிபர் எஸ்.சேதுராஜா தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வரணி பிரதேச வைத்தியசாலை வைத்திய அதிகாரி டாக்டர் விமலநாதன் கலந்து கொள்ளவுள்ளார். (இ-3-5)

## குமார் குணரத்தினத்திற்காக பிரான்சில் எதிர்ப்பு போராட்டம்

(கொழும்பு)

சோசலிஷ கட்சித் தலைவர் குமார் குணரத்தினம் இலங்கையில் அரசியல் செய்வதற்கு உரிமை வழங்குமாறு கோரி பிரான்ஸ் மக்கள் எதிர்ப்பு ஆர்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். இந்த ஆர்ப்பாட்டம் நேற்று முன்தினம் மேற்கொள்ளப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை குறித்த எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் நேற்று இத்தாலி, மிலானோ, லண்டன் நாடுகளிலும் இடம்பெற்றுள்ளன.

எதிர்ப்பு போராட்டத்தில் தங்களது வேண்டுகோள் அடங்கிய கடிதம் ஒன்றினை பிரான்ஸியரினால் இலங்கைத் தூதருக்கு ஒப்படைப்பதற்கா[illegible] ளப்படுகின்ற[illegible] (இ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை சுதந்திரதின கொண்டாட்டத்தில் கூட்டமைப்பு பங்கேற்றிருக்க வேண்டும்!

(யாழ்ப்பாணம்)

இலங்கையின் சுதந்திரதின கொண்டாட்டத்தை பகிஷ்கரிக்காது கூட்டமைப்பில் உள்ள அனைவரும் பங்குபற்றி இருக்க வேண்டும் என்று தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் நாயகம் வீ.ஆனந்தசங்கரி தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

நல்லாட்சியைக் கட்டி எழுப்புவதற்காக புதிய அரசாங்கம் 100 நாட்களை அவகாசமாகக்கோரி உள்ளது. மக்கள் எதிர்பார்க்கும் நல்லாட்சியை அமைப்பதற்காக 50 நாட்களாவது அரசாங்கத்துடன் சேர்ந்து செயற்பட வேண்டும்.

நல்லெண்ணத்தை உருவாக்குவதற்காக பல கட்சிகள் தமது தனிப்பட்ட கொள்கைகளை கைவிட்டு ஓரணியில் இணைந்துள்ளன. தமிழ்த் தேசியக்கூட்டமைப்பில் உள்ள சிலர் நல்லாட்சியைக் குழப்புவதற்கும் பிரச்சினையை உருவாக்கவும் முயற்சி செய்கின்றனர்.

சுதந்திர தின வைபவத்தில் கலந்து கொண்டதன் மூலம் நல்லெண்ணம் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. சில விடயங்களை சாணக்கியத்துடன் கையாள வேண்டும். கூட்டமைப்பில் உள்ள சிலர் மக்கள் மத்தியில் குழப்பத்தை ஏற்படுத்துகிறார்கள். அவர்கள அமைதியாக இருப்பது நன்மையளிக்கும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-5)



# யாழ்.வடமராட்சி கடலில் நேற்று இந்திய மீனவர்கள் அத்துமீறல்

## ஒரு கோடி ரூபா பெறுமதியான வலைகள் சேதம்

(கரணவாய்)

**வடமராட்சி கடல் பகுதிக்குள் இந்திய மீனவர்கள் நேற்று அதிகாலை அத்துமீறி ரோலர் இழுவை மடித் தொழிலில் ஈடுபட்டமையால் வடமராட்சி மீனவர்களின் சுமார் ஒரு கோடி ரூபா பெறுமதியான வலைகள் முற்றாக அழிக்கப்பட்டுள்ளதாக பாதிக்கப்பட்ட மீனவர்கள் வடக்கு மாகாண சபையின் உறுப்பினர் சந்திரலிங்கம் சுகிர்தனிடம் முறையிட்டுள்ளனர்.**

உடனடியாக பருத்தித்துறை முனைப்பகுதிக் கடற்கரைக்கு விஜயம் செய்த மாகாண சபையின் உறுப்பினர் சுகிர்தன், பாதிக்கப்பட்ட மீனவர்களுடன் கலந்துரையாடி மீனவர்களுக்கு ஏற்பட்ட பாதிப்புத்தொடர்பில் யாழ். இந்திய உதவித் தூதுவர் எஸ்.டி. மூர்த்தியிடம் முறையிட்டுள்ளார்.

இம் முறைப்பாட்டை ஏற்றுக் கொண்ட யாழ். இந்திய உதவித் தூதுவர் மூர்த்தி, பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு இழப்பீடு வழங்கப்படும் என உறுதியளித்துள்ளார்.

இவ்விடயம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது,

மைத்திரி தலைமையிலான புதிய அரசாங்கம் ஆட்சி அமைத்ததன் பின்னர் இந்திய மீனவர்கள் வடகடல் பகுதிக்குள் தங்கு தடையின்றி அத்துமீறி வடபுல மீனவர்களின் கடற்றொழில் உபகரணங்களைச் சேதப்படுத்தி வருகின்றனர்.

இதன் வெளிப்பாடாக நேற்று அதிகாலை வடகடல் பிரதேசத்திற்குள் அத்துமீறிய இந்திய மீனவர்கள் இக்கடலில் தற்பொழுது காணப்படுகின்ற சங்கு, இறால், அட்டை போன்ற வளங்களைச் சுரண்டும் நோக்குடன் றோலர் இழுவை மடித் தொழில் முறையில் ஈடுபட்டுள்ளனர்.

இதனால் வடமாரட்சியில் மயிலிட்டி தொடக்கம் சுண்டிக்குளம் வரையிலான சுமார் 80 கிலோ மீற்றர் கரையோரப் பிரதேசத்தில் வசிக்கின்ற மீனவர்களின் வலைகள் சேதமாக்கப்பட்டு வடமராட்சி மீனவர்களுக்கு மட்டும் சுமார் ஒரு கோடி ரூபா பெறுமதியான வலைகள் சேதமாக்கப்பட்டுள்ளன.

இந்திய மீனவர்கள் நேற்று 6 கிலோமீற்றர் இலங்கை கடல் மைலுக்குள் அத்து மீறியுள்ளதாகவும் மீனவர்கள் தெரிவிக்கின்றனர். இவ் விடயம் தொடர்பாக வடக்கு மாகாண கடற்படைக் கட்டளைத் தளபதிக்கும் அறிவித்துள்ளனர். (இ-3-60)

# வடக்கு மாகாணசபை உறுப்பினர் விந்தனின் வீட்டின் மீது தாக்குதல்

வடக்கு மாகாண சபையின் ஆளுங்கட்சி உறுப்பினர் விந்தன் கனகரத்தினத்தின் வீட்டின் மீது இனந்தெரியாத நபர்கள் கல்வீசித்தாக்குதல் மேற்கொண்டுள்ளனர்.

இத்தாக்குதல்சம்பவம் அரியாலை பூம்புகாரிலுள்ள அவருடைய வீட்டில் நேற்று முன்தினம் இரவு 10 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

கல்வீச்சுதொடர்பில்யாழ்.பொலிஸ் நிலையத்தில் மாகாண சபை உறுப்பினர் முறைப்பாடொன்றினையும் பதிவு செய்துள்ளார்.

நேற்று முன்தினம் இரவு வானொன்றில் வந்த இனந்தெரியாத குழுவினர் விந்தனின் வீட்டின் முன்பு நின்றுள்ளனர்.

பின்னர் அவருடைய வீட்டின் பிரதான வாயிற்கதவினை பலமாக உதைந்து வெளியே வருமாறு குரல் எழுப்பியுள்ளனர்.

அச்சம் காரணமாக வெளியே வராமல் வீட்டின் உள்ளேயே இருந்து சம்பவங்களினை அவதானித்துக் கொண்டிருந்த போது திடீரென வீட்டின் மீது கல்வீசித் தாக்குதல் மேற்கொண்டுள்ளனர்.

இதனையடுத்து அக்குழுவினர் அங்கிருந்துசென்றபின்னர் வெளியே வந்தபோது தீவுப்பகுதிக்கு வந்தால் வெட்டுவோம் என வீட்டிற்கு சிறிது தூரத்திற்கு அப்பால் நின்ற அக்குழு மீண்டும் கத்திவிட்டு சென்றுள்ளது.

இச்சம்பவம் தொடர்பில் யாழ். பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதோடு வடக்கு மாகாண சபைத்தேர்தலின் போது தன்மீது தாக்குதல் நடத்தியவர்களே இவ்வாறு வீட்டின் மீது தாக்குதல் நடத்தியுள்ளனர் என விந்தன் தனது முறைப்பாட்டில் தெரிவித்துள்ளார். (இ-4)




# புதிய கலைக்கதிர் சஞ்சிகை வெளியீடு

காலையடி பண்டத்தரிப்பில் அமைந்துள்ள மறுமலர்ச்சி மன்றத்தின் மாணவர் மன்றத்தினரால் முற்று முழுதாக மாணவர்களின் ஆக்கங்களைக் கொண்டதாய் வெளியிடப்படுகின்ற புதிய காலைக கதிர் சஞ்சிகையின் ஐந்தாவது இதழின் வெளியீட்டு நிகழ்வு இனறு ஞாயிற்றுக்கிழமை பி.ப 4 மணியளவில் மறுமலர்ச்சி மன்றத்தின் புதிய உள்ளக கலை அரங்கில் இடம்பெறவுள்ளது.

ஜெ.நிவர்சன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் வாழ்த்துரையை சாவகச்சேரி கல்வி வலயத்தின் பிரதிக் கல்விப் பணிப்பாளர் சு.சுந்தரசிவமும் அறிமுக உரையை இலக்கிய ஆய்வாளர் ச.சத்தியத்தேவனும் கருத்துரைகளை செல்வி சோ.சாயினி, செல்வி சி.விதுர்ஷா ஆகியோரும், ஏற்புரையை இச் சஞ்சிகையின் ஆசிரியர் செல்வி நே.சிந்துஜாவும் ஆற்றவுள்ளனர். இச் சஞ்சிகையை திருமதி கோமளா யோகேஸ்வரன் வெளியிட்டு வைப்பார். இலக்கிய ஆர்வலர்கள், மாணவர்கள் அனைவரையும் இந் நிகழ்வில் கலந்துகொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றார்கள் மறுமலர்ச்சி மன்றத்தினர். (இ-5)

சுதந்திரதின விவகாரம்,

# ஆசிரியர் சங்கம் கடும் கண்டனம்!

(யாழ்ப்பாணம்)

இலங்கையின் 67 ஆவது சுதந்திர தின நிகழ்வில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் ஆகியோர் கலந்து கொண்டமைக்கு யாழ்.பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் கண்டனம் தெரிவித்துள்ளது.

இவ்வாறு கண்டனம் தெரிவித்து சம்பந்தன், சுமந்திரன் ஆகியோருக்கு விரிவுரையாளர்கள் கையொப்பமிட்டு கடிதமொன்றினையும் பல்கலை. ஆசிரியர் சங்கம் அனுப்பியுள்ளது.

யாழ்.பல்கலைக்கழகத்தில் நேற்று முன்தினம் முற்பகல் 11 மணியளவில் நடைபெற்ற ஆசிரியர் சங்கத்தின் ஒன்றுகூடலின் போதே மேற்கண்ட தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

இலங்கையின் சுதந்திர தினத்தில் 1972 ஆம் ஆண்டு முதல் தமிழ் மக்களின் பிரதிநிதிகள் எவரும் கலந்து கொள்ளாமல் புறக்கணித்து வந்த நிலையில் 67 ஆவது சுதந்திர தின நிகழ்வில் சம்பந்தனும் சுமந்திரனும் கலந்து கொண்டிருந்தனர் என அவர் சுட்டிக்காட்டினார்.

மேலும் இவ்விருவரும் கலந்து கொண்டமைக்கு தமிழ் அமைப்புக்கள் உட்பட புலம்பெயர் அமைப்புக்களும் கடும் எதிர்ப்பு தெரிவித்து வருகின்றனர்.

இந் நிலையிலேயே யாழ்.பல்கலைக்கழக ஆசிரியர் சங்கமும் இருவரும் சுதந்திரதின நிகழ்வில் கலந்து கொண்டமைக்கு கடும் கண்டனத்தை தெரிவித்து கடிதமும் அனுப்பவுள்ளது.

நேற்று முன்தினம் நடைபெற்ற சங்கத்தின் கூட்டத்தில் சுமார் ஒரு மணித்தியாலம் வரையில் விவாதிக்கப்பட்டு இம்முடிபு எடுக்கப்பட்டுள்ளது. (இ-4)

## மாதாந்த கொடுப்பனவுக்கு பதிவுகளை மேற்கொள்ளவும்

கரவெட்டிப் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட அங்கவீனமுற்றவர்களுக்குமாதாந்தம் 3 ஆயிரம்ரூபாவழங்குவதற்கான பதிவுகளை கரவெட்டிப் பிரதேச செயலக சமூகசேவைப் பிரிவினர் மேற்கொண்டுள்ளனர்.

எனவே அங்கவீனமுற்றவர்கள் தமது பதிவுகளை மேற்கொள்வதற்கு தத்தமது கிராம அலுவலகர்களுடன் தொடர்பு கொண்டு குறித்த திகதிகளில் கரவெட்டிப் பிரதேச சமூக சேவைப் பிரிவுடன் தொடர்புகொள்ளுமாறு பிரதேச செயலர் எஸ்.சிவசிறி அறிவித்துள்ளார். (இ-3-60)

## தியாகராஜ சுவாமிகளின் 168-வது ஆராதனை விழா

இந்தியத் துணைத்தூதரகத்தின் அனுசரணையுடன் வட இலங்கைச் சங்கீத சபை நடத்தும் சற்குரு ஸ்ரீ தியாகராஜ சுவாமிகளின் 168 ஆவது ஆராதனை விழா எதிர்வரும் 21 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9 மணி தொடக்கம் பி.ப 4 மணி வரை வட இலங்கைச் சங்கீத சபை, மருதனார் மடத்தில் அமைந்துள்ள தற்பரானந்தன் கலையரங்கில் நடைபெறவுள்ளது.

இவ் விழாவில் கலை ஆர்வலர்கள் அனைவரையும் கலந்து சிறப்பிக்குமாறு வட இலங்கை சங்கீத சபைத் தலைவர் கேட்டுள்ளார். (இ-3)

# நெல்லியடி கூட்டுறவுச் சங்க பொதுச்சபைக் கூட்டம் இன்று

(யாழ்ப்பாணம்)

கட்டைவேலி நெல்லியடி பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் 23 கிளைகளின் கிளைக்குழு உறுப்பினர் தெரிவுக்கான கிளைப் பொதுச் சபைக் கூட்டம் இன்று முற்பகல் 10 மணிக்கு நடைபெறவுள்ளது.

அல்வாய்தெற்கு A, அல்வாய்தெற்கு மத்தி, கட்டைவேலி, கல்வத்தை, கனுவில், கரவெட்டி மேற்கு, கரவெட்டி கிழக்கு, கோவிற்கடவை, நெல்லியடி, நுகவில், சந்திரா, சண்டில், துன்னாலை தெற்கு, கிளான், வதிரி, யார்க்கரு, துன்னாலை வடக்கு A, துன்னாலை வடக்குB, அல்வாய் தெற்குB, கிழவி தோட்டம், இராச கிராமம், வதிரி வடக்கு, அல்லையம்பதி ஆகிய கிளைகளுக்கான பொதுச் சபைக் கூட்டங்களே இன்று நடைபெறவுள்ளன.

சகல கிளைகளினதும் பொதுச் சபை உறுப்பினர்களுக்கு தபால் மூலம் கூட்ட அழைப்பிதழ் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் அழைப்பிதழ் கிடைக்கப் பெறாதவிடத்து பொது அறிவித்தலாக ஏற்று அந்தந்தப் பகுதிகளில் நடைபெறவுள்ள கூட்டத்திற்குச் சமுகமளிக்குமாறும் யாழ். கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் அறிவித்துள்ளார். (இ-3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுதந்திரதின நிகழ்வில் பங்கேற்றமையினை அர்த்தமற்ற வகையில் விமர்சிக்கக்கூடாது

## சம்பந்தனுக்கு வக்காளத்து வாங்கும் சிவில் அமைப்பு

**சிரேஷ்ட அரசியல்வாதியாகவும் இராஜதந்திர அரசியல் வல்லுநராகவும் விளங்கும் இரா.சம்பந்தன் சுதந்திர தின வைபவத்தில் கலந்து கொண்டதை அர்த்தமற்ற முறையில் விமர்சிப்பதை தமிழ் தலைவர்கள் தவிர்த்துக்கொள்ள வேண்டும் என்று மூதூர் சிவில் அமைப்பினரும் திருமலை மாவட்ட சமூக அமைப்பினரும் கூட்டாக கோரிக்கை விடுத்துள்ளனர்.**

இது குறித்து மூதூர் சிவில் அமைப்பின் தலைவரும் சமூக சேவையாளருமான கந்தையா நடேசபிள்ளை கையெழுத்திட்டு வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இவ்வாறு வலியுறுத்தப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது,

தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் மற்றும் பாராளுமன்ற உறுப்பினரான எம்.ஏ. சுமந்திரன் ஆகியோர் 67 ஆவது சுதந்திர தின நிகழ்வில் கலந்து கொண்டது தொடர்பான அதிருப்தியை இலங்கை தமிழரசுக்கட்சியின் மூத்த துணைத்தலைவர் பேராசிரியர் சிற்றம்பலம் வெளியிட்டுள்ளார். அவர் கட்சியின் மத்திய குழு உடனடியாக கூட்டப்பட்டு சுதந்திர தின நிகழ்வில் கலந்து கொண்டமை தொடர்பில் விவாதிக்க வேண்டுமென ஊடகங்களுக்கு தெரிவித்துள்ளார்.

கட்சியின் கூட்டு பொறுப்பை மீறி சிற்றம்பலம் கருத்து தெரிவித்திருப்பது அரசியல் நாகரிகமற்ற செயலாகும். புதிய அரசின் 100நாட்கள் வேலைத்திட்டத்தில் தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வு குறித்து ஏதும் தெரிவிக்கப்படாத சூழலில் இவ்விருவரும் சுதந்திர தின நிகழ்வில் கலந்து கொண்டது தவறு என சிற்றம்பலம் கூறியிருக்கும் விமர்சனமானது அர்த்தமற்றது. தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தனை பொறுத்தவரை தீர்க்கமான ஞானமும் சாணக்கியமும் நிறைந்த ஒருவர் என்பதை எல்லோரும் ஏற்றுக்கொள்ள வேண்டும். அவரது தீர்மானங்களும் முடிவுகளும் பிரித்தானிய யாப்பில் கூறப்பட்டது போல் மன்னன் தவறு செய்வதில்லையென்பதற்கு ஒத்ததாகும்.

புதிய ஆட்சி மாற்றத்தின் மூலகர்த்தாவாக வளங்கியவர் சம்பந்தன். அவர் மீது வடக்கு, கிழக்கு மக்கள் கொண்டிருக்கின்ற கனதியான நம்பிக்கைகள் எப்போதும் வீண்போக முடியாது. ஆட்சி மாற்றத்திற்காக தமிழ் மக்களை வாக்களிக்க சொன்னபோது காட்டாத எதிர்ப்பை சிற்றம்பலம் போன்ற சிலர் ஏன் இப்போது காட்ட முற்படுகின்றார்கள் என்பது புரியாத விடயமாகவேயுள்ளது. விடுதலை போராட்ட காலத்திலும் இத்தகைய அர்த்த மற்ற விமர்சனாங்களாலேயே எல்லாவற்றையும் இழந்து நடுத்தெருவுக்கு வந்தோம். பாராளுமன்ற நடைமுறைகளையும் அரசியல்யாப்பு சத்தியங்களையும் பின்பற்றும் நாம் ஏன் சுதந்திர தின நிகழ்வில் கலந்து கொள்ள கூடாது என்ற விடயம் புரியாத புதிராக வேயுள்ளது.

66 வருட அரசியல் போக்கில் எதிர்ப்பு அரசியல்பால் கொண்ட நம்பிக்கைகள் எமக்கு எந்த பயனையும் தேடித்தரவில்லை. அமைச்சுப்பதவிகளுக்கோ அதிகாரங்களுக்கோ சம்பந்தன் ஆசைப்பட்டவர் கிடையாது. அவர் எச்சந்தர்ப்பத்திலும் தமிழினத்தை காட்டிக்கொடுத்த புல்லுருவியும் அல்ல. தமிழ் மக்களின் நீடித்த நிலையான தீர்வுக்காக தியாகங்களை புரிந்து வரும் சம்பந்தனை கொச்சைப்படுத்துவதை தவிர்த்துக்கொள்ள வேண்டுமென அவ்வறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது. (இ-5)

**உடனடியான தேவை**

கிளிநொச்சி , முல்லைத்தீவு, நெடுங்கேணி பிரதேசங்களில் பாதுகாப்பு உத்தியோகத்தர்கள், மேசன், கம்பிபாஸ், செலடின் பாஸ், தச்சு, கையுதவியாளர்கள் தேவை. விசேடம்- கொழும்பில் உள்ள ஏற்றுமதி ஆடைத் தொழிற்சாலைக்கு 18-35 வயது பெண்கள் உடன் தேவை.

தொடர்புகளுக்கு:- 077 111 6770,
(சி-045) 077 683 8231

**வாடகைக்கு**

அலுவலகம்/ வீட்டுப்பாவனைக்கு கட்டடம் யாழ். பிரதான வீதிக்கண்மையில் வாடகைக்குண்டு. முற்பணம் தேவை.

தொடர்பு:- 071 440 8794,
(9446) 071 479 7357

**வேலையாட்கள் தேவை**

அரிசி ஆலையில் வேலை செய்வதற்கு ஆண், பெண் தேவை. நேரில் வரவும்.

இராசம் அரிசி ஆலை,
மின்சார நிலைய வீதி,
(9453) சுன்னாகம்.

**அன்பு வாசகர்களே!**

**உங்கள் வலம்புரியில் வாசகர்களின் அபிமானத்திற்குரிய**

**வலம்புரி வாரமலர் சங்குநாதம்**

**15.02.2015 (ஞாயிற்றுக்கிழமை)**
**முதல் ஒவ்வொரு ஞாயிறும்**
**கவிதை, சினிமா, விதுரனின்**
**அதிரடி அரசியல் கட்டுரைகள்,**
**ஆலடி மாநாடு,**
**வியாசர் பதில்கள், சிறுவர் பகுதி...**
**என இன்னும் இன்னும் பல**
**சுவாரஸ்யமான விடயங்களுடன்**
**வெளிவரும்.**
**வாசிக்கத் தவறாதீர்கள்.**

இவர்களுக்கு மணமகள் தேவை — கல்யாண மாலை — இவர்களுக்கு மணமகன் தேவை

| மணமகள் தேவை | மணமகன் தேவை |
| --- | --- |
| பிறப்பு: 1980 இந்து<br>நட்சத்திரம்: புனர்பூசம்<br>கி.பா: 49 செவ் 2 இல்<br>உயரம்: 5'9"<br>தகைமை/தொழில்: MSC/ NGO<br>தொ.இ: B/206 | பிறப்பு: 1978 இந்து<br>நட்சத்திரம்: திருவாதிரை<br>கி.பா: 27 சூரிசெவ் 1 இல்<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்: DIP IN AGRICULTURE/ அரச தொழில்<br>தொ.இ: G/376 |
| பிறப்பு: 1984 இந்து<br>நட்சத்திரம்: பரணி<br>கி.பா: 47<br>உயரம்: 5'<br>தகைமை/தொழில்: A/L/ தனியார் தொழில்<br>தொ.இ: B/207 | பிறப்பு: 1988 இந்து<br>நட்சத்திரம்: அச்சுவினி<br>கி.பா:50 செவ் 7 இல்<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்: GAQ/ தனியார் தொழில்<br>தொ.இ: G/382 |
| பிறப்பு: 1977 இந்து<br>நட்சத்திரம்: உத்தராடம்<br>கி.பா: 44 செவ் 7 இல்<br>உயரம்: 5'8".<br>தகைமை/தொழில்: வைத்தியர் (கனடா)<br>தொ.இ: B/208 | பிறப்பு: 1972 இந்து<br>நட்சத்திரம்: உத்தரம்<br>கி.பா: 20<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்: MBBS/ வைத்தியர்<br>தொ.இ: G/383 |
| பிறப்பு: 1981 இந்து<br>நட்சத்திரம்: அச்சுவினி<br>கி.பா: 15 செவ் 2 இல்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: A/L (டுபாய்)<br>தொ.இ: B/214 | பிறப்பு: 1987 இந்து<br>நட்சத்திரம்: அவிட்டம்<br>கி.பா: 4 1/4<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்: A/L/ தனியார் தொழில்<br>தொ.இ: G/389 |

**கல்யாண மாலை**
**(சர்வதேச திருமண சேவை)**
**இல. 144, பிறவுண் வீதி,**
**யாழ்ப்பாணம்**
**பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே**
**தொடர்பு:- 021 720 1005**
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமைச்சர் அமரதுங்கவுக்கு எதிரான தீர்மானத்தில் 115 பேர் கையொப்பம்

**சட்டம் ஒழுங்கு மற்றும் அனர்த்த முகாமைத்துவ அமைச்சர் ஜோன் அமரதுங்கவுக்கு எதிரான நம்பிக் கையில்லாத் தீர்மானம் தொடர்பான யோசனை நேற்று முன்தினம் சபாநாயகரிடம் கையளிக்கப்படவி ல்லை. மேலும் சில நாடாளுமன்ற உறுப்பினர்கள் அதில் கையெழுத்திட வேண்டியிருந்ததால், நேற்று முன்தினம் கையளிக்கப்படவில்லை எனவும் எதிர்க்கட்சி கொண்டு வரவுள்ள இந்த நம்பிக்கையில்லாத் தீர் மானம் தொடர்பான யோசனையில் இதுவரை 115 நாடாளுமன்ற உறுப்பினர்கள் கையெழுத் திட்டுள் ளனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.**

இதேவேளை இவர்கள் அனை வரும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் என எதிர்க்கட்சி யின் பிரதான அமைப்பாளர் ஜோன செனவிரட்ன தெரிவித்துள்ளார்.

ஏனைய கட்சிகளின் நாடாளு மன்ற உறுப்பினர்களும் யோச னையில் கையெழுத்திட விருப்பம் தெரிவித்துள்ளனர்: நாடாளுமன்ற உறுப்பினர்கள் கையெழுத்திட்ட தும் யோசனை சபாநாயகரிடம் கையளிக்கப்படும் என ஜோன் செனவிரட்ன தெரிவித்துள்ளார்.

வத்தளை பிரதேச சபையில் கடந்த 30 ஆம் திகதி 4 பேர் மீது தாக் குதல் நடத்தப்பட்ட சம்பவம் தொடர்பா கவே ஜோன் அமரதுங்கவுக்கு எதிராக இந்த நம்பிக்கை யில்லாத் தீர்மாணம் கொண்டு வரப்படவுள்ளது என்பது குறிப்பிடத்த க்கது. (இ-5)

## மக்களுக்கு நன்மைகள் ஏற்படும் திட்டங்கள் நிறுத்தப்படமாட்டாது -கயந்த கருணாதிலக

(கொழும்பு)

மக்களுக்கு நன்மை ஏற்படும் அபிவிருத்தித் திட்டங்கள் நிறுத் தப்பட மாட்டாது என ஊடக அமைச் சர் கயந்த கருணாதிலக தெரிவி த்துள்ளார். நாடாளுமன்றில் நேற்று முன்தினம் உரையாற்றியபோது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். கடந்த அரசாங்கம் கிராமிய அபிவி ருத்தித் திட்டம் என்ற போர்வையில் பாரியளவில் நிதி மோசடிகளில் ஈடுபட்டது. இதனால் மக்கள் பெரும் அதிருப்தியுடன் வாழ்ந்து வந்தனர். இது குறித்து விசாரணை நடத்துமாறு மக்கள் எம்மிடம் கோரி வருகின்றனர். அபிவிருத்தித் திட்ட ங்களின் தன்மைகள் குறித்து ஆரா ய்ந்து, மக்களுக்கு நன்மை ஏற்பட க்கூடிய திட்டங்கள் மீள நடைமு றைப்படுத்தப்படும். அரசியல் வாதிக ளுக்கு அதிகளவு பன்மு கப்படுத்த ப்பட்ட நிதியை இந்த அரசா ங்கமே ஒதுக்கியுள்ளது என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-5)

## சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 60 | 60 | 80 | 50 |
| உருளைக்கிழங்கு | 50 | 60 | 60 | 60 |
| பச்சைமிளகாய் | 150 | 250 | 270 | 300 |
| தக்காளி | 200 | 260 | 180 | 240 |
| மரவள்ளிக்கிழங்கு | 50 | 40 | 50 | 50 |
| கோவா | 100 | 100 | 90 | 120 |
| கரட் | 200 | 140 | 170 | 200 |
| பூசணி | 80 | 100 | 90 | 120 |
| புடோல் | 50 | 80 | 70 | 80 |
| வாழைக்காய் | 100 | 100 | 80 | 100 |
| சின்ன வெங்காயம் | 100 | 120 | 90 | 120 |
| பெரிய வெங்காயம் | 80 | 80 | 80 | 80 |
| பாகற்காய் | 100 | 120 | 100 | 150 |
| வெண்டிக்காய் | 100 | 100 | 100 | 100 |
| கருணைக் கிழங்கு | 60 | 50 | 60 | 80 |
| பயற்றங்காய் | 120 | 120 | 100 | 150 |
| லீக்ஸ் | 280 | 200 | 240 | 250 |
| பீற்றூட் | 100 | 180 | — | 100 |
| கறிமிளகாய் | — | 250 | 250 | 240 |
| முருங்கைக்காய் | — | 650 | — | — |
| போஞ்சி | 160 | 150 | 150 | 160 |
| கத்தரிதம்புள்ள | — | 50 | 70 | — |
| கீரை - 1 பிடி | 20 | 20 | 10 | 20 |
| தேசிக்காய் | 20 | 40 | 50 | 30 |
| தேங்காய் (ஒன்று) | 25-60 | 50 | 45-50 | 40-50 |
| இராசவள்ளி | 100 | 100 | 100 | 100 |
| வெங்காயப்பூ | 100 | 120 | 150 | 140 |

## பயிற்சி நெறிக்கு விண்ணப்பிக்கலாம்

வடமாகாண கல்வி அமைச்சின் கீழ் இயங்கும் STEPS Programme இனால் நடத்தப்படும் பாடசாலை விடுகை மாணவர்கள் மற்றும் பல்க லைக்கழக புகுமுக மாணவர்களுக் கான ஆங்கிலப் பயிற்சி நெறியின் அடுத் தபிரிவு எதிர்வரும் 27 ஆம் திகதி வெள் ளிக்கிழமை ஆரம்பமாகவுள்ளது. இப் பயிற்சியை பின்பற்ற விரும்புபவர் கள் தமது விபரங்களை யாழ். கனகரத் தினம் மத்திய மகாவித்தியால யத்தில் அமைந்துள்ள STEPS Programme இல் 2015.02.12 ஆம் திகதி வியாழக் கிழமைக்கு முன்னர் பதிவு செய்து கொள் ளவும். மேலதிக விபரங்களுக்கு 021 222 4580, 021 222 1395 எனும் தொலைபேசி இலக்கங்களுடன் தொட ர்பு கொள்ளவும் என அறிவிக்கப்ப ட்டுள்ளது. (இ-5)

## துப்பாக்கிச் சூட்டில் இராணுவ வீரர் பலி

காத்தான்குடி, 5ஆம் குறிச்சி பகுதியில் நேற்று முன்தினம் மாலை 4.30 மணியளவில் இடம் பெற்ற துப்பாக்கிச் சூட்டு சம்பவ மொன்றில் இராணுவ வீரர் ஒருவர் உயிரிழந் துள்ளார்.

5ஆம் குறிச்சி பகுதியில் கட மையிலிருந்த மேற்படி இரா ணுவ வீரர், கடமையை முடித்துக் கொண்டு கோவில்குளம் இராணுவ முகாமை நோக்கி பயணித்துக் கொண்டிருந்த போதே இச்சம்பவம் இடம்பெற்று ள்ளது. சக இராணுவ வீரர்களுடன் பயணித்துக் கொண் டிருந்த இவர் தன்னைத்தானே சுட்டுக் கொண் டாரா? அல்லது அவரது துப்பாக்கி தவறுதலாக வெடித்ததில் இந்த அசம்பாவிதம் ஏற்பட் டதா? என்பது தொடர்பில் காத்தான் குடி பொலி ஸார் விசாரணைகளை மேற் கொண்டு வருகின்றனர்.

சம்ப வத்தில், மதவாச்சியைச் சேர்ந்த 22 வயதுடைய டபி ள்யூ. எம்.கருநா ரத்ன என்ற இராணுவ வீரரே உயிரிழந்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. ( இ-5)

## (f) :.பேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 277

ஹொட் பெயின்




பூஜா பூஜா ராஜா



சாராயம் விற்பவன் சக்கரவர்த்தியாக திரிவதும் சாப்பாடு தரும் உழவன் சாப்பாடின்றி மடிவதும் எங்கள் நாட்டில் தான்

கஸ்தூ நிறோ



நம்ம ஊர் நிலைமை இப்படி ஆகிட்டுங்க.. எல்லாம் கழிவு ஒயிலால் வந்த வினை

வினோதா சிவனேசராசா




மயூ மயூரன்



தேவரட்ணம் சேந்திரபாலன்




நீங்கள் பார்த்த :.பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valam.puri.16 எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனவெளி

1. குடும்பத்தலைவனை இழந்து, பிள்ளைகளோடு தனித்து நிற்கும் பெண் சமூகத்தின் எல்லாச் சவால்களையும் தாண்டி நல்ல வாழ்வைப் பிள்ளைகளுக்காக மேம்படுத்தி, நடத்துவதற்கு அவரிடம் தன்னம்பிக்கையையும், துணிவையும் எவ்வாறு மேம்படுத்தலாம்?

சுபா சிவம்.
கிளிநொச்சி.



தன்னம்பிக்கையைக் கட்டியெழுப்பினால் துணிவு தானாகவே வந்துவிடும். பெண்கள் கணவனை இழந்த பின்னர் சமுதாயத்தை முட்டுக்கட்டையாக வைத்துக் கொண்டு தங்களுக்குள் ஓர் வட்டம் போட்டு வாழத் தொடங்குகின்றனர். சிலர் சமுதாயம் தங்களைத் தவறாக எடைபோடும் என்ற கண்ணோட்டத்திலேயே இன்று வாழ்ந்து வருகின்றனர்.

இவ்வாறான பெண்களின் திறமைகளை முதலில் அடையாளங்காண வேண்டும். பின்னர் அந்தத்திறமையை வைத்துக் கொண்டு அவர் வாழ்வில் முன்னேறக் கூடிய வழிகளைக் காட்ட வேண்டும்.



வழிகள் தெரியும் போதும் "நான் கணவனை இழந்து விட்டு எப்படி வெளியிலை நாலு பேருக்கு முன்னாலை போறது" என்ற கருத்தை மாற்ற வேண்டும். இவை அனைத்தும் ஒரே நாளில் செய்ய முடியாது. பல நாள் முயற்சி, பலபேரின் முயற்சி சேர்ந்துதான் இவ்விடயத்தை வெற்றியடைய வைக்க வேண்டும்.

கட்டியெழுப்பப்பட்ட தன்னம்பிக்கை மீண்டும் தகர்க்கப் படாமல் இருக்க வேண்டும். நாங்கள், சில வேலைத்திட்டங்களை முன்னெடுக்கின்றோம். அவற்றில் கணவனை இழந்த பெண்களின் திறன்களை அடையாளங்கண்டு அவர்களுக்கு நம்பிக்கையூட்டி, தொழில் வாய்ப்புக்களைப் பெற்றுக் கொடுக்கின்றோம்.

குழுக்களாக இணைத்து தொழில் முயற்சியில் ஈடுபடுத்துகின்றோம். அவர்கள் தங்கள் மனக்கவலைகளைப் பகிர்ந்து கொள்ளவும், தன்னம்பிக்கையைக் கட்டியெழுப்பவும் இக் குழு அமைப்பு பெரிதும் உதவுகின்றது.

**உதவிகளைப் பெற்றுக் கொள்ள விரும்பும் பெண்கள் தங்கள் கிராமத்தின் பிரதேச செயலகத்தில் சென்று, பெண்கள் அபிவிருத்தி உத்தியோகஸ்தரை சந்திக்கலாம்.**

2. எனது கணவர் பத்து ஆண்டுகளுக்கு முன்பு காணாமற் போய்விட்டார். ஒரு நாள் வேலைக்குப் போனவர் திரும்பி வரவேயில்லை. நாங்களும் எல்லா இடமும் தேடிப் பார்த்தோம்.

அந்த நாட்களிலை நாட்டுப் பிரச்சினை பெரிசா நடந்து கொண்டிருந்தது. எல்லா இராணுவ முகாம்களிலும் தேடிப்பார்த்தோம். அவர்கள் தங்களுக்கு எதுவும் தெரியாது என்று கூறினார்கள். விடுதலைப் புலிகள், மற்ற போராட்ட ஆக்கள் எல்லாரிட்டையும் கேட்டுப்பார்த்தம், எல்லாரும் கையை விரிச்சிட்டினம்.

பிறகு தெரிஞ்ச ஒரு ஆளோடை சேர்ந்து மனித உரிமை ஆணைக்குழுவிலும், நல்லிணக்க ஆணைக் குழுவிலும் முறைப்பாடு செய்தோம். ஆனால் யாரும் அவரைப் பற்றிய விபரத்தை சொல்லேல்லை. பிறகு மிருசுவிலில் இருக்கின்ற கட்டுச் சொல்லுற அம்மாட்டைக் கட்டும் கேட்டனான். யாரும் அவரைப்பற்றிச் சொல்லுகினம் இல்லை. கிட்டத் திலை ஒருத்தரை விடுதலை செய்தவை. நான் அவரிட்டையும் என்ர கணவரைப் பற்றி கேட்டேன்? அவருக்கும் ஒன்றும் புரியவில்லை. காணாமற் போனவர்களை தேடும் அமைப்பில் சேர்ந்து அவரைக்கண்டு பிடிக்க முடியும் என்ற நம்பிக்கையுடன் இருக்கின்றேன்.

எங்கள் வீடு தினமும் செத்தவீடு மாதிரியே இருக்கு. பிள்ளையளும் அப்பா எப்ப வருவார்? என்று கேட்டுக் கொண்டிருக்கின்றார்கள். அவர் வருவார் என்ற நம்பிக்கையில் நான் இருக்கின்றேன். சொந்தங்கள் "அவன் இனி எங்கை வரப் போகின்றான். நீ இனியும் இந்த பூ,பொட்டோடை இருக்கிறாய் என்று என்னை கணவனை இழந்த பெண்ணாகவே இருக்குமாறு திணிக்கின்றார்கள்.

அவரை இறந்து போய்விட்டார் என்று இறப்புச் சான்றிதழை வழங்குகின்றார்கள். என்னால் எதையும் ஏற்றுக் கொள்ள முடியவில்லை. எனது நம்பிக்கையை நான் முடித்துக் கொள்ள வேண்டுமா? நான் என்ன செய்ய? அவர் உயிரோடில்லை என்பதை என்னால் ஏற்றுக் கொள்ள முடியவில்லை.

மனோன்மணி,
முள்ளியவளை.

காணாமற் போனவர்கள் தொடர்பான பிரச்சினைகளும் பாதிப்புக்களும் இன்று வரை எங்கள் நாட்டில் முடியாத பிரச்சினையாகவே இருந்து வருகின்றது. ஒரு பெண் தன்னுடைய கணவன் இறந்து விட்டான் என்று தெரிந்தவுடன் தொடர்ச்சியாக அழுது, சொல்லிச் சொல்லி அழுது, களைத்து இறப்புச் சடங்குகளை செய்து பூ, பொட்டை இழந்து உரிய முறையில் தனது இழவிரக்கத்தை வெளியே கொண்டு வந்துவிடுவாள்.

பின்னர் யதார்த்த நிலைக்கு வந்து, மீண்டும் தன்னுடைய குடும்பத்தைப் பற்றி யோசிக்கத் தொடங்குவாள்.

ஆனால், காணாமற் போனவர்களின் மனைவிமார் உண்மையில் பரிதாபத்துக்குரியவர்கள். கணவன் இருக்கின்றானா? இல்லையா? பூவை, பொட்டை வைப்பதா? இல்லையா? நல்ல சடங்குகளுக்கு போவதா? இல்லையா? என்ற குழப்ப நிலையுடனேயே நாளாந்த வாழ்வையே வாழ்ந்து வருகின்றனர்.

காணாமற் போனவர்கள் தொடர்பில் இன்றுவரை உத்தியோகபூர்வமாக எந்தத் தகவல்களும் வெளிவரவில்லை. அதிலும் உங்கள் கணவர் பத்து வருடங்களுக்கு முன்னர் காணாமற் போயிருக்கின்றார்.

அக்காலகட்ட அரசியல், நாட்டுக் குழப்பங்கள் எல்லாம் சேர்ந்து சரியான தகவல்களை தந்திருக்கவில்லை. இருந்தாலும் நீங்கள் பல இடங்களிலும் முயற்சித்திருக்கின்றீர்கள். சரியான தகவல் கிடைக்காவிடினும் உங்கள் நம்பிக்கை உடைக்கப்பட வேண்டும் என்றில்லை.

உங்கள் கணவர் வருவார் என்ற எதிர்பார்ப்பு உங்களுடையது. அது நீங்களாக ஏற்றுக் கொண்டது. மாற்றிக் கொள்வதோ, மாற்றிக் கொள்ளாமல் இருப்பதோ உங்களுக்கு அதற்கான பூரண உரிமை இருக்கின்றது.

ஆனால் இறப்புச் சான்றிதழ் கொடுக்கப்பட்டாலும் அதைப் பெற்றுக் கொள்ளவேண்டுமா? இல்லையா? என்ற முடிவை எடுத்துக் கொள்வதிலும் உங்களுக்கு உரிமை இருக்கின்றது.

உங்கள் குடும்ப நிலை, வருமானம் இவை பற்றி எதுவும் நீங்கள் குறிப்பிடவில்லை.

அதாவது உங்கள் கணவர் தொழில் பார்த்தவராக இருந்தால், கிடைக்கின்ற ஓய்வூதியம் மற்றும் ஒருசில சலுகைகள் இறப்புச் சான்றிதழின் ஊடாகவே கிடைக்கப் பெறும்.

அவை நாளை உங்கள் பிள்ளைகளை படிப்பித்து உயர்ந்த நிலைக்கு கொண்டுவர உதவலாம். ஆனாலும், உங்கள் கணவர் மீண்டும் வருவார் என்ற நம்பிக்கையின் அடிப்படையில் அவர் வரும்வரைக்கும் உங்கள் குடும்பத்தின் நிலை, சிலவேளை வரா விட்டால் குடும்பத்தின் நிலை என்பவை பற்றி புரிந்து செயற்பட வேண்டும்.

பிள்ளைகளுக்கு தந்தையின் காணாமற்போதல் தொடர்பான உண்மை விடயங்களை மறைக்காது பக்குவமாக எடுத்துச் சொல்ல வேண்டும். யதார்த்தத்தை, புரிய வைத்து சில விடயங்களை ஏற்றுக் கொள்ளப் பழக்க வேண்டும்.

இவ்வாறான பிரச்சினைகள் உள்ள பெண்களோடு குழுவாக இணைந்து அவர்களின் கருத்துக்களையும், உங்கள் எண்ணங்களையும் பகிர்ந்து கொள்ளலாம்.

ஆனாலும்சில விடயங்களை ஏற்றுக் கொள்ள வேண் டுமாயின் நீங்கள் கட்டாயம் உளவளத்துணையாளர் ஒரு வரை நாடி உங்கள் பிரச்சினைகளை பகிர்ந்து கொள்ளுங்கள்.

வாசகர்களிடமிருந்து கேள்விகள், கருத்துக்கள் எதிர் பார்க்கப்படுகின்றன.

தரமானவை துறைசார்ந்த நிபுணர்களின் பதில்களுடன் வலம்புரியில் வெளியாகும்.

அனுப்ப வேண்டிய முகவரி:

சாந்திகம் ஊடகக்குழு,
8, 8/1, கற்பக விநாயகர் ஒழுங்கை,
கச்சேரி நல்லூர் வீதி,
யாழ்ப்பாணம்.

மின்னஞ்சல் மூலமாக அனுப்பப்படும் கேள்விகளும் கருத்துக்களும் ஏற்றுக்கொள்ளப்படும்.

E.mail:psych@sltnet.lk

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரொக்கெட் வீச்சில் 82பேர் உயிரிழப்பு

சிரியாவில் கிளர்ச்சி படையினர் ஆதிக்கம் செலுத்தி வருகிற பகுதியில், ஜனாதிபதி ஆதரவு விமானப்படையினர் நடத்திய ரொக்கெட் வீச்சில் 82 பேர் பலியாகினர். டமாஸ்கசில் கிளர்ச்சி படையினர் நடத்திய ரொக்கெட் வீச்சில் 10 பேர் கொல்லப்பட்டதற்கு இது பதிலடி ஆகும்.

சிரியாவில் ஜனாதிபதி பஷார் அல் ஆசாத்துக்கு எதிராக கடந்த 2011ஆம் ஆண்டு முதல் கிளர்ச்சி நடந்து வருகிறது. இதில், கிளர்ச்சியாளர்களுக்கும், ஜனாதிபதி ஆதரவு படையினருக்கும் இடையே நடந்து வரும் உள்நாட்டு மோதலில் இதுவரை 2 இலட்சத்துக்கும் அதிகமானோர் கொல்லப்பட்டுள்ளதாக ஐ.நா. புள்ளி விபரம் கூறுகிறது.

அங்கு கிளர்ச்சியில் ஈடுபட்டு வருகிற இயக்கங்களில், ஒரு மதத்தின் பெயரால் அமைந்த படையும் அடங்கும். இந்த படை 2013ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டது. இதன் தலைவராக ஜாரான் அல்லவுஷ் என்பவர் உள்ளார்.

இந்த கிளர்ச்சி படையினர், சிரியாவின் தலைநகரான டமாஸ்கசில் மக்கள் குடியிருந்து வருகிற பகுதிகளை குறிவைத்து நேற்று முன்தினம் ரொக்கெட் வீச்சுக்களை நடத்தினர். இந்த தாக்குதலில் 10 பேர் கொல்லப்பட்டனர். இதற்கு பதிலடி தர ஜனாதிபதி ஆதரவு படையினர் முடிவு செய்தனர்.

இதையடுத்து, கிளர்ச்சி படையினர் ஆதிக்கம் செலுத்தி வருகிற கிழக்கு கூத்தா மாவட்டத்தில் நேற்று முன்தினம் இரவில் தொடங்கி, ஜனாதிபதி ஆதரவு விமானப் படையினர் தொடர்ந்து ரொக்கெட்டுகளை வீசினர். இதில் 82 பேர் கொல்லப்பட்டனர். இவர்களில் 12 குழந்தைகளும் அடங்குவார்கள்.

இது தொடர்பாக சிரியாவில் வன்முறை சம்பவங்களை கண்காணித்து வருகிற சிரிய மனித உரிமை கண்காணிப்பு அமைப்பு நேற்று கருத்து தெரிவிக்கையில்,

"கிளர்ச்சி படையினர் ஆதிக்கம் செலுத்தி வருகிற கிழக்கு கூத்தா மாவட்டத்தில், விமானப்படையினர் தொடர்ந்து ரொக்கெட் வீச்சு நடத்தினர்.

கடந்த வியாழக்கிழமை பகலில் தொடங்கிய தாக்குதல் இரவு விடிய, விடிய நீடித்தது. மொத்தம் 60 ரொக்கெட்டுகள் வீசப்பட்டன" என்று கூறியது.

மேலும், "சிரியாவில் இப்படி வான்தாக்குதல்கள் நடத்துவது அபூர்வமான ஒன்று அல்ல என்றபோதிலும், மதத்தின் பெயரால் அமைந்த அந்த கிளர்ச்சி படையினர், மக்கள் குடியிருப்பு பகுதியில் ரொக்கெட் வீச்சு நடத்தி 10 பேரை கொன்று குவித்ததற்கு, விமானப்படையின் பதிலடியாக இது அமைந்துள்ளது" என அறிவிக்கப்பட்டுள்ளது. (இ-5)

போகோஹறாம் பாரிய தாக்குதல்

# 109 பேர் உயிரிழப்பு



போகோஹறாம் தீவிரவாதிகள் முதற் தடவையாக பெருமெடுப்பிலான தாக்குதலை நடத்தியுள்ளனர். இத்தாக்குதலில் 109 இற்கும் அதிகமானோர் பலியாகியுள்ளனர்.

நேற்று முன்தினம் இத்தாக்குதல் சம்பவம் இடம்பெற்றுள்ளது. நைஜீரியாவில் எல்லைப் பகுதியான பொஸ்ஸோ மற்றும் டிவ்பா பகுதிகளிலேயே இந்த கடும் மோதல் நடைபெற்றுள்ளது. இத்தாக்குதல் சம்பவம் குறித்து நைஜ்ஜர் அரசாங்கத்தின் பாதுகாப்பு அமைச்சர் தெரிவிக்கையில், தாக்குதலில் 109 இஸ்லாமியர்கள் கொல்லப்பட்டனர்.

இராணுவத் தரப்பில் 4 பேர் கொல்லப்பட்டதுடன் 17 பேர் காயமடைந்தனர். பொது மகன் ஒருவரும் கொல்லப்பட்டுள்ளார்.

இதேவேளை போகோஹறாம் தீவிரவாதிகளுக்கு எதிராகப் போரிட்டு வரும் சாடியன் படைத் தளபதி ஜெனரல் யாயா டாஓட் வயிற்றுப் பகுதியில் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகிப் படுகாயமடைந்துள்ளதாக நைஜ்ஜரில் உள்ள பாதுகாப்புத் தரப்பினர் தெரிவித்துள்ளனர்.

நிலைமைகள் இவ்வாறு இருந்த போதும் தாக்குதல் நடைபெற்ற பகுதிகளில் நிலைமை கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வரப்பட்டுள்ள தாவும் அங்கு அமைதி நிலவுவதாகவும் பாதுகாப்பு அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை மேற்படி தாக்குதல் முறியடிப்பானது ஒருங்கிணைந்த கூட்டு முயற்சிக்குக் கிடைத்த வெற்றி என இராணுவம் தெரிவித்துள்ளது.

எனினும் தீவிரவாதிகள் தமது தாக்குதல்கள் மூலம் கடந்த 6 ஆண்டு காலத்தில் பெருமளவான நிலப்பரப்புக்களைத் தமது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்துள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை நைஜ்ஜர் அரசாங்கம் தாக்குதல் நடைபெற்ற பகுதிகளுக்கு மேலதிக துருப்பினரை அனுப்புவதற்கு பாராளுமன்றத்தின் அனுமதியைப் பெறவுள்ளதாக அறிவித்துள்ளது. (இ-3-5)

# ராணுவத்துடன் கடுமையாக போரிட்டு நாட்டைக் கைப்பற்றிய தீவிரவாதிகள்

ஏமனில் கடந்த 33 ஆண்டுகள் ஜனாதிபதியாக இருந்த அலி அப்துல்லா சலேவுக்கு எதிராக கடந்த 2012ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் மக்கள் புரட்சி செய்தனர். அதனால் அவர் பதவி விலகினாரா. புதிய அரசு பதவி வகித்தது.

இங்கு அல்கொய்தா தீவிரவாதிகளின் ஆதிக்கம் உள்ளது. எனவே, அவர்களை அழிக்கும் பணியில் அமெரிக்கா ஈடுபட்டுள்ளது. அவர்கள் மீது ஆளில்லா விமானங்கள் மூலம் குண்டு வீச்சு நடத்தி வருகின்றனர். இந்த நிலையில் அல்கொய்தா இயக்கத்தின் தோழமை இயக்கமான ஹூயுதி தீவிரவாதிகள் ,சன்னி பிரிவு பழங்குடியினர் மற்றும் பொது மக்களை தாக்கி கொன்று குவித்து வருகின்றனர்.

இவர்கள் ஈரானை சேர்ந்த ஷியா பிரிவை சேர்ந்தவர்கள் ஆவர். பொது மக்களை கொன்று குவிக்கும் இவர்களுக்கு எதிராக இராணுவம் தாக்குதல் நடத்தியது. இருந்தும் தீவிரவாதிகள் கையே ஓங்கி இருந்தது. இந்த நிலையில் நேற்று முன்தினம் ஏமன் நாட்டை கைப்பற்றி தங்கள் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்து விட்டதாக தீவிரவாதிகள் தொலைக்காட்சியில் அறிவித்தனர். தலைநகர் சனாவில் உள்ள குடியரசுமாளிகையில் இருந்து இந்த அறிவிப்பு வெளியானது.

மேலும் ஜனாதிபதி மாளிகையையும் அவர்கள் பிடித்தனர். அங்கு இடைக்கால ஜனாதிபதியாக இருந்த அபேத ரப்போ மன்சூர் ஹாதியை நீக்கினர். அவருக்கு பதிலாக 5 உறுப்பினர்களை கொண்ட ஜனாதிபதி ஆணைக்குழுவை நியமித்தனர்.

மேலும் தற்போதைய பாராளுமன்றத்தையும் கலைத்தனர். புரட்சி குழு 551 பேர் கொண்ட புதிய பாராளுமன்றத்தை உருவாக்கும் என்றும் அறிவித்தனர். இந்த அறிவிப்பை அடையாளம் தெரியாத நபர் தொலைக்காட்சியில் செய்தியாக வாசித்தார். (இ-5)

# மத சகிப்புத்தன்மை கலாசாரத்தின் அங்கம்

## ஒபாமாவுக்கு ராஜ்நாத்சிங் பதில்

வோஷிங்டனில் நடந்த நிகழ்ச்சியில் அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா பேசும்போது, மத சகிப்பின்மையால் இந்தியாவில் நடந்த காரியங்களை காந்தி கண்டிருந்தால் அதிர்ச்சி அடைந்திருப்பார் என கூறினார்.

இதற்கு பதில் அளிக்கிற வகையில டில்லியில் நேற்று முன்தினம் மத்திய உள்துறை அமைச்சர் ராஜ்நாத்சிங், நிருபர்களிடம் பேசுகையில், "மத சகிப்புத்தன்மை என்பது நமது கலாசாரத்தின் அங்கம் ஆகும்.

முஸ்லிம்கள், கிறிஸ்தவர்கள், பார்சிகள் என அனைத்து மத நம்பிக்கை உள்ளவர்களும் இங்கு இணைந்து வாழ்கிறார்கள். நமது நாட்டில் சாதி, இனம், மதத்தின் பெயரால் பேதங்கள் பார்ப்பதில்லை என்று கூறினார்.

ஒபாமாவின் பேச்சுக்கு விஸ்வ இந்து பரிஷத்தும் பதில் அளித்துள்ளது. அந்த அமைப்பின் மூத்த தலைவர் சுரேந்திர ஜெயின், மத சகிப்புத்தன்மை பற்றி இந்தியாவுக்கு ஒபாமா போதனை செய்ய தேவையில்லை. அதற்கு பதிலாக அவர், கறுப்பின மக்களுக்கு எதிராக நடத்தப்படுகிற வன்கொடுமைகளை தடுத்து நிறுத்தட்டும என மேலும் தெரிவித்தார். (இ-5)

# கொலை செய்து வீசப்பட்ட 60 பேரின் சடலங்கள் மயானத்தில் கண்டுபிடிப்பு

தென் அமெரிக்கா நாடான மெக்சிகோவில் அகாபுல்கோ நகரம் உள்ளது. அங்குள்ள ஒரு தனியார் மயானம் கடந்த ஒரு ஆண்டுக்கு முன்பு மூடப்பட்டு வேறு இடத்தில் இயங்கி வருகிறது.

இந்த நிலையில் நேற்று முன்தினம் அங்கிருந்து துர்நாற்றம் வீசுவதாக அண்டை வீடுகளில் குடியிருந்தவர்கள் புகார் செய்தனர். உடனே அங்கு பொலிஸார் விரைந்து சென்று பார்த்தனர்.

அங்கு மிகவும் அழுகிய நிலையில் 60 உடல்கள் கிடந்தன. அவற்றில் ஆண்கள், பெண்கள் மற்றும் குழந்தைகள் அடங்குவர். அந்த பிணங்கள் அழுக்கு துணியால்சுற்றி கட்டப்பட்டு இருந்தது.

இந்த உடல்கள் எப்படி இங்கு வந்தது என பொலிஸார் விசாரணை நடத்தினார்கள். கடந்த 2 ஆண்டுகளில் பிணத்தை எரிக்க இந்த சுடுகாட்டுக்கு அனுப்பியவர்கள் யார் யார்? என்று கணக்கெடுத்தனர். பிணங்களை எரிக்க உரியவர்கள் இங்கு அனுப்பி வைத்துள்ளனர். ஆனால் இயந்திரம் சரிவர இயங்காததால் அது மூடப்பட்டு விட்டது. எனவே பிணங்களை அப்படியே போட்டு விட்டு சென்று இருக்கலாம் என பொலிஸார் தெரிவித்தனர்.

இது சுடுகாடு குயரெரோ மாகாணத்தில் உள்ளது. இது 43 மாணவர்கள் மாயமான இகுயாலா நகருக்கு அருகே உள்ளது. அதனால் தான் அப்பகுதியில் இந்த விவகாரம் பரபரப்பை ஏற்படுத்தியது என்பது குறிப்பிடத்தக்கது. (இ-5)

# சிறுவனின் விளையாட்டினால் சீனாவில் 17 பேர் கருகிப்பலி!

. சீனாவில் உள்ள வணிக வளாகத்தில் 9 வயது சிறுவன் (லைட்டரை) வைத்து விளையாடியபோது ஏற்பட்ட தீயால் நேற்று முன்தினம் பயங்கர தீ விபத்து ஏற்பட்டது. இதில் 17 பேர் உடல் கருகி உயிரிழந்தனர்.

குவாங்டாங் மாகாணம், ஹூயிங்டாங் கவுண்டியில் உள்ள வணிக வளாகத்தின் 4ஆவது மாடியில் ஒரு குடோன் உள்ளது. அங்கு பெற்றோருடன் வந்திருந்த 9 வயது சிறுவன், தனது கையில் உள்ள லைட்டரில் இருந்து நெருப்பை வரவழைத்து விளையாடியிருக்கிறான்., அப்போது எதிர்பாராதவிதமாக,அருகில் உள்ள ஒரு பொருள் மீது விழுந்து தீப்பிடித்தது.

அது எளிதில் தீப்பற்றும் பொருள் என்பதால் விரைவாக பற்றி எரிந்ததுடன், அந்த தளம் முழுவதும் பரவியது. இதுபற்றிய தகவல் தீயணைப்பு நிலையத்திற்கு தெரிவிக்கப்பட்டது. உடனடியாக 45 வாகனங்களில் 270 வீரர்கள் விரைந்து வந்து கடுமையான போராட்டத்திற்குப் பிறகு தீயை கட்டுப்படுத்தினர்.

இந்த விபத்தில் 17 பேர் உடல் கருகி இறந்தனர். 4 தீயணைப்பு வீரர்கள் காயமடைந்தனர். தீ விபத்துக்கு காரணமான 9 வயது சிறுவன் விசாரணைக்காக பொலிஸ் நிலையத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டான். மேலும் அந்த அங்காடியின் அதிகாரிகளிடமும் விசாரணை நடத்தப்பட்டு வருகிறது என்பது குறிப்பிடத்தக்கது. (இ-5)

# எகிப்தில் குண்டு மழை 27 தீவிரவாதிகள் பலி

எகிப்து நாட்டில் சினாய் தீபகற்ப பகுதியில், ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாத இயக்கத்துக்கு ஆதரவான தீவிரவாதிகள் ஆதிக்கம் செலுத்தி வருகிறார்கள்.

எகிப்து அரசை அகற்ற வேண்டும் என்ற நோக்கத்தில் இவர்கள் ஆயுதம் ஏந்தி போராடி வருகிறார்கள். கடந்த மாதம் இவர்கள் நடத்திய தாககுதலில் சிக்கி பாதுகாப்பு படையினர் 30 பேர் பலியாகினர்.

இந்த நிலையில் இவர்களை குறிவைத்து சினாய் தீபகற்ப பகுதியில் எகிப்து இராணுவம், ஹெலிகொப்டர்கள் மூலம் குண்டு மழை பொழிந்தது.

இதில் 27 தீவிரவாதிகள் உயிரிழந்தனர். அண்மையில் எகிப்து இராணுவம் நடத்திய மிகப்பெரிய வான்தாக்குதல் இதுதான் என தகவல்கள் வெளியாகியுள்ளன. (இ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையை காப்பாற்றுமா அமெரிக்கா?

ஆட்சிமாற்றம் ஏற்பட்டதை அடுத்து, இலங்கை அரசிடமிருந்து விலகி நின்ற நாடுகள் நெருங்கிவரத் தொடங்கியுள்ளதுடன், நாட்டில் ஏற்பட்டுள்ள மாற்றங்களை அவதானிக்கும் முயற்சியிலும் இறங்கியுள்ளன. கடந்த வாரமும் இந்த வாரமும் வெளி நாட்டுப் பிரதிநிதிகள் பலரும் கொழும்புக்கு வந்திருந்ததால், பரபரப்பான நிலை காணப்பட்டது. பிரித்தானியாவின் வெளி விவகார மற்றும் பொதுநலவாய பணியக இராஜாங்க அமைச்சரான ஹியூகோ ஸ்வயர் மூன்று நாள் பயணமாக இலங்கை வந்திருந்தார். அதை அடுத்து, பொதுநலவாய செயலாளர் நாயகம் கமலேஷ் சர்மா மூன்று நாள் பயணமாக வந்திருந்தார். தெற்கு மற்றும் மத்திய ஆசிய பிராந்தியத்துக்கான அமெரிக்காவின் உதவி இராஜாங்கச் செயலர் நிஷா தேசாய் பிஸ்வாலும் இரண்டு நாள் பயணமான கொழும்பு வந்திருந்தார். இதற்குள்ளாக, இலங்கை வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர, புதுடெல்லிக்கும் பிரஸெல்சுக்கும் இரண்டு வெளிநாட்டுப் பயணங்களை மேற்கொண்டிருந்தார்.



புதிய அரசாங்கம் பதவிக்கு வந்து இன்னும் ஒரு மாதம் கூட நிறைவடையாத நிலையில், கொழும்பு நோக்கிய சர்வதேச கவனம் தீவிரமடைந்துள்ளதையே இந்தப் பயணங்கள் எடுத்துக்காட்டுகின்றன. பிரித்தானியாவின் வெளிவிவகார மற்றும் பொதுநலவாய பணியக இராஜாங்க அமைச்சரான ஹியூகோ ஸ்வயர், அமெரிக்காவின் உதவி இராஜாங்கச் செயலர் நிஷா தேசாய் பிஸ்வால், பொதுநலவாய செயலாளர் நாயகம் கமலேஷ் சர்மா ஆகிய மூவரும், ஏற்கெனவே மஹிந்த ராஜபக்ஷ அரசாங்கம் பதவியிலிருந்த காலப்பகுதியில் இலங்கைக்கு வந்திருந்தனர். அவர்கள் மீண்டும் இங்கு வந்திருந்ததன் அடிப்படை நோக்கம், ஜனாதிபதித் தேர்தலுக்கு பின்னர் ஏற்பட்டுள்ள மாற்றங்களை அவதானிப்பதற்கேயாகும். இலங்கையில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டமைக்கு பல காரணங்கள் உள்ளன. அவற்றில் மேற்குலக நாடுகள் உருவாக்கிய மஹிந்த ராஜபக்ஷ எதிர்ப்பு அலையும் ஒரு காரணம். சமூக வலைத்தளங்கள் மற்றும் இணைய ஊடகங்களில் அரசுக்கு எதிரான உணர்வு தீவிரமாக பரப்பப்பட்டது. இதனாலேயே, முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தனது பதவியின் இறுதிக் காலகட்டத்தில் அமெரிக்காவுடன் அதிகளவில் முரண்பட்டிருந்தார்.

ஊடகவியலாளர்களுக்கான பயிற்சிப் பட்டறைகளுக்கு ஏற்படுத்தப் பட்ட இடையூறுகள், ஐ.தே.க. வினால் இளைஞர்களுக்கு கணினிப் பயிற்சி அளிக்க மேற்கொள்ளப்பட்ட திட்டங்களை குழப்ப எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் எல்லாவற்றுக்குமே காரணம் ஆட்சிக்கவிழ்ப்பு முயற்சி பற்றிய அச்சமே.

அண்மையில் புதுடெல்லி சென்றிருந்த போது செய்தியாளர்களிடம் கருத்து வெளியிட்ட வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர, அண்மைய ஆட்சி மாற்றத்தை அரபுலகப் புரட்சியை ஒத்தது என்று கூறியிருந்தார். அரபுலகப் புரட்சியில் சமூக வலைத் தளங்கள் எத்தகைய பங்களிப்பை ஆற்றினவோ, அதுபோலவே மஹிந்த ராஜபக்ஷ ஆட்சியை வீழ்த்துவதிலும் அவை முக்கிய பங்காற்றின.

தம்மை வீழ்த்தும் முயற்சியில் அமெரிக்கா உள்ளிட்ட நாடுகள் முனைப்புடன் செயற்படுவதாக முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவும் அவரது அரசாங்கமும் முன்னரே தெளிவாக உணர்ந்திருந்தனர். அதனாலேயே, மேற்குலகுடனான மஹிந்த ராஜபக்ஷ அரசாங்கத்தின் உறவுகள் கடைசிவரை சீரமைக்கப்பட முடியாததாகவே இருந்தது. இவ்வாறாக, ஆட்சி மாற்றத்துக்கு ஏதோவொரு வகையில் உந்துதல் கொடுத்த மேற்குலக நாடுகள், இப்போது அதன் விளைவு எத்தகையதாக உள்ளது என்பதை அறிந்துகொள்ள விரும்புகிறது. ஆட்சி மாற்றத்தின் மூலம் தாம் அடைய நினைத்தவை எந்தக்கட்டத்தில் உள்ளன என்பதை அறிவதிலும் அதற்கு எந்த வகையில் உதவலாம் என்பதை அறிந்துகொள்வதுமே அமெரிக்க, பிரித்தானிய உயர்மட்டப் பிரதிநிதிகளினுடைய பயணத்தின் நோக்கமாகும். பொது நலவாய பொதுச்செயலர் கமலேஷ் சர்மாவினது வருகையின் நோக்கமும் அதுவேயாகும். ஜனநாயகம், நல்லாட்சி, மனித உரிமைகளுக்கு மதிப்பளிக்கும் சூழல், நல்லிணக்கம் இந்த நான்குமே இலங்கையின் புதிய அரசாங்கத்திடமிருந்து சர்வதேச சமூகத்தினால் எதிர்பார்க்கப்படும் விடயங்களாகும். இந்த நான்கும் சரியான முறையில் நடைமுறைப்படுத்தப்பட்டால், செழிப்பானதொரு நாடாக இலங்கை மாறும் என்பது அவர்களின் கணிப்பு.

இந்த நான்கு விவகாரங்களிலுமே, முன்னைய மஹிந்த ராஜபக்ஷ அரசாங்கம் உருப்படியாக எதையும் செய்யவில்லை. செய்வதற்கு முயற்சிக்கவும் இல்லை. இந்த நான்கு அடிப்படை அம்சங்களையும் நிறை வேற்றுமாறு சர்வதேச சமூகம் அழுத்தம் கொடுத்த போதும் சரி, ஆலோசனை கூறிய போதும் சரி, முன்னைய அரசாங்கம் அதனை காதில் வாங்கிக்கொண்டதே இல்லை. எங்களுக்கு புத்தி சொல்ல இவர்கள் யார் என்ற தொனியிலும் தாங்கள் நியாயமாக நடந்துகொளபவர்கள் என்ற தொனியிலுமே முன்னைய அரசாங்கம் சர்வதேச சமூகத்தை பார்த்து கேள்வியெழுப்பும் நிலையிலிருந்து வந்தது. அதனாலேயே, தற்போதைய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை முன்னிலைப்படுத்தி நல்லாட்சி, ஜனநாயகம், மனித உரிமைகள், நல்லிணக்கம் போன்ற விடயங்களை வலியுறுத்தி ஓர் ஆட்சி மாற்றத்தை கோரிய போது, உள்நாட்டு மக்கள் மத்தியில் மட்டுமன்றி, சர்வதேச அளவிலும் ஆதரவை திரட்ட முடிந்தது. ஜனாதிபதித் தேர்தலுக்கு பின்னர், இந்த நான்கு அடிப்படை விடயங்களிலும் ஏற்பட்டுள்ள மாற்றங்கள் அல்லது முன்னேற்றங்களை அறிவதில் சர்வதேச சமூகம் உன்னிப்பாக உள்ளது. இந்த நான்கு விடயங்களையும் இலங்கையின் புதிய அரசாங்கத்தினால் அவ்வளவு இலகுவாக நிறைவேற்ற முடியாது. அத்துடன், 100 நாள் செயற்றிட்டத்துக்குள் அது சாத்தியமும் அற்றது. இதனை சர்வதேச சமூகம் நன்றாகவே புரிந்துவைத் திருக்கிறது. 100 நாள் செயற்திட்டத்துக்கு அப்பாலும், மாதக்கணக்காக சில விடயங்களை நிறைவேற்ற வருடக்கணக்காக கூட காத்திருக்க வேண்டிய நிலை ஏற்படலாம்.

உதாரணத்துக்கு நாட்டில் ஜனநாயக சூழலை ஏற்படுத்துவதோ, நல்லாட்சியை ஏற்படுத்துவதோ, மனித உரிமைகளுக்கு மதிப்பளிக்கும் சூழலை உருவாக்குவதோ பெரிய விடயங்களில்லை. அவற்றை முழுமையாகவோ, பகுதியாகவோ 100 நாள் செயற்றிட்டத்துக்குள்ளாகவே ஓர் அரசாங்கத்தினால் மீள நிறுவ முடியும். ஆனால், நல்லிணக்க த்தை ஏற்படுத்துகின்ற விடயம் என்பது அதற்கு அப்பாற்பட்டது. அது நீண்டதொரு செயல்முறை என்பதையும் முன்னைய மூன்று விடயங்களையும் திறமையாக நடைமுறைப்படுத்தன் மூலமே இதனை அடையமுடியும் என்பதையும் சர்வதேச சமூகம் நன்கறியும. நல்லிணக்கத்தை எட்டுவதில் முக்கியமான இரண்டு விடயங்கள் உள்ளன. பொறுப்புக் கூறலும் அதிகாரப்பகிர்வை உள்ளடக்கிய அரசியல் தீர்வுமே இவை இரண்டு மாகும். இவை இரண்டையும் அவ்வளவு சுலபத்தில் நிறைவேற்ற முடியாது. அதனாலேயே, நல்லிணக்க செயல்முறைக்கு எவராலும் காலக்கெடுவை விதிக்கமுடியாது. ஆனால், இலங்கையை பொறுத்தவரையில் முன்னைய அரசாங்கத்துக்கு போர் முடிந்து நான்கு ஆண்டுகள்வரை பொறுப்புக்கூறலுக்கும் நல்லிணக்கத்தை எட்டுவதற்கும் சர்வதேச சமூகத்தினால் கால அவகாசம் வழங்கப்பட்டது.

முக்கியமாக, நம்பகமான பொறுப்புக் கூறும் பொறிமுறை ஒன்றை உருவாக்குவதற்கு வழங்கப்பட்ட கால அவகாசத்தை முன்னைய மஹிந்த ராஜபக்ஷ அரசாங்கம் நிராகரித்தது. முதலில் உள்நாட்டு பொறிமுறைகளை ஏற்படுத்துமாறு சர்வதேச சமூகம் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவைத் தீர்மானங்களின் ஊடாக வலியுறுத்திய போது, அதற்கு கொஞ்சமும் மசிந்துகொடுக் காமல் நடந்து கொணடது. காலப்போக்கில் அமெரிககா தலைமையிலான மேற்குலகம் ஒவ்வொரு தீர்மானமாக கொண்டு வந்து இறுக்கிய போது, கொஞ்சம் கொஞ்சமாக தானும் ஏதோ சில உள்நாட்டு பொறிமுறைகளை உருவாக்குவது போன்று காட்டிக்கொண்டது. அவ்வாறு உருவாக்கப்பட்ட உள்நாட்டு பொறிமுறைகள் இதுவரையில் எந்தத் தீர்வையும் அடைய உதவவில்லை. உள்நாட்டு பொறிமுறைகளின் இறுதி இலக்கு நல்லிணக்கத்தை எட்டுவதாகவே இருந்தாலும், முன்னைய அரசாங்கத்தினால் அத்தகைய நோக்கத்தை அடைவதில் எந்த முன்னேற்றத்தையும் எட்ட முடியவில்லை.

அதற்கு முக்கியமான காரணம், அந்தப் பொறிமுறைகள் நம்பகமானவையாகவோ, சுதந்திரமான தாகவோ மட்டுமன்றி, தீர்வை எட்டுகின்ற நோக்கத்தை கொண்டவையாகவும் இருக்கவில்லை. ஏதோ பெயருக்கு ஓர் உள்நாட்டு பொறிமுறையை உருவாக்கியிருக்கிறோம் என்று காட்டிக்கொண்டு, சர்வதேச அழுத்தங்களிலிருந்து தப்பிக்கொள்வதே முன்னைய அரசாங்கத்தின் ஒரே நோக்கமாக இருந்தது. அதனால், அந்தப் பொறி முறைகள் சர்வதேச அழுத்தங்களிலிருந்து விடுபடவும் இலங்கைக்கு உதவவில்லை, அதேவேளை, இலங்கையில் நல்லிணக்கத்தை ஏற்படுத்தவும் கைகொடுக்கவில்லை. இந்தச் சூழலில், சர்வதேச விசாரணை நெருக்கடிகள் இலங்கையின் கழுத்தை நெரித்துக் கொண்டிருக்கின்ற கட்டத்திலேயே, அதிகாரத்தை விட்டுச் சென்றிருக்கிறார் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ. புதிய அரசாங்கத்துக்கு சர்வதேச விசாரணையின் விளைவுகளிலிருந்து நாட்டை காக்கவேண்டியது இப்போது முக்கியமான பிரச்சினையாக மாறியிருக்கிறது. எதிர்வரும் மார்ச் மாதம் ஜெனீவாவில் நடக்கவுள்ள ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் கூட்டத்தொடரில், இலங்கை தொடர்பான ஐ.நா. வின் விசாரணை அறிக்கை சமர்ப்பிக்கப்படவுள்ளது. அந்த அறிக்கை இலங்கை அரசாங்கத்துக்கு சாதகமான வகையில் அமையப்போவதில்லை என்பதை புதிய அரசாங்கம் தெளிவாக உணர்ந்து வைத்திருக்கிறது. எனவே, அந்த அறிக்கையின் தொடர் நடவடிக்கைகளை நிறுத்த வைப்பதற்கான இராஜதந்திர நகர்வுகளை மேற்கொண்டுவருகிறது.

அமெரிக்கா, இந்தியா, பிரித்தானியா உள்ளிட்ட நாடுகளை ஒன்றிணைத்து, தனக்கு ஆதரவான சூழல் ஒன்றை உருவாக்க முயற்சிக்கிறது மைத்திரிபால சிறிசேன அரசாங்கம். சர்வதேச விசாரணை அறிக்கையை வெளியிடாமல் தவிர்ப்பது, அதாவது பிற்போடுவது அல்லது முடக்கி வைப்பது அரசாங்கத்தின் ஒரு திட்டமாக இருந்தாலும், அதற்கான வாய்ப்புகள் குறைவு என்றே தெரிகிறது. ஏனென்றால், இது ஐ.நா. மனித உரிமைகள் பேரவையினால் ஏற்கெனவே நிறைவேற்றப்பட்டுவிட்ட தீர்மானத்தை அடிப்படையாக கொண்ட விடயம்.

விசாரணை அறிக்கையை சபையில் சமர்ப்பித்து, அதனை நிறைவேற்றவேண்டியது ஐ.நா. மனித உரிமை ஆணையாளரின் கடப்பாடு. எனவே விசாரணை அறிக்கையை வெளிவராமல் முடக்குவதோ, பிற்போடுவதோ நடைமுறைச் சாத்தியமான விடயமா என்பது சந்தேகமே. ஆனால், அந்த அறிக்கையின் மீதான மேல் நடவடிக்கை குறித்து இன்னொரு தீர்மானம் கொண்டு வரப்பட வேண்டும். அதனை அமெரிக்கா செய்யும் என்றே எதிர்பார்க்கப்பட்டு வந்தது. தற்போதுள்ள நிலையில், அத்தகைய தீர்மானத்தை கொண்டுவரும் திட்டத்தை அமெரிக்கா பிற்போடக்கூடும் என்று தெரிவிக்கப்படுகிறது. இலங்கையின் புதிய அரசாங்கம் ஐ.நா. வின் தொழில்நுட்ப உதவியை பெற்று - நம்பகமான உள்நாட்டு விசாரணை ஒன்றை ஆரம்பிப்பதாக வாக்குறுதி அளித்திருக்கிறது. இந்த விசாரணைககு கால அவகாசத்தை கொடுப்பதற்கு அமெரிகக இணக்கம் தெரிவித்துள்ளதாக தகவல்கள் கூறுகின்றன. தெற்கு மத்திய ஆசியாவுக்கான அமெரிக்காவின் உதவி இராஜாங்கச் செயலர் நிஷாபிஸ்வாலின் கொழும்பு பயணத்தின்போது, இதற்கான இணக்கம் எட்டப்பட்டதாக கூறப்படுகிறது.

அதேவேளை, பொதுநலவாய செயலர் கமலேஷ் சர்மாவும் கூட பொறுப்புக் கூறுவதற்கான உள்நாட்டு பொறிமுறையை உருவாக்கும் முடிவை வரவேற்றுள்ளார். அது மட்டுமன்றி, அத்தகைய விசாரணைகளுக்கு உதவ பொதுநலவாய அமைப்பு தயாராக இருப்பதாகவும் அவர் கூறியிருக்கிறார். அதேவேளை பிரித்தானியாவிடமிருந்து சற்று வேறுபட்ட கருத்து வெளியாகியிருக்கிறது. புதிய உள்நாட்டு விசாரணைகளை பிரித்தானியா வரவேற்றாலும், ஐ.நா. வின் விசாரணைகளுடன் ஒத்துழைக்க வேண்டும் என்று கோரியிருக்கிறது. ஆனாலும், இலங்கைக்கு கால அவகாசத்தை கொடுக்கும் விடயத்தில் அமெரிக்கா சாதகமான நகரவுகளை மேற்கொள்ளும் வாய்ப்புகளை நிரா கரிக்கமுடியாது. ஏனென்றால், இலங்கையில் ஏற்பட்டுள்ள அரசியல் மாற்றத்தை நிலையானதாக மாற்ற அமெரிக்கா விரும்புகிறது. இத்தகைய கட்டத்தில், ஜெனீவாவில் பிடியை இறுக்குவது விரைவில் நடக்கப் போகும் இலங்கையின் நாடாளுமன்றத் தேர்தலில் மஹிந்த ராஜபக்ஷ தரப்புக்கு சார்பான நிலையை உருவாக்கிவிடலாம். எனவே, தற்போதைய சாதகமான நிலையை மேலும் உறுதிப்படுத்திக்கொள்வதற்காக அமெரிக்கா ஒரு கால அவகாசத்தை கொடுக கலாம். அது உள்நாட்டு விசாரணை பொறி முறைக்கானது என்றாலும் கூட, இன்னொரு பக்கத்தில் இலங்கையில் தனக்கு சார்பான அரசாங்கத்தை பாதுகாக்கும் நோக்கத்தை கொண்டது என்பதையும் மறுக்கமுடியாது.

-கே.சஞ்சயன்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தனியார் துறையினரின் சம்பளம் அதிகரிக்கப்படாவிடின்

# போராட்டம் நடத்தப்படும்

### ஜே.வி.பி.எச்சரிக்கை



**(கொழும்பு)— தனியார்துறை ஊழியர்களின் சம்பளங்களை அதிகரித்துக் கொள்ள போராட்டம் நடத்தப்படும் எனவும் இடைக்கால வரவு செலவுத்திட்டத்தில் பரிந்துரை செய்ததற்கு அமைய தனியார் துறை ஊழியர்களின் சம்பளங்கள் 2 ஆயிரத்து 500 ரூபாவினால் உயர்த்துப்பட வேண்டுமெனவும் ஜே.வி.பியின் மாகாண சபை உறுப்பினர் கே.டி.லால்காந்த கோரிக்கை விடுத்துள்ளார்.**

அரசாங்க ஊழியர்களின் சம்பள அதிகரிப்பிற்கு நிகராக தனியார்துறை ஊழியர்களின் சமபள உயர்வினை சட்டமாக்குமாறு நிதி அமைச்சரிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. 2005 ஆம் ஆண்டு 36ஆம் இலக்க திரு த்தச்சட்டத்திற்கு அமைய தனியார்துறை ஊழியர்களுக்கு 1000 ரூபா கொடுப்பனவு உயர் த்தப் பட்டது.

இதில் திருத்தங்களைச் செய்து 2500 ரூபா சம்பளத்தை தனியார்துறை ஊழியர்களுக்கு உயர்த்த முடியும் என லால்காந்த தெரிவித்துள்ளார். சம்பள உயர்வு தொடர்பில் நிதி அமைச்சருக்கு எழுத்து மூலம் அறிவிக்கப்பட்டுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார். போராட்டங்களை முனனெடுத்தேனும் தனியார்துறை ஊழியர்களின் சம்பளத்தை உயர்த்த நடவடிக்கை எடுக்கப்படும என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-5)

## மகிந்தவினை வீட்டுக்கு அனுப்பி விட்டு அமெரிக்காவில் பசில் சுகபோக வாழ்வு

### அமைச்சர் நவீன் சுட்டிக்காட்டு

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை வீட்டுக்கு அனுப்பி வைத்து விட்டு சுதந்திர கட்சியினரையும் நாட்டு மக்களையும் நடுத்தெருவில் நிர்க்கதியாக்கி விட்டு அமெரிக்காவுக்கு தப்பியோடி சுகபோகம் அனுபவிக்கின்றார் பசில் ராஜபக்ஷ என அமைச்சர் நவீன் திஸாநாயக்க நேற்று முன்தினம் சபையில் தெரிவித்தார்.

உலகக்கிண்ணத்தை (கிரிக்கெட்)இலங்கை அணி வெல்லுமானால் 130 மல்லியன் ரூபாவை வழங்க அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இடம்பெற்ற இடைக்கால வரவு செலவுத்திட்டம் மீதான விவாதத்தில் உரையாற்றும் போதே சுற்றுலாத்துறை மற்றும விளையாட்டுத்துறை அமைச்சர் நவீன் திஸாநாயக்க இவ்வாறு தெரிவித்தார்.

மகிந்த ராஜபக்ஷ சிறந்த அரசியல்வாதி, திறமையானவர், பலசாலி. அதனை நாம் ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும். உண்மையை மூடி மறைக்க மாட்டேன். ஆனால் முன்னாள் ஜனாதிபதி தோல்வி கண்டு வீட்டுக்குப்போக முக்கிய காரணம் பசில் ராஜபக்ஷ ஆவார். பசில் ராஜபக்ஷ எனது தந்தையின் நல்ல நண்பர்.

ஆனால் கடந்த ஆட்சியில் அவர் எவ்வாறு நடந்து கொண்டார். மக்கள் பிரதிநிதிகளை மக்களுக்கு சேவை செய்ய விடாது தடுத்தார். அடக்கு முறையை மேற்கொண்டார் என்பதை சுதந்திரக் கட்சியினரான நீங்கள் நன்கு அறிவீர்கள்.

முன்னாள் ஜனாதிபதி மகிந்தவின் தோல்விக்கு முதன்மையானவர் பசில் ராஜ பக்ஷ. இன்று ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியினரை நடுத்தெருவில் கைவிட்டு மக்களையும் நடுத்தெருவில் கைவிட்டு அமெரிக்காவுக்கு தப்பிச்சென்று சுகபோகமாக வாழ்க்கை நடத்துகின்றார்.

கடந்த ஆட்சியாளர்கள் தமிழ் பேசும் மக்களை ஓரம் கட்டினார்கள். அவர்களை மதிக்கவில்லை. சிங்கள மக்களின் வாக்குகள் மட்டுமே போதும் நாம் வென்று விடுவோம் என்ற மமதையில் செயற்பட்டுள்ளார்.

எனவே, தமிழ் பேசும் மக்கள் மகிந்தவை நிராகரித்தனர். மைத்திரிபால சிறிசேனவுக்கு அமோக ஆதரவை வழங்கி வெற்றி பெறச் செய்தனர். இது கடந்த கால ஆட்சியாளர்களுக்கு நல்ல பாடமாகும்.

எதிர்வரும் உலகக்கிண்ணக் கிரிக்கெட் போட்டியில் இலங்கை அணி வெற்றி பெற்றால் 130 மில்லியன் ரூபாவை சன்மானமாக வழங்க அமைச்சரவை அங்கீகாரம் கிடைத்துள்ளது.

கடந்த ஜனாதிபதித் தேர்தலில் அனைத்து இன, மத மக்கள் மத்தியிலும் மைத்திரிபால சிறிசேன தனது கொள்கைகளை பிரசாரம் செய்தார். ஆனால் மகிந்த ராஜபக்ஷ இனவாதத்தை கையிலெடுத்தார் என்றும் அமைச்சர் நவீன் திஸாநாயக்க மேலும் தெரிவித்தார். (இ-5)

## குடும்பம் ஒன்றின் மாதச் செலவு 7500 ரூபாவினால் வீழ்ச்சியாம்

குடும்பம் ஒன்றின் மாதச் செலவு 7 ஆயிரத்து 500 ரூபாவினால் வீழ்ச்சியடைந்துள்ளதாக அரசாங்கம் தெரிவித்துள்ளது.

எரிபொருள் விலைக் குறைவு மற்றும் இடைக்கால வரவு செலவுத் திட்டத்தில் பொருட்களுக்கான விலைகள் குறைவு போன்றவற்றினால் இவ்வாறு குடும்பம் ஒன்றின் செலவு வீழ்ச்சியடைந்துள்ளது என அமைச்சர் லக்ஸ்மன் கிரியெல்ல தெரிவித்துள்ளார்.

நான்கு பேரைக் கொண்ட குடும்பம் ஒன்றின் மாதச் செலவில் 7 ஆயிரத்து 500 ரூபா குறைவடைந்துள்ளது.

இவ்வாறு விலைகள் வீழ்ச்சியடைவதன் மூலம் மத்திய தர குடும்பங்கள், தொழிலாளர்கள் குடும்பங்கள் நன்மை அடையும்.

இறக்குமதி செய்யப்படும் பொருட்களுக்கான விலைகள் உலக சந்தையில் வீழ்ச்சியடைந்தால் அதன் நலன்களையும் மக்களுக்கு உடனடியாக வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என பெருந்தோட்ட அமைச்சர் லக்ஸ்மன் கிரியெல்ல கொழும்பு ஊடகமொன்றுக்கு தெரிவித்துள்ளார்.

எனினும், இந்த 7 ஆயிரத்து 500 ரூபா குடும்பச் செலவு வீழ்ச்சி எவ்வாறு குறைவடைந்துள்ளது என்பது பற்றிய தர்க்க ரீதியான காரணிகளை அமைச்சர் முன்வைக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (இ-5)

## தேசிய வருமானத்தில் 81 வீதத்தை ராஜபக்ஷ குடும்பமே நிர்வகித்தது!

நாட்டின் தேசிய வருமானம் 700 பில்லியனாக இருந்தபோதும் அதில் 19 வீதத்தை தவிர ஏனையவற்றை ராஜபக்ஷ குடும்பமே நிர்வகித்தது என அமைச்சர் சம்பிக்க ரணவக்க பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

நாட்டின் முழு வரி வருமானத்தையும் மகிந்த ராஜபக்ஷ, பசில் ராஜபக்ஷ, கோத்தபாய ராஜபக்ஷ என ஒரு குடும்பமே நிர்வகித்தது என்பதைக் குறிப்பிட்ட அமைச்சர் உலகில் இந்தளவு மோசமான நிர்வாகம் வேறெந்த நாட்டிலும் இருந்ததில்லை என்றும் தெரிவித்தார்.

வரவு செலவுத் திட்டம் மீதான விவாதத்தில் நேற்று முன்தினம் உரையாற்றிய அமைச்சர் இது தொடர்பில் மேலும் தெரிவிக்கையில்,

கடந்த அரசாங்கத்தின் காலத்தில் இடம்பெற்ற ஊழல் மோசடிகள் தொடர்பில் 2 ஆயிரம் முறைப்பாடுகள் அரசாங்கத்துக்குக் கிடைத்துள்ளன. இது தொடர்பில் முழுமையான விசாரணைகள் முன்னெடுக்கப்படும்.

கடந்த ஐந்து வருட காலத்தில் எந்த சட்ட திட்டங்களும் மதிக்கப்படாமல் ஊழல் மோசடிகள் பெருமளவில் இடம்பெற்றுள்ளன. நாட்டின் தேசிய வருமானத்தில் பெருமளவு பகுதியை ராஜபக்ஷ குடும்பமே நிர்வகித்துள்ளது.

எமது ஏற்றுமதித்துறை பாரிய பின்னடைவை அடைந்துள்ளது. மக்களுக்கான நிவாரணங்கள் வழங்கப்படாமல் வரிச் சுமைகள் மக்கள் மீதே சுமத்தப்பட்டன.

வெளிநாட்டு கையிருப்பு தொடர்பில் தொடர்ந்தும் மக்களுக்கு பொய்யே கூறப்பட்டு வந்துள்ளது. மத்திய வங்கி அறிக்கைகளும் திரிபுபடுத்தியே வெளியிடப்பட்டுள்ளன.

கடன்பெற்ற பணமே வெளிநாட்டுக் கையிருப்பு என காட்டப்பட்டது. 100 இற்கு 8 வீதமான பொருளாதார அபிவிருத்தி எனக் காட்டுவதற்காக சரியான புள்ளி விபரங்கள் திரிபுபடுத்தப்பட்டதையும் குறிப்பிட வேண்டும் என்றும் அமைச்சர் மேலும் தெரிவித்தார். (இ-5)

## வாரம் ஒரு தகவல்

### தூங்க முடியவில்லை

“டாக்டர் நீங்கள் தான் என்னைக் காப்பாற்ற வேண்டும்”

“என்ன பிரச்சினை உங்களுக்கு?”

“மனுசன் நிம்மதியாகத் தூங்க முடியவில்லை”

“ஒரு மனிதன் தன் வாழ்நாளில் மூன்றில் ஒரு பகுதியை தூங்கியேதான் கழிக்கின்றான். தெரியும் அல்லவா?”

“ அவர்கள் எல்லாம் கொடுத்து வைத்தவர்கள்”

“அது இருக்கட்டும்... ஒருவன் எப்படி தூங்குகிறான் என்பதை வைத்துக்கூட அவனுடைய மனதைப் புரிந்து கொள்ளலாம்.

“அது எப்படி?”

“ஒரு காலை நிமிர்த்தியும் இன்னொரு காலை மடக்கியும் வைத்துக் கொண்டு தூங்குபவர்கள் இரண்டு விதமான குணங்களை உடையவர்கள். இவர்கள் எல்லாம் சில நேரங்களில் தங்களைப் பலசாலிகளாக காட்டிக்கொள்வார்களாம் ஆனால் அவர்களுடைய குணம் இல்லையாம். மனதிற்குள்ளேயே பதுங்குவார்களாம்”

“ அப்படியா!”

“ஆமாம்! மனதுக்குள் ஒரு தவிப்பு அல்லது பயம் உள்ளவர்கள் பந்துமாதிரி சுருண்டு படுத்துக் கொண்டு போர்வைக்குள் பதுங்கிக் கொள்வார்கள். அந்தப் பயம் போனதற்குப் பின் நன்றாக படுத்துத் தூங்குவார்களாம்”

“டாக்டர் நீங்கள் சொல்வதெல்லாம் தூங்குபவர்களைப் பற்றி என்னைப் போல் தூங்கமுடியாதவனுக்கு ஏதாவது வழியுண்டா... அதைச் சொல்லுங்கள்”

“உங்களால் ஏன் தூங்க முடியவில்லை” “மனைவி தொணதொண என்று பேசிக் கொண்டிருந்தால் எப்படித் தூங்க முடியும்”

“எங்கள் வீட்டிலும் அதே பிரச்சினைதான். அதற்கு வழி இதுதான் இந்தாங்க”

“என்ன இது” “தூக்கமாத்திரை”

“ரொம்ப நன்றி டாக்டர். இதை நான் எப்படி பாவிக்க வேண்டும்”

“இது உங்களுக்கு அல்ல உங்கள் மனைவிக்கு”

தென்கச்சி கோ.சுவாமிநாதன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எமக்குள்ள பிரச்சினைகளை தீர்க்க நடவடிக்கை எடுங்கள்

## இரணை இலுப்பைக்குளம் மக்கள் கோரிக்கை

இரணை இலுப்பைக்குளம் வைத்தியசாலைக்கு நிரந்தர வைத்தியர் ஒருவரை நியமிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். ஊரில் உள்ள பழைய விளையாட்டு மைதானத்தில் மண் அகழப்பட்டு அது குண்டும் குழியுமாக இருக்கின்றது. அத்துடன் அங்கு தொலைத் தொடர்பு கோபுரம் ஒன்றும நிறுவப்பட்டுள்ளது. இதனால் அந்த மைதானத்தைப் பயன்படுத்த முடியாதுள்ளது. மீள்குடியேறியுள்ள பல குடும்பங்களுக்கு வீட்டு வசதிகள் இல்லை. தற்காலிக வீடுகளில் மிகுந்த சிரமங்களுடன் வாழ வேண்டியிருக்கின்றது.

ஆனால், ஊரில் காடாகக் கிடந்த பகுதியில் காடு அழிக்கப்பட்டு, இடம்பெயர்ந்த குடும்பங்களுக்கென புதிய கல் வீடுகள் கட்டப்பட்டு அங்கு மக்கள் குடியேறாமல் அந்தப் பகுதி காடாகக் கிடக்கின்றது. ஆகவே எமது குறைபாடுகளைப் போக்குவதற்கு உரிய நடவடிக்கை




எடுக்க.வேண்டும் என்று இரணை இலுப்பைக்குளம் பிரதேச மக்கள் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தனிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

வடமாகாண சபை உறுப்பினர் டாக்டர் சிவமோகனின் ஏற்பாட்டில், யாழ். மருத்துவர் சங்கத்தினால் நடத்தப்பட்ட வைத்திய முகாமில் கலந்து கொள்வதற்காக இரணை இலுப்பைக்குளம் கிராமத்திற்கு நாடாளும்ன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் விஜயம் செய்திருந்தார்.

அவ்வேளை இடம்பெற்ற பொது மக்களுடனான சந்திப்பின்போது, அந்த ஊர்ப் பிரமுகர்கள் பிரச்சினைகளைத் தெரிவித்து அதனை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என கேட்டுக் கொண்டனர்.

இச் சந்திப்பின்போது பிரச்சினைகள் குறித்து அவர்கள் தெரிவித்ததாவது,

**நிரந்தர வைத்தியர் தேவை**

இரண்ண இலுப்பைக்குளம் வைத்தியசாலையில் நிரந்தர வைத்தியர் இல்லாத காரணத்தினால், ஊரில் வைத்தியசாலை இருந்தும், மக்கள் அதிக தொலைவில் உள்ள வவுனியா அல்லது மன்னார் வைத்தியசாலைக்கே செல்ல வேண்டியிருக்கின்றது.

அருகில் உள்ள பூவரசங்குளம் வைத்தியசாலைக்குச் சென்றாலும், அங்கு உரிய வசதிகள் இல்லாத காரணத்தினால் வவுனியா வைத்தியசாலைக்கே நோயாளிகள் அதிகமாகச் செல்ல வேண்டியிருக்கின்றது.

வைத்திய தேவைக்காக மன்னாருக்குச் செல்வதாக இருந்தாலும் சரி, வவுனியாவுக்குச் செல்வதாகயிருந்தாலும்சரி, இரண்டு நகரங்களுக்குமே போதிய போக்குவரத்து வசதி இல்லை.

தனியார் பேருந்து ஒன்று சேவையில் ஈடுபட்டிருந்தாலும், அதில் உரிய நேரத்திற்கு இந்த இடங்களுக்குச் செல்லவோ அல்லது அங்கிருந்து திரும்பி வரவோ வசதியற்றதாக இருக்கின்றது.

இரணை இலுப்பைக்குளம் வைத்தியசாலை மன்னார் பிராந்திய சுகாதார வைத்திய பணிப்பாளரின் பிரிவுக்குள்ளேயே வருகின்றது. இங்கு நிரந்தர வைத்தியர் ஒருவர் இல்லாத காரணத்தினால் மன்னாரில் இருந்து ஒரு வைத்தியர் வாரத்திற்கு இரண்டு தினங்கள் மாத்திரமே வந்து செல்கின்றார்.

மீள்குடியேறியுள்ள போதிலும், பாதிக்கப்பட்ட குடும்பங்கள் அனைத்துக்கும் நிரந்த வீடு வசதிகள் கிடைக்கவில்லை. இதனால் பல குடும்பங்கள் இன்னும் தற்காலிக வீடுகளில் ஓட்டைக் கூரைகளின் கீழே இடிந்த சுவர்கள் உள்ள வீடுகளில் பெரும் சிரமங்களுக்கு மத்தியில் வாழ வேண்டியுள்ளது.

இதேவேளை, இங்கிருந்து இடம் பெயர்ந்துள்ள முஸ்லிம் குடும்பங்கள் மீள்குடியேறுவதற்காக ஊரின பின்பக்கத்தில் காடாகக் கிடந்த பெரிய பிரதேசத்தில் காடுகள் அழிக்கப்பட்டு, அங்கு புதிதாக வீடுகள் நிர்மாணிக்கப்பட்டிருக்கின்றன. அந்த மக்களின் வழிபாட்டுக்கென புதிதாக பள்ளிவாசலும் அமைக்க



ப்பட்டுள்ளது. ஆனால் அங்கு எவரும் குடியேறாத காரணத்தினால் அந்த வீடுகள் பற்றைகள் மண்டி பாழடைந்து கிடக்கின்றன.

எனவே, சொந்தக் காணிகளில் மீள்குடியேறி வசிக்கின்ற நிரந்தர வீட்டு வசதிகளற்ற குடும்பங்களுக்கு வீடுகள் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

இந்தப் பிரதேசத்துக்கென பெரியதொரு விளையாட்டு மைதானம் இருந்தும் அதில் இருந்து கிரவல் தோண்டி எடுக்கப்பட்டதனால் பெரிய குழிகள் ஏற்பட்டுள்ளன. இந்த குழிகள் நிரப்பப்பட்டு, மைதானத்தைப் புனரமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

அதேநேரத்தில், இந்த மைதானத்தில் தொலைத்தொடர்பு கோபுரம் ஒன்றும் அமைக்கப்பட்டிருக்கின்றது. இந்தக் கோபுரம் அமைக்கப்படும்போது, கிராம அபிவிருத்திச் சங்கத்தினரிடமோ அல்லது இந்தப் பிரதேசத்தின் பிரதேச சபையினரிடமோ அதற்கான அனுமதி பெறப்படவில்லை.

எனவே எமக்குள்ள பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று ஊர்ப்பிரமுகர்கள் கேட்டுக் கொண்டனர்.

மக்களின் நிலைமைகள், ஊர்ப் பிரச்சினைகள் என்பவற்றை விபரமாகக் கேட்டறிந்த சிவசக்தி ஆனந்தன் மற்றும் மாகாண சபை உறுப்பினர் டாக்டர் சிவமோகன் ஆகியோர் உரிய அதிகாரிகளுடனும், உரிய மட்டங்களுடனும் தொடர்பு கொண்டு பிரச்சினைகளுக்குத் தீர்வு காண முயற்சிப்பதாக உறுதியளித்துள்ளனர். (அ-2-250)

## யாழ். இந்துவின் பழைய மாணவர்கள்

# ஆரம்பப் பிரிவு மாணவர்களின் கற்றல் செயற்பாட்டுக்கு உதவி




துணுக்காய் கல்வி வலயத்தில் உள்ள ஆரம்ப கல்வி பாடசாலைகளில் நடப்பாண்டில் தரம் ஒன்றில் புதிதாக இணைத்துக்கொள்ளப்பட்ட ஐந்து பாடசாலைகளின் மாணவர்களுக்கு யாழ்.இந்துக் கல்லூரியில் 2005 ஆம் ஆண்டு வரை கல்வி கற்ற பழைய மாணவர்கள் கற்றல் உபகரணங்கள் அடங்கிய புத்தகப் பைகளை கடந்த 5 ஆம் திகதி பாடசாலை தோறும் சென்று வழங்கியுள்ளதாக துணுக்காய் வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி எல். மாலினி வெனிற்றன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் தெரிவிக்கையில்,

யாழ்.இந்துக் கல்லூரியின் 2005 ஆம் ஆண்டு வரை கல்வி கற்ற உள்நாட்டுமற்றும்வெளிநாட்டுபழைய மாணவர்கள் இணைந்து கல்வி வலயத்தின் கீழுள்ள ஆரம்பக் கல்வி பாடசாலைகளான மு/கல்விளான் அ.த.க.பாடசாலை,மு/சுவாா முறிப்பு அ.த.க.பாடசாலை,மு/வன்னி விளான் குளம் அ.த.க.பாடசாலை,மு/பாலைப்பாணி அ.த.க.பாடசாலை,மு/கோ[illegible] கட்டிய குளம் அ.த.க.பாடசாலை ஆகிய ஐந்து பாடசாலைகளில் புதிதாக தரம் ஒன்றில் இணைத்துக் கொள்ளப்பட்ட 52 மாணவர்களுக்கு காலணியுடன் இணைந்த கற்றல் உபகரணங்கள் அடங்கிய பாடசாலை பைகளையும் வழங்கியுள்ளனர்.

இவர்களின் இச் செயற்பாடானது வன்னியில் நடைபெற்ற போரினால் பாதிக்கப்பட்டு மீள்குடியேறியுள்ள குடும்பங்களின் பிள்ளைகளுக்கு பயனுள்ளதாக அமைந்துள்ளது என அவர் மேலும் தெரிவித்தார். (அ-2-23-15)

# புதுக்குடியிருப்பில் பண்பாட்டு விழா

(மல்லாவி)

முல்லைத்தீவுமாவட்டத்தில்உள்ள புதுக்குடியிருப்பு பிரதேச செயலகத்தின் பண்பாட்டு விழா எதிர்வரும் 11 ஆம் திகதி புதன்கிழமை பி.ப. 3 மணிக்கு புதுக்குடியிருப்பு பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் புதுக்குடியிருப்பு பிரதேச செயலாளர் இ.பிரதாபன் தலைமையில் நடைபெறும்.

புதுக்குடியிருப்பு சந்தியிலிருந்து கலைபண்பாட்டு நிகழ்வுகளுடன் பண்பாட்டு பேரணியாக விருந்தினர்கள் பி.ப. 2மணிக்கு அழைத்து வரப்பட்டு பி.ப. 3 மணிக்கு நிகழ்வுகள் ஆரம்பமாகும்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் நா.வேதநாயகன் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளார்.

சிறப்பு விருந்தினராக வடமாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் திருமதி உசா சுபலிங்கம் கலந்து சிறப்பிக்கவுள்ளார்.

இதில் *புதுவையாள்* பண்பாட்டு மலர் வெளியீட்டு நிகழ்வும் இடம் பெறும்.

அத்தோடு கூத்து, இசை, நாடகம், அழுத்தாக்கம், சமூகப்பணி, கல்விப்பணி ஆகியவற்றில் சிறப்பு பணியாற்றிய ஆறு கலைஞர்கள் கௌரவிக்கப்படவுள்ளனர்.

இரவு நடைபெறும் கலை நிகழ்வுகளில் காத்தவராயன் சிந்து நடை கூத்து, வில்லுப்பாட்டு உட்பட இயல், இசை, நாடக நிகழ்வுகளும் நடை பெறும்.

எனவே இந்நிகழ்விற்கு கலை ஆர்வம் கொண்ட அனைவரையும் வருகை தந்து சிறப்பிக்குமாறு விழா ஏற்பாட்டாளர்கள் கேட்டுள்ளனர். (அ-2-15)

## மோட்டார் வாகன திணைக்களத்தின் அறிவித்தல்

(மல்லாவி)

சாரதி அனுமதி பத்திரத்தை புதிப்பிக்க வரும்போது எடுத்துவர வேண்டியஆவணங்கள்தொடர்பில்முல்லை. மாவட்ட மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களத்தின் செய்திக் குறிப்பொன்றை வெளியிட்டுள்ளனர்.

அவையாவன, பிறப்பு அத்தாட்சிப் பத்திரம், தேசிய ஆள் அடையாள அட்டை மற்றும் அதன் பிரதி, தேசிய போக்குவரத்து வைத்திய நிறுவனத்தின் மருத்துவசான்றிதழ், பழைய சாரதி அனுமதிப் பத்திரமும் அதன் நிழற்பிரதியும் கறுப்பு, வெள்ளை புகைப்படம் இரண்டு, பணம் செலுத்திய பற்றுச் சீட்டு, முகவரி மாற்றுவதாயின் வசிக்கும் பகுதி கிராம சேவையாளரின் நற்சான்றிதழ், தொலைந்த சாரதி அனுமதிப் பத்திரம் பெறுவதாயின் பொலிஸ் முறைப்பாட்டு பிரதி இவற்றுடன் அனுமதிப்பத்திரம் புதுப்பித்தல் மேற்கொள்வோர் ஆயிரத்து 700 ரூபாவும் புதுப்பித்தலுக்கு பிந்திய காலப் பகுதிக்கு வருடம் ஒன்றிற்கு 250 ரூபா வீதமும் சாரதி அனுமதிப் பத்திரத்தில் உள்ளடக்கப்பட்ட தகவல்கள் மாற்றுவதாயின் 250 ரூபாவும் எடுத்து வரவேண்டும்.

கடமை நாட்களில் பிற்பகல் 2.30 மணிக்கு முன்னர் முல்லைத்தீவு மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்கள அலுவலகத்திற்கு வருகை தருமாறு அச் செய்திக்குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-2-15)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிபர்களின் இடமாற்றத்தால் வன்னி மாணவர்களுக்கு பாதிப்பு

## வடமாகாண சபை உறுப்பினர் தியாகராஜா

வன்னிப்பிரதேச மாணவர்களின் கல்வியைச் சீரழிப்பதற்காகவா, கல்வித் திணைக்களம் பாடசாலை அதிபர்களை இடமாற்றம் செய்திருக்கின்றது என்று வடமாகாண சபை உறுப்பினர் எம்.தியாகராஜா கேள்வி எழுப்பியுள்ளார்.

கனகராயன்குளம் மகாவித்தியாலயத்தில் அண்மையில் இடம்பெற்ற வைபவம் ஒன்றில் உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கேள்வியை எழுப்பியுள்ளார்.

அங்கு உரையாற்றிய அவர் மேலும் தெரிவித்ததாவது,

யுத்தம் நடைபெற்ற காலத்தில் பல்வேறு சிரமங்கள், துன்பங்களுக்கு மத்தியிலும் உயிராபத்துக்கு மத்தியிலும் பாடசாலைகளில் ஆசிரியர்களும், அதிபர்களும் பணியாற்றினார்கள். அவர்களின் சேவை அளப்பரியது.

அர்ப்பணிப்போடும், சமூகப் பொறுப்போடும, யுத்தப் பிரதேசத்தில் இருந்த மாணவர்களின் கல்வி மேம்பாட்டிற்காகப் பணியாற்றிய அத்தகைய பாடசாலை அதிபர்கள் கேட்டு கேள்வியின்றி இப்போது இடமாற்றம் செய்யப்பட்டிருக்கின்றார்கள்.

இந்த இடமாற்றம் காரணமாக பல பாடசாலைகளில் கல்விச் செயற்பாடுகளும், பாடசாலைகளின் சீரான நிர்வாகமும் பாதிக்கப்பட்டிருக்கின்றது.

வன்னிப்பிரதேசத்தில் 53 பாடசாலை அதிபர்கள் இடமாற்றம் செய்யப்பட்டிருக்கின்றார்கள். வவுனியா வடக்கு வலயத்தில் மட்டும் 13 பாடசாலை அதிபர்கள் இந்த இடமாற்றத்தினால் பாதிக்கப்பட்டிருக்கின்றார்கள. இந்த இடமாற்றம் முறையற்றது.

அதிபர்களின் சேவையின் முக்கியத்துவம், அந்தப் பாடசாலைகளில் ஏற்பட்டுள்ள முன்னேற்றம் என்பன இந்த இடமாற்றத்தின் போது கவனத்திற் கொள்ளப்படவில்லை.

இடமாற்றம் செய்யப்பட வேண்டும் என்ற ஒரே நோக்கத்திற்காக, நன்றாக இயங்கி வருகின்ற பாடசாலைகளின் அதிபர்களும் இடமாற்றம் செய்யப்பட்டிருக்கின்றார்கள். வன்னிப்பிரதேச பாடசாலைகளின் கல்வியை முடக்குவதற்காகவா இந்த இடமாற்றம் செய்யப்பட்டிருக்கின்றது என கேட்க விரும்புகிறோம்.

அதிகாரிகளின் இந்த நடவடிக்கையை நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம். இந்த நடவடிக்கை நிறுத்தப்பட வேண்டும். இல்லையேல் இதற்கு எதிராகப் போராட வேண்டிய நிலைக்கு நாங்கள் தள்ளப்படுவோம் என்றார்.

இந்த நிகழ்வில் பசியொழிப்புக்கான உலக மன றத்தின் ஆதரவில் மாற்றுவலுவுள்ள 100 பேருக்கு அரிசிப்பொதிகள் வழங்கப்பட்டன.

வன் னி குறொஸ நிறுவனத்தினால் இந்தப் பிரதே சத்தைச் சேர்ந்த 20 முன்பள்ளி ஆசிரியைகளுக்கு சைக்கிள்களும் வழங்கப்பட்டன. (அ-2-250)




## இல்லமெய்வல்லுநர் போட்டி

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு வற்றாப்பளை மகா வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு பாடசாலை மைதானத்தில் நடைபெறும்.

பாடசாலை அதிபர் செ.யோகேஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக வடக்கு மாகாண சபை பிரதி தவிசாளர் அன்ரனி ஜெயநாதன் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளார்.

சிறப்பு விருந்தினராக முல்லைத்தீவு கல்வி வலய பிரதி கல்விப் பணிப்பாளர் ந.காண்டீபன், கௌரவ விருந்தினராக ஓய்வுபெற்ற முல்லைத்தீவு மாவட்ட செயலக நிர்வாக உத்தியோகத்தர் வே.இரத்தினராஜா ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளனர். (2)

## ஆலோசனை கலந்துரையாடல்

(கிளிநொச்சி)

பாரம்பரிய கலை பண்பாட்டை வெளிப்படுத்தும் வகையில் உருத்திரபுரம் பிரதேசத்தில் கலை பண்பாட்டு விழா-2015 இனை நடத்துவதற்கான ஆலோசனை கலந்துரையாடல் இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 4.30 மணிக்கு கிளி/உருத்திரபுரம் மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

இப்பகுதி வாழ் மக்கள் அனைவரையும் இந்த ஆலோசனைக் கலந்துரையாடலில் பங்கேற்று விழா சிறப்பிப்பதற்கான ஆலோசனைகளை வழங்குமாறு விழா ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (2-254)

# குளிப்பதற்கு சென்ற நபர் குளத்தில் மூழ்கி மரணம்



(கிளிநொச்சி)

கிளிநொச்சி புதுமுறிப்பு குளத்தில் குளிப்பதற்கு சென்ற குடும்பஸ்தர் நீரில் மூழ்கி உயிரிழந்தார். இச்சம்பவம் நேற்று முன்தினம் 3.30 மணியளவில் நடைபெற்றது.

இதில் கிளிநொச்சி காந்திக்கிராமம் ராஜன் குடியிருப்பில் வசிக்கும் மூன்று பிள்ளைகளின் தந்தையான மாசில்லாமணி ஸ்ரீகுமார் (வயது-52) என்பவரே உயிரிழந்தவராவார்.

இது தொடர்பில் தெரிய வருவதாவது,

வீட்டிலிருந்து குளிப்பதற்காக சென்ற பிரஸ்தாப நபர் இரவு 9 மணி வரை வீடு வந்து சேராததையடுத்து பிள்ளைகளால் தேடப்பட்டார்.

குறித்த குளத்திற்கு அருகில் அவர்கள் சென்ற வேளை அவரது துவிச் சக்கரவண்டியும் உடுபுடைவையும் இருந்துள்ளன.

இதனையடுத்து கிராம இளைஞர்கள் நள்ளிரவு 12 மணிவரை குளத்தினுள் தேடியும் சடலம் கிடைக்காத நிலையில் கிளிநொச்சி பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டுள்ளது.

அவ்விடத்திற்கு விரைந்த பொலிஸார் தேடுதலில் ஈடுபட்டும் சடலம் கிடைக்காத நிலையில் நேற்று முற்பகல் 10.05 மணியளவில் குறித்த குளத்தில் இருந்து அவரது சடலம் மீட்கப்பட்டு கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டது. (அ-2-27)



முல்லைத்தீவு ஆனந்தபுரம் கிராமத்தில் மாணவர்களின் கல்விக்கு கைகொடுக்கும் முகமாக தமிழர் முன்னேற்றக் கழகம் முல்லைத்தீவு ஆனந்தபுரம் அரசினர் தமிழ் கலவன் பாடசாலையில் கல்வியை தொடர முடியாமல் சிரமமுறும் மாணவர்களுக்கு ஒரு இலட்சம் மாணவர்களின் கல்விக்கு கைகொடுப்போம் எனும் செயற்றிட்டத்தினூடாக அங்கு கல்வி பயிலும் 150 மாணவர்களுக்கான அப்பியாசக் கொப்பிகள் அண்மையில் வழங்கப்பட்டன. (படம்:-சாவகச்சேரி செய்தியாளர்)

# சிற்றுண்டி வகைகளின் விலை குறையவில்லை

மன்னார் நகரப் பகுதியிலுள்ள வர்த்தக நிலையங்கள் மற்றும் உணவகங்களில் சிற்றுண்டி வகைகள், பொருட்களின் விலைகள் குறைக்கப்படவில்லையெனவும் பழைய விலையில் விற்கப்படுவதாகவும் அத்துடன் உணவகங்களில் விலைப்பட்டியல் காட்சிப்படுத்தப்படவில்லை எனவும் பொதுமக்கள் குற்றம் சாட்டுவதாக மன்னார் நகர பிதா அ.ஞானபிரகாசம் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் தெரிவிக்கையில்,

அரசாங்கத்தினால் இடைக்கால வரவு செலவு திட்டத்தில் அறிவிக்கப்பட்ட அத்தியாவசிய பொருட்களான பால்மா, கோதுமை மா, சீனி, சமையல் எரிவாயு உள்ளிட்ட பொருட்களின் விலைகள் குறைக்கப்பட்ட போதிலும் உணவகங்களில் தேநீர், பால் தேநீர், ரொட்டி என்பவற்றின் விலைகள் இதுவரை குறைக்கப்படவில்லையென அவர் தெரிவித்துள்ளார்.

அத்துடன் பாவனையாளர் அதிகார சபையினால் உணவகங்களில் சிற்றுண்டிவகைகள், தேநீர் வகைகள் என்பனவற்றின் விலைகள் காட்சிப்படுத்தப்பட வேண்டுமென அறிவிக்கப்பட்டுள்ள நிலையில் மன்னார் நகர பகுதியிலுள்ள உணவகங்களில் அவை இது வரை காட்சிப்படுத்தப்படவில்லையெனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதனால் உணவகங்கள், கடைகளுக்கு செல்வோர் பல்வேறு அசௌகரியங்களுக்கு முகம்கொடுப்பதாகவும் உணவகங்களில் தேநீர் அருந்துவோர் கடை உரிமையாளர்களுடன் முரண்படுவதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (அ-2)

# அக்கராயன் கெங்காதரன் குடியிருப்பு மக்களின் பங்களிப்புடன் குளம் அமைப்பு



கிளிநொச்சி, அக்கராயன் கெங்காதரன் குடியிருப்பு பகுதியில் சோபா நிறுவனத்தின் நிதியுதவியுடன் அவ்வூர் மக்களின் பங்களிப்புடன் சிறிய குளம் ஒன்று அமைக்கும் பணி முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

இந்தக் குளம் அமைப்பதற்கு பணி புரியும் ஒருவருக்கு மணித்தியாலத்துக்கு 100 ரூபாய் என்ற அடிப்படையில் ஒரு நாளைக்கு 4 மணித்தியால வேலை வழங்கப்படுகின்றது.

அக்கராயன் மத்தி, அக்கராயன் கிழக்கு, கெங்காதரன் குடியிருப்பு ஆகிய பகுதிகளைச் சேர்ந்த 40 பொதுமக்கள் இக்குளம் அமைப்பதற்கான பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.


இவர்களின் முயற்சியால் 100 மீற்றர் நீளமாக குளக்கட்டு தற்போது கட்டப்பட்டுள்ளது. வரட்சி காலத்தில் குடிநீர்ப் பிரச்சினையை எதிர் நோக்கும் இந்தக் கிராமத்துக்கு, இந்தக் குளம் புனரமைக்கப்படுவதன் மூலம் நிலத்தடி நீரைப் பேணக்கூடிய வாய்ப்புக்கள் உருவாகியுள்ளன.

இந்தக் குளம் அமைக்கப்பட்ட பின்னர், கெங்காதரன் குடியிருப்பிலுள்ள 160 குடும்பங்களின் மேட்டுநிலச் செய்கைக்கான வாய்ப்பும் ஏற்படும் என அக்கராயன் கிழக்கு கிராம அபிவி ருத்திச் சங்கம் தெரிவித்தது. (2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிறைவேற்று ஜனாதிபதி முறைதான் மகிந்த ராஜபக்ஷவினை கவிழ்த்தது

## முன்னாள் அமைச்சர் டியூ.சுட்டிக்காட்டு



**2005ஆம் ஆண்டு தனக்கு பின்னால் ஜனாதிப்தி தேர்தலில் வெற்றி பெறும் சாத்தியமுள்ள ஒரு நபர் மகிந்த மாத்திரமே என முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க தெரிவித்ததாக கம்யூனிஸ்ட் கட்சித் தலைவரும் எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினருமான டியூ. குணசேகர தெரிவித்துள்ளார். முன்னாள் ஜனாதிபதி மகிந்த ஒரு பிரசித்தமான தலைவர் மட்டுமல்ல, பலரால மதிக்கப்பட்டவர் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.**

இந்த நிறைவேற்று ஜனாதிபதி முறைதான் முன்னாள் ஜனாதிபதி மகிந்தவை பாழடித்தது எனவும் அவர் தெரிவித்தார்.

2005, 2010 தேர்தல் முடிவுகள் உட்பட 1977ஆம் ஆண்டு முதல் நடைபெற்ற தேர்தல் முடிவுகள் குறித்து மேற்கொண்ட ஆய்வில் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்புக்கு வட, கிழக்கில் தமிழ் வாக்குகள் அதிகரிக்கும் என்பதாகவிருந்[...]

ஆனால் கணிசமான அளவுக்கு அது காணப்படாததினால் மகிந்த வழக்கமாக முஸ்லிம் மக்களின் வாக்குகளில் 20 விகிதத்தை பெற்று வந்தார்.

எனினும் கடந்த ஜனவரி மாதம் நடைபெற்ற தேர்தலில் பொதுபல சேனாவின் செயற்பாடு காரணமாக முஸ்லிம் மக்கள் மகிந்தவுக்கு வாக்களிப்பதை நிராகரித்தனர்.

நடைபெற்ற ஜனாதிபதி தேர்தல் தொடர்பாக கலந்துரையாடுவதற்கு நான் முன்னாள் ஜனாதிபதியை மும்முறை சந்தித்தேன்.

இச்சந்திப்பின்போது 1994இற்குப் பிறகு பிறந்து முதல் முறையாக வா[...]ளிக்க தயாராகவுள்ள வாக்காளர்கள் ஆட்சியில் ஒரு மாற்றத்தை ஏற்படுத்த கூடும் என தெரிவித்தேன்.

மேலும் தாங்கள் விழாக்களில் பங்கெடுப்பதும், குழந்தைகளை முத்தமிடுவதும் போன்றவற்றைத்தான் செய்து கொண்டிருக்கிறீர்களே தவிர, அரசியல் செய்யவில்லை எனவும், எங்கள் ஆய்வுகளின்படி 11 மாவட்டங்களில் மாத்திரமே மகிந்த முன்னிலையில் இருப்பதாகவும் மீதமுள்ள இரு ஆட்சிக் காலங்களிலும் தீர்க்கப்படாத பிரச்சினைகளை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறும் அவரிடம் கூறினேன்.

எனினும் இது நாம் வெற்றி பெறுவதற்கு சரியான தருணம் என முன்னாள் ஜனாதிபதி என்னிடம் வலியுறுத்தினார்.

இதேவேளை கடந்த கால அரசாங்கத்தினால் ஷிராணி பண்டாரநாயக்கவை பிரதம நீதியரசர் பதவியில் இருந்து நீக்குவதற்கு முயற்சித்த போது நான் வித்தியாசமான நிலைப்பாட்டை எடுத்திருந்தேன்.

அவ்வேளை போராட்டக்காரர்கள் பிரதம நீதியரசரின் வீட்டுக்கு வெளியே முகாமிட்டிருந்தமையும், அவருக்கு எதிரான குற்றச்சாட்டுகளை விசாரிக்க நியமிக்கப்பட்டிருந்த பாராளுமன்றத் தெரிவுக் குழுவின் தலைவர் போராட்டக்காரர்களிடம் தொலைக்காட்சி, புகைப்படக் கருவி சகிதம் விஜயம் மேற்கொண்டிருந்தமையும் ஒரு தவறான செயல்.

தற்போதைய புதிய அரசாங்கமும் கிட்டத்தட்ட அதேபோன்றதொரு தவறைத்தான் செய்துள்ளது. ஜனாதிபதியினால் நியமிக்கப்படும் நீதியரசர்களை பாராளுமன்றத்தினால் மாத்திரமே அகற்றமுடியும்.

ஆனால் அவர்கள் இவ்விடயத்தை பாராளுமன்றத்தின் முன்பாக கொண்டுவந்து, மொஹான் பீரிசின் நியமனம் தவறானது என ஒரு தீர்மானத்தை நிறைவேற்றியிருக்க வேண்டும், அவ்வாறு செய்திருப்பின் பதவியிலிருந்த நீதியரசர் சிறிதளவு சுயமரியாதையுடன் வீட்டுக்குச் சென்றிருப்பார், நிறுவனத்தின் மதிப்பையும் சற்று கவனத்தில் எடுத்திருக்கலாம்.

மேலும் இவ்வாறானதொரு சூழ்நிலையில் பதவிக்கு வரும் அடுத்த நீதியரசருக்கும் ஒரு விதமான தர்மசங்கடம் ஏற்பட்டிருக்கும் என குணசேகர தெரிவித்துள்ளார்.

தற்போதைய பிரதம நீதியரசரை பதவி விலக்குவதும் ஷிராணி பண்டாரநாயக்கவை மீண்டும் பதவியில் அமர்த்துவதும் பாராளுமன்றத்தின் முன் கொண்டு வரப்பட்டிருக்க வேண்டும் என்பதே எனது கருத்தாக காணப்படுகின்றது என அவர் மேலும் தெரிவித்தார்.

கொழும்பு ஊடகமொன்றுக்கு வழங்கிய நேர்காணலில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-5)

# ஹக்கீம் திருட்டுத்தனமாக செயற்பட்டார்



திருட்டுத்தனமாக கிழக்கு மாகாணசபை முதலமைச்சர் தெரிவு தொடர்பில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பொதுச் செயலாளருடன் கலந்துரையாடிய ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம், இந்த விடயம் தொடர்பில் எமது கட்சியுடன் எவ்வித கருத்துப் பரிமாறல்களையும் செய்யவில்லை

இவ்வாறு அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் கொள்கை பரப்புச் செயலாளரும், கிழக்கு மாகாண சபையின் பிரதி தவிசாளருமான எம்.எஸ்.சுபைர் தெரிவித்துள்ளார். இது தொடர்பில் அவர் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் மேலும் தெரிவித்ததாவது, மத்திய அரசில் எமது கட்சி பங்காளியாகவுள்ளது. அதேபோல் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரசும் அதே ஆட்சியில் இருக்கின்றது. அதேபோல் கிழக்கு மாகாண சபையிலும் இரு கட்சிகளும் மிகவும் நெருக்கமாக இருந்து செயற்பட்டுவருகின்ற நிலையில், அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் தலைவர் றிசாத் பதியுதீனுடன் எவ்வித பேச்சுகளையும் நடத்தாது எமது கட்சி மாகாண சபை உறுப்பினர்களை வரவழைத்து கையொப்பமிடுமாறு முஸ்லிம் காங்கிரஸ் தலைமை கோரியது. கிழக்கில் முஸ்லிம் முதலமைச்சர் ஒருவர் இருக்க வேண்டும் என்பதில் எமது கட்சி உறுதியாக இருந்து வந்துள்ளது. அந்த முதலமைச்சர் பதவி முஸ்லிம் காங்கிரசுக்கு கொடுக்கப்பட வேண்டும் என்பதில் எமது தலைவர் உள்ளிட்ட நாங்கள் ஆர்வமாக இருந்து வந்துள்ளோம். ஆனால், இந்த முதலமைச்சர் தெரிவு தொடர்பில் திருட்டுத்தனமாக எவருக்கும் அறிவிக்கப்படாமல் பெயர் குறிப்பிட்டு அவருக்கு ஆதரவாக எமது கட்சியின் தலைவர் றிசாத் பதியுதீனின் இணக்கப்பாட்டுடன்தான் இந்த முதலமைச்சர் தெரிவு செய்யப்படுகின்றார் என்று கூறி எம்மை அழைத்து கையொப்பம் இடுமாறு கூறப்பட்டது. ஆனால், இது தொடர்பில் எமது தலைவருக்கு எவ்வித தகவல்களும் வழங்கப்படவில்லை என்பதை அறிந்து கொண்ட நான் இவ்வாறான பிழையான அணுகுமுறை தொடர்பில் எனது அதிருப்தியை வெளியிட்டதுடன் தலைமைத்துவத்தின் அனுமதியின்றி கையொப்பம் இடமுடியாது என்பதை தெரிவித்ததுடன் எமது கட்சியின் தலைவருக்கும் இது தொடர்பில் அறிவித்துள்ளேன் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-5)

# யாழ். நெடுந்தீவில் அனர்த்த முகாமைத்துவ செயற்பாடுகள்

நெடுந்தீவு பிரதேச சபையின் ஆளுகைக்குட்பட்ட இடங்களில் அனர்த்த முகாமைத்துவ செயற்திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டதாக நெடுந்தீவு பிரதேச சபைச் செயலாளர் எஸ்.சிறீ தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில், கடந்த ஆண்டு வைகாசி மாதம் முதல் கார்த்திகை மாதம் வரை 1300 குடும்பங்களுக்கு வறட்சிக்கால குடிநீர் வழங்கப்பட்டது.

அத்துடன், வனஜீவராசிகள் திணைக்களத்தின் உதவியுடன் குதிரைகள், ஏனைய கால்நடைகள் என்பவற்றுக்காக அமைக்கப்பட்ட தொட்டிகளுக்கும் குடிநீர் வழங்கப்பட்டது.

ஐயனார் கோயில், சாரப்பிட்டி, மணற்தறை மற்றும் வெட்டுகாடு ஆகிய பகுதிகளில் உள்ள கிணறுகளும் மணற்தறை கேணியும் கடந்த வருட இறுதியில் புனரமைக்கப்பட்டன.

அனர்த்த முன்னெச்சரிக்கை விழிப்புணர்வு மற்றும் பின்னரான அனர்த்த செயற்பாடுகள் என்பன தற்போது முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என அவர் மேலும் தெரிவித்தார். (இ-5)

# பிரிவுத்துயர் பகிர்வு



### கார்த்திகேசு நடராஜலிங்கம்

யாழ்.தென்மராட்சி மீசாலை மேற்கைப் பிறப்பிடமாகவும், கனடா North York ஐ வசிப்பிடமாகவும் கொண்ட கார்த்திகேசு நடராஜலிங்கம் கடந்த 4 ஆம் திகதி புதன்கிழமை அன்று அமெரிக்காவில் காலமானார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை திங்கட்கிழமை காலை 8 மணி தொடக்கம் முற்பகல் 11 மணி வரை Chapel Ridge Funeral Home, 8911 Woodbine Avenue, Markham, ON L3R 5G1, Canada இல் நடைபெற்று பின்னர் பூதவுடல் தகனம் செய்யப்படும்.



### திருமதி ஆறுமுகம் மகேஸ்வரி

யாழ்.கோப்பாய் வடக்கைப் பிறப்பிடமாகவும், கனடாவை வதிவிடமாகவும் கொண்ட ஆறுமுகம் மகேஸ்வரி கடந்த 5ஆம் திகதி அன்று காலமானார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை திங்கட்கிழமை காலை 8 மணி தொடக்கம் முற்பகல் 11 மணி வரை Chapel Ridge Funeral Home, 8911 Woodbine Ave nue, Markham, ON L3R 5G1, Canada என்னும் முகவரியில் நடைபெற்று பின்னர் பூதவுடல் தகனம் செய்யப்படும்.



### திருமதி கிறிஸ்ரீன் ஜெயமணி நீக்கிலஸ்

யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் ஈச்சமோட்டை, விதானையார் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கிறிஸ்ரீன் ஜெயமணி நீக்கிலஸ் கடந்த 31 ஆம் திகதி சனிக்கிழமை அன்று ஜேர்மனியில் காலமானார். அன்னாரின் பூதவுடல் நாளை 9ஆம் திகதி திங்கட்கிழமை ஜேர்மனியில் நல்லடக்கம் செய்யப்படும்.



### திருமதி றங்கநாதன் நீலாம்பிகை

யாழ்.பிறவுண் வீதியைப் பிறப்பிடமாகவும், கனடா Mississauga ஐ வசிப்பிடமாகவும் கொண்ட றங்கநாதன் நீலாம்பிகை கடந்த 2 ஆம் திகதி திங்கட்கிழமை அன்று காலமானார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று முற்பகல் 10 மணி தொடக்கம் நண்பகல் 12 மணி வரை Glen Oaks Funeral Home & Cemetery, 3164 Ninth Line, Oakville, ON L6H 7A8 Canada என்னும் முகவரியில் நடைபெற்று பின்னர் பூதவுடல் தகனம் செய்யப்படும்.




### திருமதி சிற்றம்பலம் சரஸ்வதிப்பிள்ளை

அத்தாய் பூநகரியை பிறப்பிடமாகவும், கச்சாய் வீதி கொடிகாமத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சிற்றம்பலம் சரஸ்வதிப்பிள்ளை நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை அன்று காலமானார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணியளவில் நடைபெற்று, பின்னர் பூதவுடல் பாலாவித்தாழ் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.



### ஐயம்பிள்ளை வீரகத்தி

நயினாதீவை பிறப்பிடமாகவும் அரியாலையை வதிவிடமாகவும் கொண்ட ஐயம்பிள்ளை வீரகத்தி நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை அன்று காலமானார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணியளவில் நடைபெற்று பின்னர் பூதவுடல் செம்மணி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.



### பரமகுருநாதன் தர்மகுலசிங்கம்

யாழ்.பண்டத்தரிப்பு சில்லாலையைப் பிறப்பிடமாகவும், லண்டன் Eastham ஐ வதிவிடமாகவும் கொண்ட பரமகுருநாதன் தர்மகுலசிங்கம் கடந்த 28ஆம் திகதி புதன்கிழமை அன்று காலமானார். அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை திங்கட்கிழமை நண்பகல் 12 மணி தொடக்கம் பிற்பகல் 4 மணிவரை Ravidasia Community Centre 26 Carlyle Road, Manor Park E12 6BN, UK என்னும் முகவரியில் நடைபெற்று பின்னர் பூதவுடல் தகனம் செய்யப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்னை அறிந்தால்

## திரை விமர்சனம்



சென்னையில் மிகப் பெரிய செல்வந்தராக இருக்கும் சுமனின் உடல் உறுப்புகள் செயல் இழந்து விட்டதால், அவருக்கு வேறு ஒரு வருடைய உடல் உறுப்புகளை பொருத்தியாக வேண்டும் என்ற கட்டாயம் ஏற்படுகிறது.

இந்நிலையில், பெண்கள் மற்றும் குழந்தைகளை கடத்தி அவர்களின் உடல் உறுப்புகளை விற்று, பணம் சம்பாதிக்கும் கும்பலை சேர்ந்த அருண் விஜய்யின் கும்பலிடம், சுமனுக்கு மாற்று உறுப்புகளை கொண்டு வரும் பணி தரப்படுகிறது.

அதன்படி, அமெரிக்காவில் வசித்து வரும் அனுஷ்காவின் உறுப்புகள் சுமனுக்கு பொருந்தும்படியாக இருப்பதால் அவளை கடத்த திட்டமிடுகின்றனர்.

இந்த கடத்தல் கும்பலின் திட்டத்தை தெரிந்து கொண்ட பொலிஸ் கமிஷனரான அஜித், அனுஷ்காவுக்கு தெரியாமலேயே அவரை காப்பாற்ற திட்டம் போடுகிறார்.

அதன்படி, அஜித்தும் அமெரிக்கா சென்று, அனுஷ்கா பயணம் செய்யும் விமானத்தின் இருக்கைக்கு பக்கத்திலேயே தானும் பயணிக்கும்படி ஏற்பாடு செய்கிறார்.

விமானத்திலேயே அனுஷ்காவிடம் சகஜமாக பழகும் அஜித்தை அனுஷ்காவுக்கு பிடித்துப் போய் விடுகிறது.

அவருடன் நட்பு வைத்துக் கொள்ள நினைக்கிறார். மறுநாள் குறிப்பிட்ட இடத்தில் தன்னை சந்திக்கலாம் என்று கூறிவிட்டு அவளை பிரிகிறார் அஜித். மறுநாள் அஜித் கூறிச் சென்ற இடத்துக்கு செல்லும் அனுஷ்காவை அருண் விஜய் ஆட்கள் கடத்த முயற்சிக்க, அவர்களிடமிருந்து அனுஷ்காவை காப்பாற்றுகிறார் அஜித்.

அஜித்தைத்தான் கொல்ல வந்திருப்பதாக நினைக்கும் அனுஷ்காவிடம், அவர்கள் உன்னைத் தான் கடத்த வந்தார்கள் என்று அஜித் கூறுகிறார். இதனால் ஆச்சர்யமடைகிறார் அனுஷ்கா.

அதன்பின், அருண் விஜய் கும்பலின் திட்டம் தனக்கு எப்படி தெரிய வந்தது என்பதை அனுஷ்காவிடம் விபரிக்கிறார் அஜித். இறுதியில், அருண் விஜய் கும்பலிடமிருந்து அனுஷ்காவை அஜித் காப்பாற்றினாரா? இல்லையா? என்பதே மீதிக்கதை.

பொலிஸ் கமிஷனராக வரும் அஜித், அந்த கதாபாத்திரத்திற்கு கச்சிதமாக பொருந்தியிருக்கிறார். வெவ்வேறு தோற்றங்களில் வரும் அஜித்தை, எந்த தோற்றத்தில் பார்த்தாலும் அழகாகவே தெரிகிறார். ஆவேசப்படும் காட்சிகளில் அழுத்தமான நடிப்பு.

முழுக்க முழுக்க கிரைம் திரில்லர் கதை என்பதால் கதாநாயகிகளுடன் ரொமான்ஸ் செய்ய இவருக்கு நேரம் இல்லை. அஜித் தோன்றும் ஒவ்வொரு காட்சியில் ரசிகர்களின் ஆரவாரம் தியேட்டரையே அதிர வைக்கிறது. அருண் விஜய்க்கு இந்த படத்தில் அஜித்துக்கு இணையான கதாபாத்திரம்.

அவருடைய தோற்றத்தை அப்படியே மாற்றி நடித்திருக்கிறார். இப்படத்திற்கு பிறகு தமிழ் சினிமாவில் அருண் விஜய்க்கு நிலையான இடம் இருக்கும் என நம்பலாம்.

அனுஷ்கா, திரிஷா இருவருக்குமே சரிசமமான கதாபாத்திரம். பரதநாட்டிய கலைஞராக வரும் திரிஷாவின் அழகு நம்மை மிகவும் கவர்கிறது.

ஒரு குடும்பப் பெண்ணாக மனதில் எளிதாக பதிகிறார். மாடர்ன் பெண்ணாக வரும் அனுஷ்காவும் நடிப்பில் போட்டி போட்டிருக்கிறார்.

பொலிஸ் அதிகாரியாக வரும் விவேக்குக்கு இப்படத்தில் காமெடி செய்ய வாய்ப்பு இல்லை. இருந்தாலும், குணச்சித்திர கதாபாத்திரத்தில் தனக்கே உரித்தான நடிப்பில் கைதட்டல் பெறுகிறார்.

கவுதம் மேனன் தனது முந்தைய படங்களான 'காக்க காக்க', 'வேட்டையாடு விளையாடு' பாணியிலான படமாகவே இப்படத்தையும் உருவாக்கியிருக்கிறார். ஆனால், அதிலிருந்து இப்படம் முற்றிலும் மாறுபட்டு இருக்கிறது.

மெதுவாக தொடங்கும் படம் செல்லச் செல்ல விறுவிறுப்பாகிறது. படத்தில் நடித்திருக்கும் அனைவரையும் அவர்களின் வழக்கமான தோற்றத்திலிருந்து மாறுபட்ட தோற்றத்தை தந்து, அதை ரசிக்கும்படி காட்சிப்படுத்தியிருக்கிறார்.

ஹரிஸ் ஜெயராஜ் இசையில் 'அதாரு உதாரு' பாடல் ரசிகர்களை ஆட்டம் போட வைக்கிறது. 'உனக்கு என்ன வேணும்' என்ற பாடலை இரு வெவ்வேறு மாதிரியாக கொடுத்திருந்தாலும் இரண்டுமே ரசிக்க வைக்கிறது.

பின்னணி இசையிலும் கூடுதல் கவனம் செலுத்தியிருப்பது தெரிகிறது. டான் மெகதூர் ஒளிப்பதிவில் ஒவ்வொரு காட்சியையும் படமாக்கிய விதம் அருமை.

மொத்தத்தில் 'என்னை அறிந்தால்' வெற்றி நிச்சயம்.



## அமெரிக்காவில் முதல் நாள் வசூல்

என்னை அறிந்தால் படம் நேற்று உலகம் முழுவதும் வெளிவந்து வசூல் வேட்டை நடத்தி வருகிறது.

இந்நிலையில் அமெரிக்காவின் பிரிமியர் ஷோவில் இப்படம் வசூலை வாரி குவித்துள்ளது.

என்னை அறிந்தால் படத்தை அங்கு அட்மாஸ் நிறுவனம் வெளியிட்டது.

இப்படம் முதல் நாள் மட்டும் 1,13,232 டொலர் வசூல் செய்துள்ளது.

இந்திய மதிப்பில் 70 இலட்சம் ரூபா என்பது குறிப்பிடத்தக்கது. இதுதான் அஜித்தின் திரைப்பயணத்தில் நம்பர் 1 வசூல் என்பது குறிப்பிடத்தக்கது.



## அஜித்தால் கேரளா சூப்பர் ஸ்டாருக்கு வந்த தலைவலி!

என்னை அறிந்தால் படம் உலகம் முழுவதும் ரிலிஸாகி மாபெரும் வசூல் வேட்டை நடத்தி வருகிறது. இப்படத்திற்கு தமிழகம் மட்டுமல்லாமல் கேரளாவிலும் நல்ல வரவேற்பு இருந்து வருகிறது.

கேரளாவில் இப்படம் இந்த வார இறுதி வரை ஹவுஸ் புல் ஆகிவிட்டது.

இந்நிலையில் இந்த வாரம் மம்முட்டி நடிப்பில் ஃபயர்மேன் என்ற படம் வருவதாக இருந்தது.

ஆனால், அஜித் படத்தின் வருகை, தன் படத்தின் வசூலை பாதிக்குமோ என்று எண்ணி, படத்தை அடுத்த வாரம் தள்ளி வைத்து விட்டாராம் மம்முட்டி.



## ஏ.ஆர்.ரஹ்மானுடன் இணைந்த உலகப் புகழ் பெற்ற இசைக் கலைஞர்கள்!

ஏ.ஆர்.ரஹ்மான் புகழ் ஏற்கனவே கடல் கடந்து சென்று விட்டது என்றே கூறலாம். அந்த வகையில் தற்போது இவர் முதன் முறையாக ஒரு ஈரானிய படத்திற்கு இசையமைக்கவுள்ளார். இப்படத்தின் இயக்குநர் 'சில்ட்ரன் ஆஃப் ஹெவன்' என்ற தரமான படத்தை எடுத்த மஜித் மஜிதிதான். இப்படத்தின் இசையமைப்புப் பணிகளுக்காக ஏ.ஆர். ரஹ்மான் அங்கேயே தங்கிவிட்டாராம். மேலும், இதில் உலகப் புகழ் பெற்ற பாலஸ்தீன இசை குழுவினரான லிட்ரையோ ஜோப்ரானுடன் ஏ.ஆர்.ரஹ்மான் இணைந்து பணியாற்றி வருகிறார். லி ட்ரையோ ஜோப்ரான் குழுவின் சகோதரர்களான சமீர், விஷ்ஷம், அட்னன் ஜோப்ரான் ஆகியோர் ஏ.ஆர்.ரஹ்மானுடன் இணைந்து விறுவிறுப்பாக இசையமைத்து வருகிறார்கள்.

## முதல் நாள் பாக்ஸ் ஆபிஸ் ! அஜித் சாதனை



என்னை அறிந்தால் படத்தின் பாக்ஸ் ஆபிஸ் வசூலை தான் தற்போது அனைவரும் எதிர்ப்பார்த்து கொண்டிருக்கின்றனர்.

இந்நிலையில் தற்போது படத்தின் முதல் நாள் வசூல் நிலவரம் வெளிவந்துள்ளது.

இப்படம் தமிழ் நாட்டில் மட்டும் 12.80 கோடி ரூ. கேரளாவில் 3.75 கோடி ரூ. கர்நாடகாவில் 2.4 கோடி ரூ. மற்ற மாநிலங்கள் 9.75 கோடி ரூ. ஓவர்சிஸில் 9 கோடி ரூபாய்க்கு மேல் வசூல் செய்துள்ளது.

இப்படத்தின் முதல் நாள் மொத்த வசூல் 30 கோடி ரூபாவை தாண்டியுள்ளது. இதன் மூலம் கத்தி, ஐ படத்தின் வசூலை என்னை அறிந்தால் முறியடித்துள்ளது.



## ஆந்திர ரசிகர்கள் அதிர்ச்சி



என்னை அறிந்தால் படம் தமிழகம் மட்டுமின்றி மற்ற மாநிலங்களிலும் நல்ல வரவேற்பு பெற்று வருகிறது.

இந்நிலையில் கேரளாவை தொடர்ந்து கர்நாடகாவிலும் இப்படத்தின் வசூல் நன்றாக வந்திருப்பதாக கூறப்படுகிறது. மேலும், இதே ஆர்வத்துடன் தான் ஆந்திர ரசிகர்களும் இருந்தனர். படத்தை எப்படியாவது பார்த்து விட வேண்டும் என்று அவர்கள் டிக்கெட் முன்பதிவு செய்ய தியேட்டர் ஒ ன்லைன் என முயற்சி செய்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மற்றவர்களை குறை சொல்லவும் கிண்டல் செய்யவும் அதிகநேரம் எடுக்கிறோம். ஆனால் நன்றி சொல்ல நேரம் ஒதுக்குவதில்லை. - ஓர் அறிஞர்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

# அதிகளவான இராணுவத்தை ஐ.நா படையில் இணைக்க திட்டம்

## பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கை இராணுவத்தில் அதிகளவானவர்களை இனிவரும் காலங்களில் ஐ.நா படையில் இணைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ருவான் விஜேவர்த்தன தெரிவித்துள்ளார்.

இரண்டு நாள் விஜயமாக வடபகுதிக்கு வருகை தந்த அமைச்சர் தலைமையிலான குழுவினர் நேற்று வவுனியாவில் அமைந்துள்ள முப்படைத் தலைமையகத்தில் இடம்பெற்ற இராணுவத்தினரின் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இந்த நாட்டில் இடம்பெற்ற கொடிய யுத்தத்தை வெற்றி கொண்டு புலிகளிடம் இருந்து நாட்டை மீட்ட இராணுவத்தினருக்கு நன்றி கூறும் அதேவேளை யுத்தத்தின் காரணமாக பாதிப்படைந்த மற்றும் உறவுகளை இழந்த இராணுவ குடும்பங்களுக்கு இந்த அரசாங்கம் உதவி செய்ய நடவடிக்கை எடுக்கும். புலிகள் சிறுவர்களை படையில் இணைத்தார்கள். ஆனால் இன்று அவ்வாறு இல்லை. அவர்கள் சுதந்திரமாக வாழ முடிகிறது. வானத்திலோ, கடலிலோ இராணுவ முகாம்களை அமைக்க முடியாது. தரையில் தான் அமைக்க முடியும். ஆகவே வடக்கில் இருந்து இராணுவ முகாம்கள் அகற்றப்படமாட்டாது. அவை தொடர்ந்தும் இருக்கும்.

தற்போதைய புதிய பட்ஜெட்டில் அரச உத்தியோகத்தர்களுக்கு சம்பள உயர்வுகள் வழங்கப்பட்டுள்ளது. அது இராணுவத்திற்கும் கிடைக்கும். எமது நாட்டு இராணுவம் வெளிநாடுகளில் சென்று பயிற்சிகளைப் பெற நடவடிக்கைகள் எடுக்கப்படும். அதேவேளை இனிவரும் காலங்களில் இலங்கை இராணுவத்தில் அதிகளவானவரை ஐ.நா பாதுகாப்பு படையில் இணைப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் தெரிவித்தார்.

இதேவேளை, வவுனியாவுக்கு விசேட உலங்குவானூர்தியில் வருகை தந்த அமைச்சரை வன்னிக் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் பொனிபஸ் பெரேரா மற்றும் இராணுவ அதிகாரிகள் இணைந்து வரவேற்றனர். இதன்போது அமைச்சர் வன்னி படைத் தலைமையகத்தில் அமைக்கப்பட்டிருந்த பொழுது போக்கு மண்டபத்தையும் திறந்து வைத்தார். (எ-250)

# தைப்பூச விழாவில் பொலிஸாரைத் தாக்கிய மூன்று தமிழர்கள் சிங்கப்பூரில் கைதாகினர்

(கொழும்பு)

இந்துக்களின் பண்டிகையான தைப்பூச விழா அண்மையில் கொண்டாடப்பட்டது. முருகன் கோவில்களில் இந்த விழா சிறப்பாக நடந்தது. அப்போது பக்தர்கள் உடலில் அலகு குத்தியும், காவடி எடுத்தும் முருகபெருமானுக்கு நேர்த்திக்கடன் செலுத்தினார்கள்.

சிங்கப்பூரில் இந்த விழா மிக விமரிசையாக கொண்டாடப்பட்டது. அதில் ஏராளமான தமிழர்கள் கலந்து கொண்டு தரிசனம் செய்தனர்.

இந்த விழாவில் மோதல் ஏற்பட்டது. அப்போது ராமச்சந்திர சந்திரமோகன் (வயது 32), ஜெயகுமார் கிருஷ்ணசாமி (வயது 28), குணசேகரன் ராஜேந்திரன் (வயது 33) ஆகிய 3 தமிழர்கள் கைது செய்யப்பட்டனர்.

பொலிஸாரை தாக்கியதாக இவர்கள் மீது புகார் செய்யப்பட்டுள்ளது. கைது செய்யப்பட்டவர்களில் ராமச்சந்திர சந்திரமோகனை சிங்கப்பூர் அரசு, கடவுச்சீட்டை ஒப்படைக்கும்படி உத்தரவிட்டுள்ளது. (இ-5)

# சிரிக்க வைத்த வில்லிசை மாமேதைக்கு அழுகண்ணீரால் அஞ்சலித்தோம்

சின்னமணி என்று அனைவராலும் அறியப்பட்ட வில்லிசை மாமன்னன் நா. கணபதிப்பிள்ளை அவர்கள் காலமாகிவிட்டார் என்ற செய்தி தமிழ் உலகத்திற்குப் பேரிழப்பைத் தருவதாகும்.

வில்லிசைக் கலையை தமிழ் உறவுகள் வாழும் நாடெங்கும் பரப்பிய பெருமை சின்னமணியையே சாரும். ஓர் ஒப்பற்ற கலைஞன். மக்களின் மனம் அறிந்து வில்லிசைக் கலையை மக்கள் மயப்படுத்திய மாமேதை. இன்று நம்மோடு இல்லை என்ற துயரத்தோடு நடந்து வந்த பாதையை திரும்பிப் பார்த்த வேளையில்,

முப்பது வருடங்களுக்கு முற்பட்ட நினைவுகள் இவை. கோயில் திருவிழாவுக்கு அடியார்களை வரவழைப்பதற்காக கலைநிகழ்ச்சிகளை ஒழுங்குபடுத்துவதில் திருவிழா உபயகாரர்கள் கடும் போட்டியிடுவர். தவில் நாதஸ்வரக் கச்சேரிகள், புகழ்பெற்ற நாடகங்கள், வில்லிசை இப்படியாக அந்தக் கலை நிகழ்வுகள் அமைந்திருக்கும்.

ஒலிபெருக்கி பொருத்தப்பட்ட வாகனம் ஊர் எல்லாம் ஓடிச் செல்லும். அடியார்களே! என்ற விளிப்போடு இரவுத் திருவிழாவில் நடைபெறும் கலை நிகழ்ச்சிகள் அறிவிக்கப்படும்.

அந்தக் கலை நிகழ்வில் கலாவிநோதன் சின்னமணியின் வில்லிசை என்ற அறிவிப்பு உற்சாகத்துடன் வெளிப்படுத்தப்படும்.

ஊர் கூடி இரவுத்திருவிழாவுக்கு செல்வதென்று முடிவு செய்யும். கோயிலின் முகப்பு அரங்கில் சிரித்த முகத்துடன் சின்னமணி,

...பாடறியோம்... படிப்பறியோம்... ஏடறியோம்...

எழுத்தறியோம்... கணீர் என்ற குரலிசையில் வில்லிசை ஆரம்பமாகும்.

அங்க அசைவு; சோகத்திற்கு அழுகை; மகிழ்ச்சிக்குச் சிரிப்பு... எந்தக் கதையைக் கூறவந்தாரோ அந்தக் கதையின் பாத்திரமாக அவர் தன்னை மாற்றிக் கொள்வார்.

சின்னமணியின் வில்லிசையை பின்பற்றி மாணவர்கள் பள்ளிகள் தோறும் வில்லுப்பாட்டு நிகழ்ச்சியை அரங்கேற்றுவர். கிராமத்துச் சிறுவர்கள் தங்கள் பொழுதுபோக்கு நிகழ்வாக வில்லிசைப் பார்கள்.

இப்படியாக சிறுவர்கள் முதல் பெரியவர்கள் வரை அனைவரிலும் வில்லிசை என்ற கலையை ஊட்டிவிட்ட பெருமை கலாபூசணம் கணபதிப்பிள்ளை அவர்களையே சாரும்.

சின்னமணி போன்ற ஒரு வில்லிசைக் கலைஞன் இந்த உலகில் எங்கும் இல்லை என்ற பெருமை எங்கள் மண்ணுக்கு உண்டு.

எல்லாக் கலைகளிலும் தமிழகம் தனக்கு ஒப்பாரும் மிக்காரும் இல்லாத கலைஞர்களை தன்னகத்தே கொண்டுள்ளது. ஆனால் வில்லிசையில் மட்டும் ஈழம் தன்னிகரில்லா கலைஞரை வைத்திருந்தது என்று கூறும் போது, சின்னமணி என்ற நாமத்தின் உச்சரிப்பு எங்கள் நெஞ்சை நிமிர்த்திக் கொள்ளும்.

அந்த புகழ்பூத்த வில்லிசை மாமேதை இன்று மீளாத்துயிலில். சின்னமணியின் வில்லிசையில் விழுந்து உழன்று சிரித்து இன்புற்ற உள்ளங்கள் அவரின் இழப்பால் நிச்சயம் கண்ணீர் சிந்தும்.

சின்னமணியின் மறைவு, ஈழத்தமிழர்கள் சிரிப்பதற்கான சந்தர்ப்பங்களை இறைவன் மட்டுப்படுத்தியுள்ளான் என்ற நினைப்பையே தருகிறது.

தமிழ் உறவுகள் வாழும் நாடெங்கும் சென்று வில்லிசையால் ஈழத்தமிழினத்தின் புகழ் பரப்பிய மாமேதையே போய்வா. உரிமையில்லா இந்த சிறுபான்மை இனம் இதைவிட வேறு எதைத்தான் சொல்ல முடியும்? ஆனாலும் ஒன்றை மட்டும் இவ்விடத்தில் கூறுவோம். தமிழினத்தின் தன்னாட்சியில் கணபதிப்பிள்ளை என்ற வில்லிசை மாமேதையின் வரலாறு பதிவாகி, பாடமாகி, கலையாகி நிலைபெறும். இது சத்தியம்.

# "எல்லோரும் எம்மைத்தேட எம்வாழ்வின் ஒரு நாளை உருவாக்குவோமா?"

இன்று எமக்குத்தரப்படும் பைபிளின் நற்செய்திப்பகுதி தேவையில் இருக்கிற ஒவ்வொருவருக்கும் தனது உதவி கிடைக்க வேண்டும் என்பதில் இயேசு உறுதியாக இருப்பதை எமக்கு தெளிவாக்குகிறது. இது பைபிளில் மாற்கு நற்செய்தி1:29-39பகுதியிலிருந்து எடுக்கப்படுகின்றது. இயேசு எண்ணிலடங்கா மக்களைக் குணமாக்கி நலமளித்த தரவுகளை இன்றைய பைபிள பகுதியில் பதிவு செய்திருக்கிறார் மாற்கு. தொழுகைக்கூடம், நண்பர் இல்லம், வீதி என எங்கே எல்லாம் தனது உதவி மக்களுக்கு தேவை என அவர் உணர்கிறரோ அங்கெல்லாம் சென்று உதவி செய்வதுதான் இயேசுவின் பணியாக இருந்தது. மனிதத்

## பரமபிதா காட்டிய பாதை


தேவையை நிறைவேற்றுவதற்கு, அவர் நாளோ, நேரமோ, இடமோ அல்லது யார் எவரொன்றோ பார்க்கவில்லை. தேவையைப் பூர்த்தி செய்வதில் கவனத்தோடு இருந்தார். அதுமட்டுமல்ல, எமக்கு ஒரு நல்ல பாடத்தையும் கற்றுத்தருகிறார் உதவி என்பது நாளோ, இடமோ, ஆளோ பார்த்து செய்வதல்ல. தேவையை நிறைவேற்றுவதாக இருக்க வேண்டும். உதவி செய்வதற்கு நமக்கு எதுவும் தடையாக இருக்கக்கூடாது.

வாழ்வு என்பது இறைவன் நமக்கு கொடுத்த மிகப்பெரிய கொடை. அந்த வாழ்வை நமக்காக மட்டும் வாழாமல் மற்றவர்களுக்கு பயன்தரக்கூடிய வகையிலே வாழ்வதுதான் வாழ்வின் நோக்கம் என்பதை இயேசு வாழ்ந்து காட்டி நம்மையும் வாழ அழைப்பு விடுக்கிறார். இயேசுவோடு இருந்த சீடர்கள் இந்தப்பாடத்தைக் கற்றுக் கொண் டபிறகுதான், துணிவோடு இந்த உலகமெங்கிலும் இயேசுவின் நற்செய்தியை அறிவிக்க எதையும் இழக்கத் தயாரானார்கள்.

இயேசு இறையாட்சிப் பணி ஆற்றிய இடங்களில் முக்கியமான ஒன்று கப்பர்நாகும் ஊர் ஆகும். அங்கே சீமோன் பேதுருவின் வீடு இருந்தது. இயேசு அங்குச் செல்வது வழக்கம். சீமோனுடைய மாமியாருக்குக் காய்ச்சல். இயேசு நோயாளருக்கு நலமளிக்கிறார் என்னும் செய்தி ஏற்கெனவே பரவியிருந்தது. எனவே, சீமோனுடைய மாமியாருக்கு நலமளிக்க வேண்டும் என இயேசுவைக் கேட்கிறார்கள். இயேசு கையைப் பிடித்து அவரைத் தூக்கவே காய்ச்சல் நீங்குகிறது. நலம் பெற்ற அப்பெண்மணி இயேசுவுக்கும் அவரோடு இருந்தவர்களுக்கும் பணிவிடை செய்தார்.

இயேசுவின் மீட்புப் பணி நம்மைத் தீமையிலிருந்து விடுவிப்பதோடு நாம் பிறரை முழு மனத்தோடு அன்புசெய்ய நமக்கு சக்தியையும் வழங்குகிறது. சீமோனின் மாமியார் இதற்கு ஒரு முன்மாதிரி எனலாம். அவருக்கு ஏற்பட்ட தீமை காய்ச்சலாக வெளிப்பட்டது. இயேசு அவரை சந்தித்து, அவரை தொட்ட நேரமே அத்தீமையிலிருந்து அவர் விடுதலை பெற்றது, இவ்வாறு நலம் பெற்ற அவர் ஒரு புதிய மனிதராக மாறுகிறார். இயேசுவுக்கும் அவரில் நம்பிக்கைகொண்டோருக்கும் பணி விடை செய்ய அவர் திறம் பெறுகிறார். நாமும் நலம் பெற்ற மனிதராக, பிறருக்கு நலம் கொணரும் மனிதராக மாறிட அழைக்கப்படுகிறோம்.

பேதுருவின் வீட்டிற்கு களைப்பு மற்றும் பசியோடு சென்ற இயேசுவுக்கு, அங்கே ஒரு பணி காத்திருக்கிறது. இயேசு எரிச்சலடையவில்லை. எப்போதுமே, எந்த நேரமும் தனது பணி மற்றவர்களுக்காக இருக்க வேண்டும் என்பதில், இயேசு கண்ணும் கருத்துமாக இருக்கிறார். இயேசு பேய்களை ஓட்டி, பிணியாளர்களைக் குணப்படுத்தினார். இயேசு வாழ்ந்த காலத்தில், பேய்களை ஓட்டுகின்ற போதகர்கள் பல மணி நேரம் ஜெபிப்பதிலும், செய்முறைகளிலும் செலவிட்டனர்.



ஆனால், இயேசு தனது ஒருவார்ததையின் மூலம குணம் தருகிறார். தான் செய்வதைப்பார்த்து கைதட்ட, மக்கள் கூட்டம் இருக்க வேண்டும் என்று எண்ணும் போதகர்களைப்

ம.பிரான்சிஸ்க்
கத்தோலிக்க சுதந்திர பத்திரிகையாளர்

போல, இயேசு இருக்க வில்லை. மக்களுக்கு நன்மை பயக்கும் என்றால், அவர் அதனைச் செய்கிறார்.

இயேசுவை எல்லோரும் தேடிட காரணம் அவரது போதனை புது வாழ்வுக்குப் புரட்சிப் பாதை அமைத்தது. அவர் தொட்டவர்களின் வாழ்க்கை துலங்கியது. பல்வேறு பிணிகளில் வருந்தியவர்கள் குணமடைந்தார்கள். பேய்களை விரட்டினார். மனம் நொந்தவர்கள் நொடிந்தவர்கள் அவரின் நற்செய்தியால் ஆறுதல் பெற்றனர். பல ஊர்கள் நகரங்கள் பலனடைந்தன.

பின்னர் அவரை தேடமாட்டார்களா, என்ன? எல்லாரும் எங்களைத் தேடிக் கொண்டிருக்கிறார்களா? எல்லாரும் எங்களைத் தேடுகிறார்கள் என்றால் எங்களுக்கும் எங்களைப் படைத்த இறைவனுக்கும் மகிழ்ச்சி அல்லவா? எங்களால் அவர்கள் எல்லோரும் பல நன்மைகளை அடைந்துள்ளதால், அடைய விரும்புவதால் எங்களைத் தேடுகிறார்கள். எல்லோரும் எம்மைத்தேட எம் வாழ்வின்ஒரு நாளை உருவாக்குவோமா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகக் கிண்ணம் ஒரு பார்வை...



முதல் முறையாக அர்ஜுன ரணதுங்க தலைமையிலான இலங்கை அணி 1996 ஆம் ஆண்டு இலங்கைக்கு முதலாவது உலகக் கிண்ணத்தை பெற்றுக் கொடுத்தது.

1996 உலக கோப்பை கிரிக்கெட் மீது இந்தியர்களுக்கு பெரிய எதிர்பார்ப்பு இருந்தது. இந்திய துணை கண்டத்தில் உலக கோப்பை தொடர் நடந்ததுதான் அதற்கு காரணம். இந்தியா, பாகிஸ்தான், இலங்கை நாடுகள் கூட்டாக இந்த தொடரை நடத்தின.

அதிக பட்சமாக இந்தியாவில் 17 போட்டிகள் நடந்தன. இந்தியா முதல் ஆட்டத்தில் கத்து குட்டியான கென்யாவை 7 விக்கெட் வித்தியாசத்தில் வென்றது. சச்சின் ஆட்டமிழக்காமல் 127 ஓட்டங்கள் விளாசினார். மேற்கிந்திய தீவை 5 விக்கெட் வித்தியாசத்தில் வீழ்த்தியது. அவுஸ்திரேலியாவுக்கு எதிராக, 259 ஓட்டங்களை துரத்திய இந்தியா, 242 ஓட்டங்களுக்கு ஓல் அவுட்டாகி தோற்றது. சச்சின் 90 ஓட்டங்கள் குவித்தது நம்மவர்களுக்கு சற்றே ஆறுதலாக அமைந்தது. இலங்கைக்கு எதிரான போட்டியில் சச்சின் சதத்தின் உதவியுடன் இந்தியா 271 ஓட்டங்கள் குவித்தது. இலங்கை 272 ஓட்டங்கள் எடுத்து ஆறு விக்கெட் வித்தியாசத்தில் வென்றது.



கடைசி லீக் ஆட்டத்தில் இந்தியா, சிம்பாவேயை 40 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வீழ்த்தியது. இலங்கையில் நடந்த குண்டு வெடிப்பு காரணமாக அவுஸ்திரேலியா, மேற்கிந்திய தீவு நாடுகள் வீரர்களை இலங்கைக்கு அனுப்ப மறுத்தன. அந்த போட்டிகளில் இலங்கை வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்டது. ஏ பிரிவில் மூன்றாமிடம் பிடித்த இந்தியா, காலிறுதியில் பரம எதிரியான பாகிஸ்தானுடன் மோதியது. பெங்களூரில் நடந்த போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய இந்தியா 287 ஓட்டங்கள் குவித்தது. ஜடேஜாவின் அதிரடியால் கடைசி 4 ஓவர்களில் 57 ஓட்டங்களை சேர்த்தது. மெதுவாக பந்து வீசியதால் பாகிஸ்தானுக்கு ஒரு ஓவர் குறைக்கப்பட்டது. சோகைல்-அன்வர் ஜோடி, 10 ஓவர்களில் 84 ஓட்டங்கள் சேர்த்து கொடுத்த அதிரடி துவக்கத்தை, பின்வரிசை துடுப்பாட்டத்தை பயன்படுத்த தவறியதால், 49 ஓவர்களில் 248 ஓட்டங்களை மட்டுமே எடுத்து தோற்றது. இந்தியா அரையிறுதிக்கு முன்னேறியதும் ரசிகர்கள் மகிழ்ச்சி ஆரவாரம் செய்தனர். கொல்கத்தா ஈடன் கார்டன் மைதானத்தில் ஒரு இலட்சம் ரசிகர்கள் முன்னிலையில், இந்தியா, இலங்கையுடன் மோதியது. 252 ஓட்டங்களை விரட்டிய இந்தியா ஒரு கட்டத்தில் ஒரு விக்கெட் இழப்பிற்கு 98 ஓட்டங்கள் என வலுவான நிலையில் இருந்தது. சச்சின்-மஞ்ச்ரேக்கர் ஜோடி, இரண்டாவது விக்கெட்டிற்கு 90 ஓட்டங்கள் சேர்த்து அசத்தியது. சச்சின் 65 ஓட்டங்களில் அவுட்டாக துடுப்பாட்ட அணி வகுப்பு தொடங்கியது. 34.1 ஓவரில் 120 ஓட்டங்க ளுக்கு 8 விக்கெட்டுகளை இழந்து இந்தியா தோல்வியின் பிடியில் சிக்கியது.



துடுப்பாட்டங்களின் மோசமான ஆட்டத்தை எதிர்பார்க்காத கொல்கத்தா ரசிகர்கள், தண்ணீர் போத்தல்களையும், பழங்களையும் களத்தில் வீசி கொந்தளிப்பில் ஈடுபட்டனர்.

கேலரியில் ஆங்காங்கே தீ வைத்தனர். ஆட்டத்தை தொடர முடியாததால் இலங்கை வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்டது. மற்றொரு அரையிறுதியில் அவுஸ்திரேலியா 5 ஓட்டங்கள் வித்தியாசத்தில், மேற்கிந்திய தீவை வீழ்த்தியது. லாகூரில் நடந்த இறுதி போட்டியில், அவுஸ்திரேலியா 241 ஓட்டங்கள் எடுத்தது. இலங்கைக்கு தொடக்கத்திலேயே அதிர்ச்சி காத்திருந்தது.

ஜெயசூர்யா 9 ஓட்டங்களிலும் கலுவிதர்னா 6 ஓட்டங்களிலும் அவுட் ஆனார்கள். மூன்றாவது விக்கெட்டுக்கு குருசிங்கா-அரவிந்தா டி சில்வா ஜோடி 125 ஓட்டங்கள் சேர்த்து அசத்தியது. குருசிங்கா 65 ஓட்டங்களில் வெளியேற, கப்டன் ரணதுங்கா ஒத்துழைப்புடன் அர விந்த டி சில்வா சதம் கடந்தார். இறுதியில் இலங்கை 46.2 ஓவர்களில் 3 விக்கெட் இழப்பிற்கு 245 ஓட்டங்கள் குவித்து, முதல் முறையாக உலக கோப்பையை வென்றது.

### முதல் முறை

உலக கோப்பையை நடத்திய நாடு, கோப்பையை வெல்வது இதுவே முதல் முறை. மேலும் உலக கோப்பை இறுதி போட்டியில் இரண்டாவது பேட்டிங் செய்து வெற்றி பெற்ற முதல் அணி என்ற சாதனையையும் இலங்கை படைத்தது. இதற்கு முந்தைய 5 உலக கோப்பை தொடர்களில் இலங்கை மொத்தமாக 4 வெற்றிகளை மட்டுமே பெற்றிருந்தது.

### சச்சின்... சச்சின்...

தொடர் நாயகன் விருதை இலங்கையின் ஜெயசூர்யா தட்டி சென்றாலும், ஓட்டங்கள் குவிப்பில் மாஸ்டர் பிளாஸ்டர் சச்சின் டெண்டுல்கர் 523 ஓட்டங்கள் குவித்து முதலிடத்தை பிடித்தார். விக்கெட் வேட்டையில் அனில் கும்ப்ளே 15 விக்கெட் வீழ்த்தி, முதலிடம் பிடித்தார்.




# கழுகுகள் விளையாட்டுக் கழகத்தின் மென்பந்தாட்ட சுற்றுப் போட்டி










(யாழ்ப்பாணம்)

வல்வெட்டித்துறை நெற்கொழு கழுகுகள் விளையாட்டுக் கழகம் நடத்திய மென்பந்து துடுப்பாட்ட சுற்றுப் போட்டியின் இறுதியாட்டமும் பரிசளிப்பு விழாவும் இன்றைய தினம் கழுகுகள் விளையாட்டுக்கழக மைதானத்தில் பிற்பகல் 2 மணியளிவில் தலைவர் கே.சதீஸ் தலைமையில் நடைபெறவுள்ளது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக பாராளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன், சிறப்பு விருந்தினர்களாக பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றின் பதில் நீதவான் சிரேஷ்ட சட்டத்தரணி திருமதி உருத்திரேஸ்வரன் விஜயராணி, கிழக்கு பல்கலைக்கழக விரிவுரையாளர் எஸ்.ரகுராம், வடமராட்சி கல்வி வலய உதவிப் பணிப்பாளர் எஸ். செல்வக்குமரன், கெருடாவில் வடக்கு கிராம சேவையாளர் டி. தேவகுமார் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

இறுதிப் போட்டியில் கரவெட்டி ஞானம்ஸ் எதிர் வதிரி சிறிமுருகனும், இணுவில் கலையொளி எதிர் இமையாணன் இளைஞர் அணியும் அல்வாய் நியூபவர் எதிர் கொக்குவில் காமாட்சியும் மோதவுள்ளன.

சிறப்பு காட்சிப் போட்டியாக யாழ். முன்னணி வீரர்கள் எதிர் வடமராட்சி முன்னணி வீரர்கள் மோதும் உதைபந்தாட்ட போட்டியும் இடம்பெறவுள்ளது. (க)










Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மீள்குடியேற்றம்...

புதிய அரசாங்கத்தின் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சராக பதவியேற்றுள்ள ருவான் விஜேவர்த்தன வடக்கு கிழக்குப் பிரதேசங்களுக்கு மூன்று நாள் பயணம் ஒன்றை மேற்கொண்டு நேற்று வவுனியாவிற்கு சென்றார்.

வன்னி ஆயுதப்படைகளின் தலைமையகத்தில் தமக்களிக்கப்பட்ட இராணுவ மரியாதை அணிவகுப்பின் பின்னர் படையினர் மத்தியில் உரையாற்றியிருந்த பாதுகாப்பு அமைச்சரிடம், இராணுவ அதியுயர் பாதுகாப்பு வலயத்தில் இருந்து இடம்பெயர்ந்துள்ள மக்களின் மீள்குடியேற்றம் குறித்து செய்தியாளர்கள் கேள்வி எழுப்பினர்.

அதற்குப் பதிலளித்த அமைச்சர், இடம்பெயர்ந்த மக்களை மீள்குடியேற்றுவது தொடர்பில் ஜனாதிபதியும், புதிய பிரதமரும் அக்கறை கொண்டிருக்கின்றார்கள். அதியுயர் பாதுகாப்பு வலயத்தில் இருந்து இடம்பெயர்ந்த மக்களை மீள்குடியேற்றுவது தொடர்பில் கலந்துரையாடல்களை நடத்தி அந்த மக்களின் பிரச்சினைகளுக்கு உரிய தீர்வு காணப்படும் என்று பதிலளித்தார்.

இடம்பெயர்ந்துள்ள மக்களை மீள்குடியேற்ற வேண்டும் என்பதற்காக தமிழ் மக்களினதும் ஏனைய மக்களினதும் பாதுகாப்புக்காக அமைக்கப்பட்டுள்ள இராணுவ முகாம்களை அகற்ற வேண்டியதில்லை. அதேபோன்று தற்போது வடக்கு கிழக்குப் பிரதேசங்களில் நிலைகொண்டுள்ள படையணிகளைக் குறைக்க வேண்டிய அவசியமும் இல்லை என்றார் ருவான் விஜேவர்த்தன.

இது தொடர்பில் வடக்கில் உள்ள மக்களுடனும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினருடனும் ஏனைய தரப்பினருடனும் கலந்துபேசி உரிய தீர்வு காணப்படும் என்றும் பாதுகாப்பு அமைச்சர் ருவான் விஜேவர்த்தன தெரிவித்தார்.

வெள்ளியன்று யாழ்ப்பாணத்திற்குச் வந்த அவர், நேற்று கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா ஆகிய மாவட்டங்களின் ஆயுதப்படைகளின் தலைமையகங்களுக்கு விஜயம் செய்து படையினர் மத்தியில் உரையாற்றியிருந்தார். இன்று அவர் திருகோணமலை, மட்டக்களப்பு உள்ளிட்ட கிழக்கு மாகாணத்திற்கு விஜயம் செய்யவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-11)

## ஜனாதிபதியை...

கட்சியைச் சேர்ந்த கிழக்கு மாகாண சபை உறுப்பினர் இனிய பாரதி என்றழைக்கப்படும் புஸ்பகுமார் தெரிவித்தார்.

இச்சந்திப்பின்போது, கிழக்கு மாகாணசபை ஆட்சி தொடர்பில் விரிவாக ஆராயப்பட்டதுடன, மட்டக்களப்பு மாவட்டத்தில் தொடர்ந்தும் பல அபிவிருத்தித் திட்டங்களை முன்னெடுப்பது தொடர்பாகவும் தற்கால, எதிர்காலங்களில் அரசியல் முன்னெடுப்புக்கள் மற்றும் கிழக்கு மாகாணசபை விடயத்தில் கிழக்கு தமிழ் மக்களின் எதிர்பார்ப்புக்கள் தொடர்பாகவும் ஆராயப்பட்டதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். இச்சந்திப்பில் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் செயலாளர் சுசில் பிரேமஜெயந்த, தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் தலைவர் சி.சந்திரகாந்தன், பிரதித்தலைவர் யோகவேள், செயலாளர் பூ.பிரசாந்தன, கட்சியின் கொள்கை பரப்பு செயலாளர் ஆஷாத் மௌலானா, கிழக்கு மாகாணசபை உறுப்பினர் புஸ்பகுமார் ஆகியோர் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது. (எ-11)

## பிரதமரின்...

மேற்கொள்ளப்பட வேண்டுமென பரிந்துரை செய்யப்படவுள்ளது.

ஜனாதிபதியின் பதவிக் காலத்தை பத்து ஆண்டுகளுக்கு வரையறுக்கப்பட வேண்டுமென ஏற்கெனவே யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது.

இதற்கு சமாந்தரமாக பிரதமர், முதலமைச்சர் மற்றும் அமைச்சர்களின் பதவிக் காலங்களும் வரையறுக்கப்பட வேண்டுமென ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் கோரிக்கை முன்வைக்கத் திட்டமிட்டுள்ளது.

எதிர்வரும் 14 ஆம் திகதி நடைபெறும் சுதந்திரக் கட்சியின் மத்திய செயற்குழுக் கூட்டத்தில் இது குறித்த யோசனைகள் முன்வைக்கப்பட உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (எ-11)

## வாடகை வீட்டில்...

எதிர்வரும் பொதுத் தேர்தலில் போட்டியிடும் நோக்கத்தில் அவர் அங்கு குடியேறியுள்ளதாக பேசப்படுகிறது.

கோத்தபாய அரசியலில் ஈடுபடுவது அவரது தனிப்பட்ட உரிமை. அவரது சொத்துக்கள் தொடர்பாகவே கேள்விகள் எழுந்துள்ளதாக சிங்கள இணையத்தளம் ஒன்று குறிப்பிட்டுள்ளது.

முன்னைய அரசாங்கத்தில் பாதுகாப்புச் செயலாளராக கடமையாற்றிய அரச அதிகாரி ஒருவர் எப்படி மாதம் 12 லட்சம் ரூபாயை வீட்டு வாடகையாக செலுத்த முடியும் என்ற கேள்வி எழுந்துள்ளது.

இந்த பெருந்தொகை பணத்தை வாடகையாக செலுத்தும் அளவுக்கு எப்படி அவருக்கு சொத்துக்கள் கிடைத்தன என்பதும் பாரதூரமான பிரச்சினையாகும் என அந்த இணையத்தளம் கூறியுள்ளது. (எ-11)

## இலங்கை...

பிட்டிருந்தார்.

இதன்போது இலங்கை மியான்மார் மற்றும் துனிசியா ஆகிய நாடுகளில் ஏற்பட்டுள்ள மாற்றங்களைச்சுட்டிக்காட்டிய அவர், இந்நாடுகளின் வெளிப்படையான, ஜனநாயக சமூகங்களை உருவாக்க அமெரிக்கா உதவும் என தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில்அவர்மேலும்குறிப்பிடு கையில், இந்த நேரத்தில்ஒவ்வொரு பிராந்திய த்திலும் உள்ள மக்கள்தமது அரசாங்கங்க ளிடம்இருந்து அதிகளவு சுதந்திரத்தையும, பொறுப்புக்கூறலையும் எதிர்பார்க்கின்றனர்.

ஜனநாயகம் மற்றும் மனிதவுரிமைகளை பாதுகாப்பது, ஊழலுக்கு எதிரான நடவடிக்கை, வெளிப்படையான அரசாங்கத்தை ஊக்குவித் தல் மற்றும்குடியியல் சமூகத்துடன்இணைந்து நிற்பது ஆகியவையே எமது மூலோபாயமாகும்.

நெருக்கடிகளுக்கு உள்ளாகும் நெறிமுறைகளைப்பாதுகாத்துஜனநாயகத்தைஏற்படுத்து வதற்கு நாம்ஆதரவு அளிப்போம். தாக்குத லுக்கு உள்ளாகும் மக்களையும், அரசசார்பற்ற நிறுவனங்களையும் பாதுகாக்க அமெரிக்கா உதவும்என்று சூசன் ரைஸ் மேலும்தெரிவித்துள்ளார். (எ-11)

## முன்னாள்...

முஸ்லிம்கள் சிலருக்கு முன்னால் சுதந்திர தினத்தை அனுஷ்டித்து விட்டு சூரா பேரவைக்கு சென்று விரிவுரையாற்றிய எம்மை நாய் சேனா என்று கூறியுள்ளார்.

முஸ்லிம் அமைப்பொன்றின் விரிவுரையில் அவர் இதனை தெரிவித்திருப்பது என்பது இவருக்கு சிறுபான்மை மேனியா இருப்பதை காட்டுகிறது. பெரும்பான்மை பற்றி அம்மையாரிடம் எந்த கதையும் இல்லை.

பௌத்தர்களுக்கு ஏற்படும் அநீதிகள் தொடர்பில் இவர்களுக்கு எந்த அக்கறையுமில்லை. நாட்டில் வெற்றி பெற்றிருப்பது மைத்திரிபால சிறிசேன அல்ல. நாட்டுக்கு எதிராக வேலை செய்தவர்களே வெற்றி பெற்றுள்ளனர்.

இது பிரபாகரனை விடுதலை போராளி என உலகத்திற்கு கூறியவர்களின் வெற்றி. இதனால், இவர்கள் தற்போது நிம்மதியாக நித்திரை கொள்வார்கள் எனவும் ஞானசார தேரர் குறிப்பிட்டுள்ளார். (எ-11)

## சி.சு.கவுக்கு...

யுள்ள சிலரை இணைத்து கொண்டு மகிந்த ராஜபக்ஷ தலைமையில் புதிய அரசியல் முன்னணியை உருவாக்கும் முயற்சி தோல்வியடைந்துள்ள நிலையிலேயே விமல் வீரவன்ஸ உள்ளிட்ட அணி இவ்வாறு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் இணைய தயாராகி வருகின்றதாக தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பாக அண்மையில் நடைபெற்ற கலந்துரையாடல் ஒன்றில், புதிய அரசியல் முன்னணிக்கு பதிலாக ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அல்லது ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் இணைந்து தேர்தலில் போட்டியிட முயற்சிக்க வேண்டும் என உதய கம்மன்பில மற்றும் தினேஷ் குணவர்த்தன ஆகியோர் தெரிவித்துள்ளனர். (எ-11)


## மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி



### ஐயாகுட்டி கனகரட்ணம்

அன்னாரின் 3-ம் ஆண்டு நினைவஞ்சலி இன்று அவரது இல்லத்தில் நடைபெற்று தொடர்ந்து மதிய போசனம் இடம்பெறும். இதில் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

காந்தி வீதி,
கொக்குவில் மேற்கு, கொக்குவில்

தகவல்:- குடும்பத்தினர். (9463)

## மரண அறிவித்தல்

### செல்லர் சரவணமுத்து



ஆனைக்கோட்டையைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட செல்லர் சரவணமுத்து நேற்று (07.02.2015) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லர்-சின்னத்தங்கத்தின் மகனும், சகுந்தலாதேவியின் அன்புக் கணவரும், சிந்தாமணி மற்றும் காலஞ்சென்றவர்களான நாகம்மா, சின்னம்மா, சிவக்கொழுந்து, பொன்னம்மா ஆகியோரின் சகோதரரும் சண்முகநாதன் (J.P) கதிர்காமநாதன் (டென்மார்க்), பரமநாதன், தங்கராணி, கமலராணி, பத்மநாதன் (R.D.A) ஆகியோரின் பாசமிகு தந்தையும், குணவதி (அதிபர்-புதுமடம் RCTM), அருள்மொழி (டென்மார்க்), புஸ்பமலர், மணிவண்ணன் (கனடா), லதாவதி (ஆசிரியர்-உயரப்புலம் குணபாலன்) ஆகியோரின் மாமனாரும், பிரபுசங்கர், அபிலாசா, அஜன், அகிலன், அனுசன், இளமதி, ஆதிரை, யாழினி, இணையாள், சரவணன், லக்சாயினி, கரணி ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08.02.2015) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைக்காக பூதவுடல் பி.ப 2 மணிக்கு காக்கைதீவு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

"சங்கராபரணம்"
சுழாவடி கிழக்கு, ஆனைக்கோட்டை. (சி-058)

தகவல்:

## மரண அறிவித்தல்

### மார்க்கண்டு சண்முகநாதன்

(ராஜன் வெதுப்பக உரிமையாளர்)



வியாபாரிமூலையைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட மார்க்கண்டு சண்முகநாதன் நேற்று 07.02.2015 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மார்க்கண்டு தங்கம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான கந்தவனம்-செங்கமலம் தம்பதியரின் மருமகனும், பானுமதியின் (யா/அல்வாய் ஸ்ரீலங்கா வித்தியாசாலை ஆசிரியர்) பாசமிகு கணவரும், குகதர்சன், குகதர்சினி ஆகியோரின் அன்புத் தந்தையும், வைரவநாதன், விமலாதேவி, வசந்தாதேவி (சுவீடன்), யோகநாதன் (ஹொலண்ட்), சுசீலாதேவி, லிங்கநாதன் (டென்மார்க்), ஜெயதேவி (சுவீடன்), மஞ்சுளாதேவி (பின்லாந்து) ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று 08.02.2015 ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக சுப்பர்மடம் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

வியாபாரிமூலை, பருத்தித்துறை.
0773148563 (சி-057)

தகவல்: குடும்பத்தினர்


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

இலவச ஆங்கிலக் கற்கைநெறி
வகுப்புக்கள்
(3 Months) 2nd batch
பாடசாலை செல்வோர்,
பாடசாலை விட்டுவிலகியோர்,
தொழில்புரிவோர்
இணைந்து கொள்ளலாம்
(C-055)
ஆரம்பம் March 2015
தொடர்புகளுக்கு: 0212227560

ஆங்கில ஆசிரியர்
தேவை
எமது நிறுவனத்துக்கு ஆங்கிலம்
கற்பிக்கக்கூடிய பெண்
ஆசிரியர்கள் தேவை.
கிளிநொச்சி, தர்மபுரம்,
விசுவமடு பகுதியில்
வசிப்பவர்கள் விரும்பத்தக்கது.
தொடர்புகளுக்கு:
(C-055) 0212227560/
0766901516

# திருமண அழைப்பு

அன்புடையீர்,

நிகழும் மங்களகரமான ஜய வருசம் தை மாதம் 25 ஆம் நாள் இன்று (08.02.2015) ஞாயிற்றுக்கிழமை காலை 9.35 மணி முதல் 11.05 மணி வரையுள்ள உத்தர நட்சத்திரமும், கன்னி லக்கினமும், அமிர்த யோகமும் கூடிய சுபமுகூர்த்த சுபவேளையில்

திரு. திருமதி முத்துக்குமாரசாமி தம்பதிகளின் கனிஸ்ட புதல்வன் திருநிறைச்செல்வன்
**கௌரிகாந்தன்**
அவர்களுக்கும்



திரு. திருமதி கனகேந்திரன் தம்பதிகளின் ஏக புதல்வி திருநிறைச்செல்வி
**மைதிலி**
அவர்களுக்கும்

இறைவன் திருவருள் துணைகொண்டு மணமகள் இல்லத்தில் திருமாங்கல்ய தாரணம் செய்யப் பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்பசகிதம் வருகைதந்து மணமக்களை ஆசீர்வதித்து தொடர்ந்து நடைபெறும் விருந்துபசாரத்திலும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இங்ஙனம் தங்கள் நல்வரவை நாடும்

திருமதி முத்துக்குமாரசாமி குடும்பத்தினர்
சோமசுந்தரம் வீதி,
ஆனைக்கோட்டை
யாழ்ப்பாணம்.

திரு. திருமதி கனகேந்திரன் குடும்பத்தினர்,
ஒட்டுவெளி,
மிருசுவில்

(இருவீட்டார் அழைப்பு) (சீ-044)

# மரண அறிவித்தல்



## திருமதி அன்னக்கண்டு ஐயாத்துரை

மாதகல் வேலுப்பிள்ளை கடையடியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி அன்னக்கண்டு ஐயாத்துரை நேற்று (07.02.2015) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற ஐயாத்துரையின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான முருகேசு - சிவக்கொழுந்து தம்பதியரின் அன்பு மகளும், அமரர் திரு.திருமதி வேலுப்பிள்ளையின் அன்பு மருமகளும், குணமணிதேவி, சிவஞானம் (கொழும்பு), சிவநேசன் (ஜொனெக்ஸ் மல்ரி பலஸ்), சிவபாலன் (பொன்னரசி நகையகம்), அமரர் சிவநாதன் மற்றும் சரோஜினிதேவி (நோர்வே), சிவதாசன் (சுவிஸ்), ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்றவர்களான சிவசுப்பிரமணியம், நாகரத்தினம் ஆகியோரின் சிறிய தாயாரும், அமரர்களான குலசேகரம் பிள்ளை, அப்புலிங்கம், நவகோடிலிங்கம் மற்றும் செல்லக்கண்டு ஆகியோரின் அன்புச் சகோதரியும், அமரர்களான சிவானந்தன், விமலாதேவி மற்றும் காங்கேசமூர்த்தி, ஜெயலட்சுமி, தங்கமலர், விஜயகுமாரி, லோகநாதன், விஜிதா ஆகியோரின் அன்பு மாமியும், விமல்ராஜ், மோகன்ராஜ், திருக்குமரன், திருக்கரன், சுந்தர்ராஜ், தனலட்சுமி, மணிவண்ணன், மணிமாறன், சுபதினி, சிவதர்சனா, சிவதர்சிகா, அனேஸ்குமார், தேவகி, தெய்வச்சந்திரன், தேனுகா, சபார்தினி, சாரங்கன், சாருஜன், அனிஷான், விவிதா, அபிஷாலினி, அவிலாஸ் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08.02.2015) ஞாயிற்றுக்கிழமை மு.ப 9 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மாதகல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உற்றார், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

வேலுப்பிள்ளை கடையடி
மாதகல்.
தொ.பே: 0772473938,
0778546303, 0777066427 (9456)

தகவல் :
குடும்பத்தினர்

Study in CHINA
SICHUAN UNIVERSITY
MBBS
Approved by Sri Lankan Medical
GMC- UK, ECFMG-USA , IMED, WHO & UNESCO
* Asia's No 1 Medical / Dental University & 3rd largest in the world
* 33 hospitals in the campus including Asia's biggest hospital building with more than 5,000 beds
ENGINEERING
Civil / Software
100% Guaranteed Employment in USA, Canada UK, Australia & Europe After Study !!!
→ 100% English Medium
→ No IELTS / No Interview
→ No Bank Balance
→ 35% Scholarships Available
→ 100% Visa Success
→ Part time Job Allowed
Free Seminar/ Counseling Mon to Sat 9AM-3PM
(சீ-042)
ICS Study Overseas
107 B 1/1 ,Galle Road, Colombo - 06
77, மணிக்கூட்டு கோபுரவீதி, யாழ்ப்பாணம்
(பெருமாள் கோவில் அருகாமையில்)
021 4926222 , 076 7013060

மாபெரும் புத்தகக் கண்காட்சியும் மலிவு விற்பனையும்
இடம் : யாழ் புத்தகசாலை (மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்) (305, 307, 309 ஞானம்ஸ் ஹோட்டல் அருகாமை)
காலம் : 29.12.2014 முதல் 15.02.2015 வரை
நேரம் : காலை 6.00 மணி முதல் இரவு 8.00 மணி வரை
(ஞாயிற்றுக்கிழமைகளிலும் திறந்திருக்கும்)
Grade 6க்கு உரிய Science வெளிவந்துவிட்டது (2015 New Syllabus),English literature உரிய புத்தகங்கள் வெளிவந்துவிட்டது.
பத்திரிகைகளும் பெற்றுக் கொள்ளலாம்
யாழ். புத்தகசாலை
305, 307, 309 மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.
(C-026) (ஞானம்ஸ் ஹோட்டல் அருகாமை)
தொடர்புகளிற்கு : 077 8349 507, 021 4545 552

Dutch, Deutsch, French

தூதரக பரீட்சைக்கான ஜேர்மன் - Deutsch (டொச்) மற்றும் நெதர்லாந்து - Dutch (டச்) உட்பட அனைத்து புதிய பிரிவுகளும்ஆரம்பமாகின்றது.
* French, Italian , English (A-1 Exam) வகுப்புகளும் நடைபெறுகின்றன.
* வடமாகாணத்தில் அரசாங்க அங்கீகாரம் பெற்று ஜேர்மன் கலாசார நிலையத்தின் அனுசரணையுடன் இயங்கும் ஒரே வெளிநாட்டு மொழிக் கல்வி நிறுவனம் எங்களுடையதே.
* Dutch மற்றும் Deutsch தூதரக பரீட்சைகளில் நீங்கள் சித்தியடைவதை தற்பொழுது நாம் 100% உத்தரவாதப்படுத்துகின்றோம்.
* Audio, Video வசதிகளுடன் குளிரூட்டப்பட்ட வகுப்பறைகள்.
(சீ-043)
Vivekananda Academy
அனைத்து புதிய வகுப்புகளும் திங்கட்கிழமை ஆரம்பமாகும்.
221/1. மின்சார நிலைய வீதி யாழ்ப்பாணம்.
(Gov. Reg.No: W/A 76795)
Tel: 0213216928, 0774842464 ,0212220393

SPEED LANKA EXPRESS Courier
வெளிநாடுகளுக்கான
தபால் பொதி விநியோக சேவை
(சீ-037)

உள்நாட்டு, வெளிநாட்டு துரித தபால் பொதிகள் சேவை
உங்கள் இல்லங்களில் இருந்தவாறே அனுப்பும் வசதி
நிர்ணயிக்கப்பட்ட குறைந்த கட்டணம்
அனுப்பும் பொதிகளுக்கான உத்தரவாதம்
சர்வதேச விமான பயண சீட்டுகளை பெற்றுக்கொள்ளலாம்
Speed Lanka Express (Pvt) Ltd.
135, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே - 0772931062, 0776217926
www.speedlanka.net

### இன்றைய போட்டி

உரும்பிராய் சென்.மைக்கல் விளையாட்டுக் கழகத்தின் ஏற்பாட்டில் அணிக்கு 7 பேர் கொண்ட உதைபந்தாட்ட சுற்றுப்போட்டியின் இறுதிப் போட்டி இன்று மாலை 4 மணியளவில் உரும்பிராய் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இப்போட்டியில் நாவாந்துறை சென்.மேரிஸ் வி.கவை எதிர்த்து ஊரெழு வி.க மோதவுள்ளது. (க)

### இடை...

உறுப்பினர் அஜித் குமாரவே இதன் போது எதிராக வாக்களித்தார்.

நாடாளுமன்ற உறுப்பினர்களான விமல் வீரவன்ச, கீதாஞ்சன குணவர்த்தன, வாசுதேவ நாணயக்கார, தினேஷ் குணவர்த்தன, குணசேகர மற்றும் திஸ்ஸ விதாரண ஆகியோர் வாக்களிப்பில் கலந்து கொள்ளவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-11)

### ஐ.நா...


அழைப்புநேற்று அனுப்பப்பட்டுள்ளதாக அமைச்சு தகவல்கள் தெரிவிக்கின்றன.

எனினும்வருகைக்கான உத்தேச தினம் குறித்து எந்த தகவல்களும் வெளியாகவில்லை. (எ-11)

### பாரா...


நிமல சிறிபால டி சில்வா அல்லது வேறு ஒருவருக்கு வழங்குமாறு ஆலோசனை வழங்க தீர்மானித்துள்ளனர். (எ-11)

## சரவணப் பொய்கையின் நாட்காட்டி வெளியீட்டு விழாவை சிறப்பித்த அனைவருக்கும் நன்றிகள்



அண்மையில் சரவணப் பொய்கை நாட்காட்டி வெளியீடு பூநகரி பிரதேசசபை நூலக மண்டபத்தில் வெகுவிமர்சையாக வெளியிடப்பட்டது. இவ்வெளியீட்டு விழாவிற்கு சகல வழிகளிலும் ஒத்துழைப்பு தந்த அனைவருக்கும் நன்றி கூறுவதுடன் இவ்விழாவிற்கு மண்டப ஏற்பாட்டினை அமைத்து தந்த பூநகரி பிரதேச சபையினருக்கும் மற்றும் இவ்விழாவில் கலந்து சிறப்பித்த அனைவருக்கும் சரவணப் பொய்கை மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறது.

(சீ-048)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 08.02.2015 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.